கலை
இலக்கிய
மாத
சஞ்சிகை

180

புரட்டாதி 2022

100/-

# ஜீவநதி

பிரதம ஆசிரியர் : க.பரணீதரன்



பேராசிரியர் சபா ஜெயராசா
இன்பமகன்
கார்த்திகா கணேசர்
அ. யேசுராசா
கோகிலா மகேந்திரன்
முல்லைக் கோணேஸ்
ஏ.எஸ்.சற்குணராஜா
சிவ.ஆரூரன்
ஏ.பீர். முகம்மதது
மா.சிவசோதி
ருஸ்னா நவாஸ்
எஸ்.நிலவிந்தன்
சி.ஜெய்சங்கர்
பத்மபிரஷன்
த.ஜெயசீலன்
இப்னு அஸூமத்
மதுராந்தகன்
கொற்றை பி.கிருஷ்ணானந்தன்
ஷெல்லிதாசன்
கந்தர்மடம் அ. அஜந்தன்
கனிவுமதி

கலை இலக்கிய மாத சஞ்சிகை
2022 - புரட்டாதி

# பொருளடக்கம்



சிறுகதைகள்
முல்லைக்கோணேஸ் - 06
ஏ.எஸ்.சற்குணராஜா - 13
சிவ. ஆரூரன் - 21
ஏ.பீர்.முகம்மது - 27
மா.சிவசோதி - 33

கவிதைகள்
ருஸ்னா நவாஸ் - 05
என்.நிலவிந்தன் - 12
சி.ஜெய்சங்கர் - 20
பத்மபிரஷன் - 32
த.ஜெயசீலன் - 36
இப்னு அஸுமத் - 37
மதுராந்தகன் - 39




கதை இல்லாக்கதைகள்
கொற்றை பி.கிருஷ்ணானந்தன் - 38

குறுங்கதை
ஷெல்லிதாசன் - 40

உள் ஓவியங்கள்
கனிவுமதி

அட்டைப்படம்
கந்தர்மடம் அ.அஜந்தன்

கட்டுரைகள்

**விளையாட்டு அழகியல்**
**தமிழ் சூழலில் அதிக நோக்குதல் அற்ற துறை**
பேராசிரியர் சபா ஜெயராசா - 03



**ஷோபா சக்தியின் “இச்சா”,** T.D. **இராமகிருஷ்ணனின்**
**“சுகந்தி என்கிற ஆண்டாள் தேவநாயகி”**
**ஆகிய நாவல்களின் உள்ளடக்கம் எழுப்புகின்ற கேள்விகள்**
இன்பமகன் - 08



**நாடகத் துறையும் அரசியல் தலைவர்களும்**
நாட்டிய கலாநிதி கார்த்திகா கணேசர் - 18

**ஜெய்பீம் தோழர்**
அ.யேசுராசா - 23

**குடும்பம் என்றொரு கோயிலிலே...** - 8
கோகிலா மகேந்திரன் -29

# ஜீவநதி

**2022 புரட்டாதி இதழ் – 180**

**பிரதம ஆசிரியர்**
க.பரணீதரன்

**துணை ஆசிரியர்கள்**
வெற்றிவேல் துஷ்யந்தன்
ப.விஷ்ணுவர்த்தினி

**பதிப்பாசிரியர்**
கலாநிதி த.கலாமணி

**தொடர்புகளுக்கு :**
கலை அகம்
சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் வீதி
அல்வாய் வடமேற்கு
அல்வாய்
இலங்கை.

**ஆலோசகர் குழு:**
திரு.கி.நடராஜா

**தொலைபேசி** : 0775991949
0212262225

**E-mail** : jeevanathy@yahoo.com

**வங்கித் தொடர்புகள்**
K.Bharaneetharan
Commercial Bank, Nelliady
A/C - 8108021808 - CCEYLKLY


இச்சஞ்சிகையில் இடம்பெறும் அனைத்து ஆக்கங்களின் கருத்துக்களுக்கும் அவற்றை எழுதிய ஆசிரியர்களே பொறுப்புடையவர்கள்.


## ஜீவநதி சந்தா விபரம்

தனிப்பிரதி – 100/= ஆண்டுச்சந்தா – 3000/=
வெளிநாடு – $ 100U.S
மணியோடரை
அல்வாய் தபால் நிலையத்தில்
மாற்றக்கூடியதாக அனுப்பி வைக்கவும்.
அனுப்ப வேண்டிய பெயர்/முகவரி
**K .Bharaneetharan,**
**Kalaiaham ,**
**Alvai North west, Alvai.**
வங்கி மூலம் சந்தா செலுத்த விரும்புவோர்
K.Bharaneetharan Commercial Bank - Nelliady Branch
A/C No.- 8108021808 CCEYLKLY



# ஜீவநதி

**(கலை இலக்கிய மாத சஞ்சிகை)**


அறிஞர் தம் இதய ஓடை
ஆழ நீர் தன்னை மொண்டு
செறி தரும் மக்கள் எண்ணம்
செழித்திட ஊற்றி ஊற்றி...
புதியதோர் உலகம் செய்வோம்.!
– பாரதிதாசன்–

## போதைப் பொருட் பாவனையும் பாடசாலை மாணவர்களும்

இன்று எமது நாட்டில் பாடசாலை மாணவர்களிடையே போதைப் பொருட் பாவனை அதிகரித்திருப்பதாக அண்மைக்காலப் பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன. இதனை வெறும் செய்தியாகப் படித்துவிட்டுப் போய் விட முடியுமா? இன்று எமது பிள்ளைகளின் எதிர்காலமே கேள்விக் குறியாகியுள்ள நிலையில், போதைப் பொருட்பாவனை எமது பிள்ளைகளின் வாழ்க்கையையே சூறையாடிவிடும் என்ற உண்மையை பெற்றோராகிய நாம் எப்போது உணர்ந்து கொள்ளப் போகிறோம்?

கட்டிளமைப் பருவத்தை “புயலும் நெருக்கீடும் நிறைந்த பருவம் என உளவியலாளர் கூறுவர். இப்பருவத்தில் ஹீரோத்தனம், எதிர்ப்பாற் கவர்ச்சி, பிறருக்குக் கட்டுப்படாமை போன்ற பண்புகளை பிள்ளைகள் கொண்டிருப்பார்களெனினும், பிள்ளைகள் தறிகொட்டுச் செல்லாமல் பார்த்துக் கொள்வது பெற்றோர் கடமையாகும். இப்பருவத்துப் பிள்ளைகளிடம் பரிவு, பாசம் என்பவற்றைக் காட்டுவதோடு அவர்கள் குடும்பத்தில் வேண்டப்படு பவர்கள் என்ற கணிப்பை வழங்கி, குடும்ப விவகாரங்களில் அவர்களிடமும் கலந்து பேசி முடிவுகளை எடுக்க வேண்டியது பெற்றோர் கடமையாகும். தமது பிள்ளைகளின் நடவடிக்கைகளைக் கண்காணித்து, தவறான வழியிற் செல்லாமலும் தவறான பழக்கவழக்கங்களுக்கு ஆளாகாமலும் முளை யிலேயே தீய பழக்கங்களைக் களைய வேண்டியதும் பெற்றோர் கடமையே.

பாடசாலைகள் இவ்விடயத்தில் கூடிய கவனம் எடுக்க வேண்டும். “எமக்கென்ன?” என்று நினைக்காமல் அதிபரும் ஆசிரியர்களும் பிள்ளைகளுடன் நல்ல தொடர்புகளை ஏற்படுத்தி, அவர்களைக் கண்காணித்து அவர்கள் தொடர்பாக பெற்றோருடனும் தொடர்புகளைப் பேண வேண்டும். பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர் ஆகியோரோடு சமூக நிறுவனங்களும் தீவிரமாக முற்காப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இவ்விடயத்தில் நாம் தவறுவோமானால் பாதீனியத்தின் பரவலைவிட மோசமான விளைவுகளை நாம் சந்திக்க நேரிடும்.

– க.பரணீதரன்


ஆண்டுக்கு 24 ஜீவநதி இதழ்கள் வெளியாகவுள்ளதால்
ஓராண்டுக்கான சந்தா 24 இதழ்கள் - 3000.00(12 சிறப்பிதழ்கள்)
அரையாண்டு சந்தா 12 இதழ்கள் - 1500.00( 6 சிறப்பிதழ்கள்)



**ஜீவநதி கிடைக்கும் இடங்கள்/ விற்பனையில் உதவுவோர்**

1. புத்தகக்கூடம் - திருநெல்வேலி
2. பூபாலசிங்கம் புத்தகசாலை - யாழ்ப்பாணம், கொழும்பு செட்டித்தெரு
3. பரணி புத்தகக் கூடம் - நெல்லியடி
5. பண்டாரவன்னியன் புத்தகசாலை - வவுனியா
4. அ.யேசுராசா
5. புத்தகப்பண்பாடு
6. மு.யாழவன்- திருகோணமலை,
7. கந்தர்மடம் அ.அஜந்தன்
8. சி.ரமேஷ்
9. நா.நவராஜ்

ஆடலாலும் மேடை நடிப்பாலும் எட்டப்பட முடியாத உடல் மொழி உச்சங்களை விளையாட்டுக்கள் எட்டிவிடுகின்றன. உடல் மொழி இயம்பலின் உச்சங் களால் அழகியல் எல்லைகளுக்குள் விளையாட்டுக்கள் வந்து விடுகின்றன.

ஆற்றுகையையும் பலே ஆடலையும் பனிச்சறுக்கு ஆற்றுகையையும் ஒப்பியல் நோக்கில் ஆராய்வோர் இரண்டினுக்குமிடையேயுள்ள ஒப்புமை களையும் அழகியல் உட்பொதிவுகளையும் குறிப்பிடு கின்றனர்.

அழகின் இயல்பை ஆராய்தலும், ஆடல், அரங்கு, ஓவியம், சிற்பம், திரைப்படம், இலக்கியம், விளையாட்டுக்கலை, முதலாம் கலைப்படைப்புக்களின் அழகைச்சுவைத்தலும், அவற்றுடன் இணைந்த மன வெழுச்சிகளுடன் உறவாடுதலும், அவை தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்ளலும், அழகியலில் நோக்கப்படுகின்றன.

முதலில் அழகியலை மெய்யியலுடன் இணைந்த ஒரு கூறாகக்கருதினர். அண்மைக்கால அறிவு வளர்ச்சியில் கல்வியில், உளவியல், சமூகவியல், மானிடவியல் முதலாம் துறைகளோடு இணைந்ததாக அழகியல் ஆய்வு விரிவாக்கம் பெற்றுள்ளது.

பிளேட்டோ, அரிஸ்ரோட்டில், ரூசோ, இமானுவேல் கான், ஜோன்டுயி, குரோசி, டேவிட் கியூம், இரவீந்திரநாத் தாகூர், கலாயோகி ஆனந்த குமாரசாமி, தியோடர் அடோர்னா முதலானோர் அழகியல் தொடர் பான ஆய்வுகளை முன்வைத்தனராயினும், அவர்களது நோக்கு மரபு வழியான கலைகளை அடியொற்றியதா கவே அமைந்தது. அவர்களுள் அடோர்னா வேறு பட்டவர்.

பிளேட்டோ உடல் எழுகலையை (GYMNASTICS) முக்கியப்படுத்தியவேளை விளையாட்டை முற்றுமுழு தாக அழகியலில் உட்படுத்தி விதந்து நோக்கவில்லை. பின்வந்த ஆய்வாளர்களும் விளையாட்டின் அழகியல் நிலையை ஆழ்ந்து நோக்கவில்லை. மார்க்சியம், பின் நவீனத்தும் ஆகிய கருத்தியல் நீட்சிகளைத் தொடர்ந்தே விளையாட்டு என்பது அழகியல் ஆய்வுப் பொருளாயிற்று.

கிரேக்கர் கல்வியில் உடல் எழுகலை முக்கியத் துவம் பெற்றிருந்தாலும், இசை மற்றும் நாடகத்தின் மீது அழகேற்றத்தைக் கண்டவேளை, விளையாட்டுக்களில் முக்கியத்துவத்தைக் காணவில்லை. மனவெழுச்சி களுக்கு பயிற்சிகொடுக்கும் ஆற்றலை விளையாட்டுக் கள் கொண்டிருந்தாலும், துன்பியல் நாடகங்களை அடிப்படையாகக் கொண்டே மனவெழுச்சிப்புடமிடலை (கர்தாசிஸ்) கிரேக்கர் விளக்கினர்.

# விளையாட்டு அழகியல்
# தமிழ் சூழலில் அதிக நோக்குதல் அற்ற துறை

பேராசிரியர் சபா.ஜெயராசா



சமூக வர்க்க சார்பு என்பது விளையாட்டுக் களிலும் நீடித்திருந்தது. பெரும் பாலான விளையாட்டுக் கள் சமூகத்தின் விளிம்பு நிலையினரிடத்தே நிலை பெற்றிருந்தன. அதிக உடல் வலுவை வெளியிடும் விளையாட்டுக்களிலும் உழைக்கும் மக்களே ஈடுபட்டி ருந்தனர்.

அதேவேளை அழகியற் கோட்பாடுகளை வடி வமைத்தவர்கள் சமூகத்தில் மேலோங்கிய எழுகுழாத்தி னராக இருந்தனர். அந்நிலையில் விளையாட்டின் முக்கியத்துவம் மீது அவர்களால் கவனம் செலுத்த முடியாமற் போய்விட்டது.

விளையாட்டுக்களின் வரலாறு மிகவும் தொன்மையானது. தொல் மனிதர் நெருப்பை உண்டாக்கிய செயல் முறை விளையாட்டுடன் தொடர்பு பட்டிருந்ததாகக் குறிப்பிடப்படுகின்றது. வேட்டையாடல் வாழ்க்கைக்குரிய உபயோகப் பொருட்களின் கண்டு பிடிப்பு, ஆயுதங்களின் பயன்பாடு, ஆகியவை ஏதோ ஒரு விதத்தில் உடல் வலுவைச் செறிவுடன் பயன்படுத்தும் செயற்பாடுகளுடன் தொடர்புபட்டிருந்தன. "விளை யாட்டல்லா விளையாட்டு" என்ற நிலைகளில் அவை நிகழ்த்தப்பட்டன.

சமூகத்தில் இடம் பெற்ற இயங்குநிலை சார்ந்த தொழிற் பிரிவின் வளர்ச்சியோடு, விளையாட்டு வாழ்க்கைத் தொழிற்பாடுகளில் இருந்து பிரிந்த தனித்துறையாயிற்று.

அதேவேளை, விளையாட்டுக்கள் சார்ந்த உடலசைவுகளை ஆடல், நாடகம், சிற்பம், ஓவியம் முதலாம் கலைகளிலே பயன்படுத்தும் செயற்பாடுகள் கலை வரலாற்றில் இடம் பெறத் தொடங்கின.

சடங்குகளில் இருந்து விளையாட்டுக்கள் தோற்றம் பெற்றதாக சில ஆய்வாளர் குறிப்பிடுகின்றனர் (CUULIN, *1907*) விளையாட்டை "சடங்குசாரா விளை யாட்டு" என்று குறிப்பிடுவோரும் உளர் (LAWRENCE, *1982*). அமெரிக்கா காற்பந்தாட்டம் ஒரு சடங்கு என்று குறிப்பிடப்படுதல் அண்மைக்கால நிலைவரமாகின்றது.

சடங்கும், விளையாட்டும் ஒழுங்குபடுத்தப்பட்ட நடத்தையைக் கொண்டுள்ளன. நடத்தையின் ஒழுங் கமைப்பிலிருந்து அழகுணர்வும் மேலெழும். சடங்குக்கு உட்படுத்தப்பட்டவர் அதனோடு உற்றிணைவது போல், அதனைப் பார்ப்பவரும் உற்றிணைவு கொள்கின்றனர். அதே நிலைவரம் விளையாட்டுக்கும் பொருந்தும்.

சடங்கும், விளையாட்டும் பண்பாட்டுச் சுவை யேற்றம் கொண்டவை. பண்பாட்டுச் சுவையேற்றம் என்பது அழகை உருவாக்கும் அலகுகளில் ஒன்று. இனக்குழும இசை (Ethno Music) மற்றும் இனக்குழும ஆடல் போன்று இனக்குழும விளையாட்டுக்களும் அடையாளப்படுத்தப்படுகின்றன. அவற்றிலும் அழகியல் உட்பொதிவு கண்டறியப்பட்டுள்ளது.

அம்மானை, பூப்பந்தாடல் ஊசல், நீர்விளை யாட்டு, ஏறுதழுவல், முதலியவை தமிழர்களின் தொன்மையான விளையாட்டுக்கள், அவை இலக்கி யங்களில் எடுத்தாளப்பட்டமை, செய்தியாக மட்டுன்றி, கலைப் பெறுமானத்துடன் இணைந்த அழகியலையும் குறித்துரைக்கின்றன.

அழகியலும் இறையியலும் கலந்த நிலையில் அம்மானை விளையாட்டை மணிவாசகர் இறை வனுடன் தொடர்புபடுத்திக் காட்டுகின்றார். "பற்றியே பேரானந்தம் பாடுதுங்காண் அம்மானாய்" என்பது அவரின் அடிகள்.

விளையாட்டு அழகியல் கவிதை அழகியலுடன் ஒப்பு நோக்கப்படுகின்றது. கவிதை என்பது மொழிச் சிக்கனத்தின் வடிவம். விளையாட்டிலும் தேவையற்ற உடல் மொழி தவிர்க்கப்பட்டு இலக்கு நோக்கி உடல் மொழி தூண்டிவிடப்படுகின்றது.

கவிதை மனவெழுச்சி கலந்த படிமங்களை உருவாக்கி அறிகைக் கட்டமைப்பில் நிலைத்த பதிவுகளை (நெடுங்கால நினைவுப்பதிவு) ஏற்படுத்தி விடுகின்றது. அதே செயற்பாட்டை விளையாட்டும் ஏற்படுத்தி விடும் ஆற்றலுடையது.

அத்தகைய ஒரு நிலை, "அழியா அழகு" எனப்படும். அழகுப் பொருள் ஒன்று என்றும் மகிழ்நிலை தருவதாகும்" என்று ஜோன்கீட்ஸ் ஒரு சமயம் குறிப் பிட்டார். மகிழ்நிலையும் இன்பமும் தொடர்ச்சியாகக் கிடைக்கப் பெறும் என்பது அதன் விரிந்த பொருளாகும். அது மங்கி விடுவதில்லை நலிவு பெறுதலும் இல்லை.

விளையாட்டு "அசையும் அரங்கு" என்று குறிப்பிடப்படும். அதேவேளை நிலைத்து நிறுவல் செய்யும் விளையாட்டுக்களும் உள்ளன. அதற்கு எடுத்துக்காட்டாக மனிதக் கோபுர அமைப்பைக் குறிப்பிடலாம்.

மனிதக் கோபுரம் அமைத்தல் கற்றலோனியா வில் வெலின்சியன் மக்களால் முதலில் மேற்கொள்ளப் பட்டது. பதினெட்டாம் நூற்றாண்டளவில் அது மேற்கொள்ளப்பட்டது. மனிதர் தோள்மீது மனிதர் ஏறி அழகுடன் இணைந்த கோபுரத்தை உருவாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

அதன் அழகியற் பெறுமானத்தை உற்றறிந்த யுனெஸ்கோ "மானிடத்தின் உன்னதமான தொடுகை யிலான (INTANGIBLE) மரபு வழிக்கலைச் செல்வமென அடையாளப்படுத்தியுள்ளது.

இந்திய மரபில் உறியடி விளையாட்டிலும், மனிதக் கோபுரம் அமைக்கும் செயற்பாடுகாணப்படு கிறது. உயரத்தில் கட்டப்பட்டுள்ள தயிர்பானையை மனிதக் கோபுரம் அமைத்து உடைத்து மகிழல், கண்ணன் பிறந்த நாளிலே கொண்டாடப்படுகிறது.

அந்த விளையாட்டு தமிழர்களிடமும் காணப்படுகின்றது. அது, "தோளெடுப்புச் சிற்பம்" என்று தமிழ் மரபிலே குறிப்பிடப்படும். நாட்டார் வழிபாட்டுக் கோயில்களில் அது இடம் பெறும்.

விளையாட்டுக்களின் அழகியல் பற்றறி விளக்குகையில் அசையும் விளையாட்டுக்கள், அசை யும் அரங்குக்கு ஒப்பானவையாய் குறிப்பிடப்படுகின்றது. தெருக்கூத்து அசையும் அரங்காகும். விளையாட்டு வீரர்களின் கள அசைவுகள் விதிமுறைக்கு ஏற்றவாறு நேரக்கணிப்புக்கும், விளையாட்டுக் கணிதத்துக்கும், மனவெழுச்சி வீச்சுக்கும் கட்டுப்பட்ட நிலையில் அழகு

வெளிப்பாடு கொள்ளும். நெருக்கூத்தில் தாளக்கட்டுக் கோப்புக்கும், கதை நிகழ்த்துகைக்கும் ஏற்றவாறு அசைவும், காலெடுப்பும் நிகழும் அவற்றின் வழியாக அழகு முகையவிழ்க்கும்.

விளையாட்டு அழகியல் பற்றி விபரிக்கும் பொழுது பின் நவீனத்துவம் முன்வைக்கும் நூலிய இடைத்தொடர்பு (INTERTEXTUALITY) என்ற கருத்து வடிவத்தையும் தொடர்புபடுத்தி நோக்க வேண்டி யுள்ளது. ஒரு நூல், பிறிதொரு நூலுடன் தொடர்புபட்டு நிற்பதும், ஒரு கலை நூட்டம் பிறிதொரு கலையில் எடுத்தாளப்படுதலும் நூலிய இடைத் தொடர்பைப் புலப்படுத்தும்.

விளையாட்டு உடலசைவுகள், ஆடல்களிலே பயன்படுத்தப்படுகின்றன. நாடகத்தில் விளையாட்டு இசைவுகள் எடுத்தாளப்படுகின்றன. ஓவியக் கலையில் விளையாட்டு அசைவுகள் கோடுகளாய், வண்ணங் களாய், தூரிகை இயம்பலாய்க் காட்டப்படுகின்றன. நிழற்படக்கலையில் விளையாட்டு அசைவுகள் தரித்த (STILL) நிலையில் சலனக் கோலத்தைப் பதிவு செய்யப் படுகின்றன. அவை நூலிய இடைத்தொடர்பு மட்டுமன்றி கலைப்பகிர்வும் அழகியற் பகிர்வுமாகின்றன. நூலிய இடைத் தொடர்பு என்பது அழகியல் இடைத் தொடர்பாகவும் மேற்கிளம்புகின்றது.

பின் நவீனத்தும், விளையாட்டுக்களிலும் கட்டுக்குலைப்பை (DECONSTRUCTION) முன்வைக்கின்றது. மனித உடல் மொழியால் விளையாட்டு உருவாக்கப் படுகின்றது. பல்வேறு விதமான பொருள் கோடல் களுக்கு உடல் மொழி வாய்ப்பை ஏற்படுத்துகின்றது.

அழகியல் தொடர்பான பெருங்கோட்பாடு களைப் பின் நவீனத்துவம் ஏற்றுக்கொள்ளவில்லை. அவை பெருங்கதையாடல்களாக (META NARRITIVES) அமைவதாக அக்கோட்பாடு விரித்துரைக்கின்றது. மேலும் அழகுக்கும் அழகின்மைக்குமிடையே திட்ட வட்டமான பிரிகோடு அமைப்பதையும் பின் நவீனத்துவம் ஏற்றுக்கொள்ளவில்லை. அதாவது, எவற்றையும், அழகு - அழகின்மை, நல்லது - கெட்டது, என்றவாறு இருமை நிலையில், வெள்ளை - கருமை என்றவாறு பார்ப்பது அதனால் நிராகரிக்கப்படுகின்றது.

நவமார்க்சியம் விளையாட்டை வர்க்க நோக்கில் ஆராய்கின்றது விளையாட்டும், விளையாட்டு வீரர்களும் விற்பனைப்பண்டங்களாக்கப்படுகின்றனர். ஏலத்தில் விற்கப்படுகின்றனர். முதலாளியம் ஒழிக்கப் படும் பொழுது தான், அந்த அவல நிலை மாற்றி யமைக்கப்படும்.

சுரண்டலில் இருந்து விடுக்கப் படும் பொழுது தான், விளையாட்டும் நிகழ்த்துகை செய்வோரும், கலைஞரும் நிறைவான வளர்ச்சியை அடைவர் என்பது மார்க்சியத்தின் நீட்சி. மூன்றாம் உலக நாடுகளில் விளையாட்டை இன மேலாதிக்கம் ஒடுக்கும் நிலை உண்டு. சிறு பான்மைத் தேசிய இனங்களைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் புறக்கணிப்பு உள்ளாகும் நிலை காணப்படுகின்றது.

# நிலவென நான்

நிலவென
தனித்து விடப்படுகிறேன்.
பாலை நிலமென வான்
மாறுகிறது

உலகம் உறக்கத்தில்
மூழ்கிறது
விழித்துக் கொள்கிறது
என் பெண்மையின்
துயரங்கள்

மணி மணியாக
சேர்த்து வைத்த என் நம்பிக்கை
முத்துக்களை சிதறவிட்டவர்களே...
வாழ்க!

உமக்கும் எமக்குமிடையேயான
ஆதிப்போர் இன்னும்
முற்றுப் பெறவில்லை

ஆதிக்கம் நிறைந்த உம்
குரலின் ஒலியில் ஒடுங்கும்
நாயல்ல நான்

ஆதிக்கத்துடன் நீங்கள்
இருந்த போதும்
உங்கள் தலைகளை உயர்த்திப்
பார்க்க செய்யும் நிலவு நான்

ஒளிரும் என் குடுவைகளில்
ஏன் இருள் நிரப்புகின்றீர்?
ஏளனப் புன்னகை வீசும் தருக்களையே
ஏன் துணைக்கு அனுப்புகின்றீர்?

பனியெனப் பெய்யும்
என் விழி நீரில் ஏன்
குளிர்கின்றீர்கள்?
சுடரென சுடும் உம்
வார்த்தைகளில் நான்
அழிகின்றேன்

நிலவென ஒளிர்வதே
என் குற்றம் என்கின்றீர்
நிலவென கரைவதே
என் விதி என்கின்றேன்.

நம்பிக்கையில் நிலவாய்
உதிக்கின்றேன்
உங்கள் வஞ்சகத்தால்
உடைந்து உடைந்து
இருளாய் மறைகின்றேன்.

- ருஸ்னா நவாஸ் (மாவனல்லை)



# மூன்று கணபதிகளின் கதை

முல்லைக் கேணேஸ்

**கணபதி 1**

*கருவாட்டு நாற்றம் கணபதி 1 க்கு குடலைப் பிடுங்கியது. எப்படா இந்தத் தோணிய விட்டுக் குதிக்கலாமென்று யோசித்துக் கொண்டிருக்கும் போதே தொபீர் என்று கடலுக்குள் ஆரோ கல்லத்தூக்கிப் போட்ட மாதிரி ஒரு சத்தம். எட்டிப் பார்த்தார், கணபதி 2 தாவித்தாவி நீந்துறேர். “அடப்பாவி எங்களுக்கொரு கத சொல்லாமல் தப்பீட்டானே” என்று எட்டிப்பார்த்த கணபதி 1 ஐத் தள்ளி விட்டுவிழுந்தார் கணபதி 3. இப்ப ரெண்டு கணபதியும் கடலுக்க தோணியில மிஞ்சினான் கணபதி 1.*

*கணபதியள் ரெண்டு பேரும் குதிச்ச சத்தத்தில விழிப்பு வந்தது பறங்கிக்கு மூண்டு பேற்ற விலையும் எக்கச்சக்கம். நாடு கொண்டு போய்ச் சேத்தா மூண்டு தலமுறைக்குக் காலாட்டிக் கொண்டு சாப்பிடக் காணும் விக்கிற காசு. மூண்டாவதயாவது தப்பவிடக் கூடாதெண்டு கட்டிப்பிடிக்க எத்தணிக்கையில் “தப்பிச்சிடுடா சாமீ” எண்டு கத்தியவாறே எஞ்சிய கணபதியும் விழுந்தார் கடலுக்க. குதிச்ச குதியில மூக்கெல்லாம் கடல் தண்ணி. தும்பிக்கையால உள்ள போய் நுரையீரல்ல கரிக்குது உப்பு. நீந்த முடியேல்ல. இந்த வண்டிய வைச்சுக்கொண்டு ரெண்டு நாசறுவாங்களும் எப்பிடித்தான் நீந்தினாங்களோ இந்தக் கடலுக்க. தாழுறதும் தாவுறதும். நல்லவேள நாலு கை இருந்ததால நீச்சல் கொஞ்சம் சுகமாப் போச்சுது கணபதிக்கு.*

*தண்ணிக்கு மேல தலயத் தூக்கி எட்டி எட்டிப் பாக்கிறேர் மற்ற ரெண்டு பேரேம். “கூய்” கண்ணுக்கெட்டின தூரத்துக்கு அம்புடேல்ல. அடிக்கிற அலையில மூச்சு முட்டுது. வண்டியும் விடுதில்ல சாமிக்கு. கண்ணுக் கெட்டின தூரத்துக்குக் கரையும் தெரியுதில்ல. வாழ்வா சாவா எண்டிற போராட்டம். வாறது வரட்டும் என்று அடிக்கிற அலையில குப்புறக் கிடந்தேர். சாவு தான்.... பறங்கீன்ர கருவாட்டு நாத்தத்தோட இருந்திருக்கலாமோ என நினைத்தார். மயக்கம் வருவது போலிருந்தது. தலை சுற்றி அசைவற்றுக்கிடந்தார் அலையில்.*

*விழித்துப்பார்த்தார், கரையில் முகமெல்லாம் மண் அப்பக் கிடந்தார். பக்கத்தில் கரையொதுங்கிய செருப்பு சப்பாத்துசாராய வெற்றுப் போத்தல் சிறு சிறு மூங்கில் தடிகள் பிளாஸ்ரிக் துண்டுகள் சிப்பிகள். புற்று நண்டொன்று புற்றுக்குப் போவதும் வெளியில் வந்து எட்டிப் பார்ப்பதுமாய் கூத்துக் காட்டியது.*

*உப்பு தண்ணீர் குடித்துக் குடித்து வயிறு இன்னும் பருத்து விட்டது போலிருந்தது. வானத்தை அண்ணாந்து பார்த்தவாறு வயிற்றைத் தடவிக் கொண்டார். பசியும் தாகமும் வாட்டியது. கையை விட்டு மண்ணில் அளைந் தார். ஏதாவது தட்டுப்படுகிறதா என்று. ஏதேதோ உருண்டைகளும்*

தடிகளும் சிப்பிகளும் தான் ஆப்பிட்டன. மோதகத்தை நினைத்தும் பார்த்தார். நாவில் எச்சிலூறியது. வெயில் வெக்கை தாங்க முடியவில்லை. எங்காவது மர நிழல் தென்படுகிறதா என நிமிர்ந்து பார்த்தார். தூரத்தில் நாவல் மரங்கள் காண்டைப் பற்றைகள் ஈச்சம் பற்றைகள் தென்பட்டன. எழும்பிப் பார்த்தார் நடக்க முடிய வில்லை. கால்கள் தளர்ந்தன. சுடு மணலில் தவழ்ந்தார். முழங்கால்கள் சிராய்ப்புக் கண்டு எரிந்தன. தொந்தியும் மணலில் உரசியவாறே வந்தது. ஒருவாறு நாவல் மர நிழலுக்கு தவழ்ந்தே வந்து சேர்ந்தார்.

நல்ல குளிர்ந்த நிழல். மரத்திலிருந்த பறவைகள் கனவு கண்டு எழும்பிப் பறந்தன. நெஞ்சில் கை வைத்துப் படுத்தபோது நல்ல உறக்கம் வந்தது. அப்படியே அயர்ந்து தூங்கினார்.

சற்று நேரத்தில் ஏதோ அரவம் கண்டு விழித்துப் பார்த்த போது தனது கண்ணையே அவரால் நம்ப முடியாமலிருந்தது. நாவல் கிளைகளில் தலை முட்ட நின்று கொண்டிருந்தான் பறங்கி. தான் காண்பது கனவோ என நினைக்க முன்னர் வாளை உருவி ஆத்திரம் தீர விட்டான் ஒரு வெட்டு. பாவம் கணபதியின் தலை துண்டானது. கடலுக்கு வந்த மீனவர்கள் தலை துண்டிக்கப்பட்ட கணபதியை தூக்கி குமிழமுனைக்குக் கொண்டு சென்று தண்ணிமுறிப்புக்குச் செல்லும் வழியில் வைத்து விட்டுச் சென்றார்கள்.

அது கொட்டுக் கிணற்றடிப் பிள்ளையார்.

**கணபதி 2**

பறங்கியின் ஆத்திரம் கொஞ்சம் இறங்கி யிருந்தது. மற்ற ரெண்டு பேரேம் தேடலானான். அவனது கற்பனைகள் எல்லாம் சிதறிப் போனதில் வெகுவாக சினம் கொண்டிருந்தான். மூண்டு பேரேம் தங்கட நாட்டுக்குக் கொண்டு போய் ஏலம் விட்டால் கோடிக் கணக்கில் கொட்டும் என நினைத்தவனுக்குப் பெரும் ஏமாற்றம் தான் மிஞ்சியது. தப்பிக்கவிடக் கூடாது. எப்பிடியாவது மற்ற ரெண்டு பேரையும் தேடிப் பிடிப் பதிலேயே குறி கொண்டலைந்தான். வாளில் சொட்டிய ரத்தத்தைக் கடல் நீரிலேயே கழுவி உறையிலிட்டான். இவன் தரை வழியே நடந்து செல்ல தோணி கடல் வழியாகத் தொடர்ந்தது.

கணபதி 2 க்கு மூச்சு வாங்கியது. பாவம் அவரும் பசி தாங்காது துவண்டுதான் போனார். பஞ்சாமிர்தமும் பாலும் ஊற்ற யாரும் வர மாட்டார்களா என்றொரு நப்பாசை அவர் மனசில் எழுந்தது. தனக்கு நேர்ந்த கதியை நினைக்க நினைக்க அழுகை பொத்துக் கொண்டு வந்தது. பாழாய்ப்போன பறங்கிப் பயல் தன்ர லாபத்துக்கு என்னக் காவு குடுக்கப் பாத்தான்.... அவன் மட்டும் என்ர கையில கிடைச்சால் தும்பிக்கையாலயே அடிச்சுக் கொல்லுவன்" என்று வீராப்பும் வேற தனக்குள் பேசிக் கொண்டார்.

சாப்பிட ஏதும் ஆப்பிடுமோ என்று சுத்து முத்தும் பார்த்தார். மரம் செடி கொடிகளைத் தவிர ஒண்டுமில்ல. மரங்களில ஒரு காய் பிஞ்சுகூடக் காணேல்ல. கடல் தண்ணியக் குடிச்சதிலேயே வயிறு குமட்டல் எடுத்தது. வாந்தி வரும் போல வயிற்றில் ஒரு எக்கல். பக்கத்தில ஆப்பிட்ட இலையில ரெண்டட உருவி சப்பிக் கொண்டேர். எங்க போறது வாறதென்று எண்ணும் போது கணபதி 2 இன் கண்ணில் பட்டான் பறங்கி. ஒளிப்பதற்கு ஏதுவான இடமில்லை. அவனோட மல்லுக்கட்ட உடம்பில தெம்புமில்ல. ஓட வேண்டியது தான். எழும்பி ஓட வெளிக்கிட்டேர். கால்கள் சக்தியற்று நடுங்கியது. ஓட ஓட அதே இடத்தில் நிற்பது போலவேயிருந்தது. கண்டு விட்டான் பறங்கி. அவன்ர உயரத்துக்கு நாலெட்டு வைச்சால் இவரப் புடிக்க கனநேரமில்ல. உறையில இருந்த வாள உருவிக்கொண்டு வாறான் எமன். வந்த வேகத்தில வாள ஓங்கி கழுத்துக்கு குறி வைச்சு இறக்கினான் பறங்கி. நாலு கையில ஒண்டு தடுத்தது. தடுத்த கை அடுத்த கணம் நிலத்தில குருதிபாயுது. ஆறுமாதிரி குருதியைக் கண்ட கணபதி 2 தலை சுற்றி சரிந்தார் நிலத்தில்.

சற்று நேரத்தால் விழித்த போது சிறுகடல் நீரேரிக் கரையில இருக்கிற மரத்தடி நிழலில் யாரோ காவிக் கொண்டு போய்க் கிடத்தியிருந்தார்கள்.

அது கோட்டைக் கேணிப் பிள்ளையார்.

**கணபதி 3**

கணபதி 3 க்கு மற்ற ரெண்டு பேரேம் பிரிஞ்ச கவலை நெஞ்சைப் பிழிந்தெடுத்தது. திக்குத் தெரியாத காட்டில் தள்ளி விட்டது போல இருந்தது அவருக்கு. கடல் மணல் தாண்டி காடு தொடங்கும் இடத்தில் மான்களும் மயில்களும் சுதந்திரமாய் நடமாடின. மனிச சாதி நடமாட்டமில்ல. எங்க போவது வருவது என்ற குழப்பம் கணபதி 3 ஐ அலைக்கழித்தது. பசியும் தாகமும் மிகுதியாய் இருந்தது.

குடி தண்ணிக்குக் கூட ஒரு குளம் குட்டை யில்லை. நாவரண்டு மிரள மிரளப் பார்த்தார். எங்காவது சன நடமாட்டம் தென்படுகிறதா என நோட்டமிட்டார் எந்தச் சலனமும் இல்லை.

இலந்தைப் பற்றைகளும் மருத மரங்களும் நிறைந்ததான வயல் வெளி. மெல்ல நடந்து நிழல் தேடிப் போனார். பசியும் களைப்பும் அந்நிழல் தந்த சுகமும் அவரை ஆழ்ந்துறங்கச் செய்தது.


சற்று நேரத்தில் விழித்துப் பார்த்தபோது. தான் உறங்கிய இடம் வேறாகவும் இப்போது இருக்கும் இடம் வேறாகவும் இருக்கக் கண்டு கலவரமுற்றுப் பார்த்த போது சிலர் அவ்விடத்தைச் சுத்தம் செய்து கொண்டிருந்தார்கள். சிலர் அமுது தயாரிக்க ஆயத்தம் செய்து கொண்டனர். அதுவும் நல்ல மர நிழல் தான். சௌகரியமாகவும் இருந்தது. தூரத்தில் இன்னும் சிலர் பால் பழங்களுடன் வருவதையும் கணபதி 3 அவதானிக்கத் தவறவில்லை. இது தான் தாய் எண்டு பத்மாசன நிலையில் உட்கார ஆயத்தமானார்.


அது தென்னைமரவாடிப் பிள்ளையார்.



# ஷோபாசக்தியின் "இச்சா", T.D இராமகிருஷ்ணனின் "சுகந்தி என்கிற ஆண்டாள் தேவநாயகி" ஆகிய நாவல்களின் உள்ளடக்கம் எழுப்பும் கேள்விகள்






இன்பமகன்

மலையாள எழுத்தாளர் T.D இராமகிருஷ்ணனால் எழுதப்பட்டு, குறிஞ்சி வேலனால் தமிழ்மொழியாக்கம் செய்யப்பட்ட "சுகந்தி என்கிற ஆண்டாள் தேவநாயகி" நாவல் அண்மையில் படிக்கக் கிடைத்தது. படித்து முடித்ததும் சலிப்பு ஏற்பட்டது. ஈராண்டுக்கு முன்னதாக ஷோபாசக்தியின் "இச்சா" படித்த போதும் இத்தகைய சலிப்பு ஏற்பட்டிருந்தது. போகட்டும்! என அன்று இருந்து விட்டேன். எனினும் தொடர்ச்சியாக இத்தகைய படைப்புகள் வந்து கொண்டிருப்பதால், மறுத்து ஒரு கட்டுரை எழுத வேண்டிய தேவை இன்று ஏற்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இலங்கையில் தடை செய்யப்பட்டுள்ள ஓர் அமைப்பு. அந்த அமைப்பின் பெருமை பேசும் படைப்புகளை யதார்த்தமாகப் படைக்கும் சூழல் இங்கு கிடையாது. இகழ்ந்து எழுதுவதற்கு எவ்வித தடையுமில்லை. புலி எதிர்ப்பு இலக்கியம் படைப்பவருக்கு இந்நிலை மிகவும் சௌகரியமாக அமைந்துவிட்டது. பொருட் பிழைகளை ஆதாரபூர்வமாகச் சுட்டிக் காட்ட அச்சம் காரணமாக முன்னாள் போராளிகள் முன்வருவதில்லை. இவர்களின் "அச்சமௌனம்" புலி எதிர்ப்பு இலக்கியவாதிகளுக்கு முள்ளில்லாக் காடாகிவிட்டது. தங்களின் விருப்பிற்கு ஏற்ப போராளிப் பாத்திரங்களை (இழிவாகப்) படைத்து, வெறியைத் தணித்து, ஆன்ம திருப்தி அடைகின்றனர். முன்னாள் போராளிகளின் அச்சமௌனத்தை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி சூழ்நிலைச் சுரண்டல் செய்து வருகின்றனர். ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்திவிட்டு வாகனம் ஓட்டித் திறமை காட்டுகின்றனர்.

விடுதலைப் புலிகளிடம் கரும்புலிகள் படையணி இருந்தது என்பது உலகம் அறிந்த உண்மை. அப்படையணியில் ஆண், பெண் என இரு பாலாரும் இருந்திருக்கின்றனர். கரும்புலிப் படையணியானது தரைக்கரும்புலிகள், கடற்கரும்புலிகள், மறைமுகக் கரும்புலிகள் என மூன்று பிரிவாக இருந்தது.

முதலாவது தரைக்கரும்புலி (ஆண்) கப்டன் மில்லர் (1987, நெல்லியடி)

முதலாவது தரைக் கரும்புலி (பெண்) மேஜர் யாழினி (1997, தாண்டிக்குளம்)

முதலாவது கடற்கரும்புலி (ஆண்) மேஜர் காந்தரூபன், கப்டன் வினோத் கப்டன் கொலின்ஸ் (1990, வல்வைக்கடல்)

முதலாவது கடற்கரும்புலி (பெண்) கப்டன் அங்கயற்கண்ணி (1994, காங்கேசன் துறைக்கடல்)

அப்படியாயின் முதலாவது மறைமுகக் கரும்புலி யார்? தெரியாது! முறைப்படி உத்தியோகபூர்வமாக வெளிப்படுத்தப்படவில்லை. அவர்களின் சாவு

குறித்து பெற்றோர்களுக்குக் கூடத் தெரியப்படுத்தப் படுவதில்லை. எடுத்துக்காட்டாக சில பாடல் வரிகளைக் கவனிக்கலாம். "ஓரிரண்டு பேருக்குள்ளே உறங்கும் உண்மைகள்...; திரைமூடி வாழும் ஒரு ஜீவிதம்...; இவன் பெயரும் வெளியே தெரியும் படியாய் அழவும் தாயால் முடியாது..." கரும்புலி உருவப்படத்தில் "இருள் படம்" அவர்களையே குறிக்கிறது. அந்த மறைமுகக் கரும்புலிகளும் இரகசிய உறுப்பினர்களும் புலனாய்வுத் துறையின் கீழ் வரும். அவர்கள் குறித்த விவரங்கள் எதுவும் தலைமைச் செயலகத்தில் இருக்காது. புலனாய்வுத்துறை மையப்பணிமனையில் இரகசிய மாகப் பேணப்படும். அவர்களுக்கு விடுதலைப் புலி களுக்குரிய தகட்டு இலக்கம் கிடையாது. ஆவணப் படுத்தல் கோவை இலக்கமே இருக்கும். அவர்களின் ஆளணித் தொகை குறித்து நிதிப்பிரிவிற்கு தெரிவ தில்லை என்பதால் சாதாரண நிதி ஒதுக்கீடு அவர் களுக்கு கிடையாது. சிறப்பு நிதி ஒதுக்கீடு உண்டு. இரகசிய உறுப்பினர்கள் மறைப்பின் கீழ் (under cover) செயற்பட்டு வருபவர்கள் மறைமுகக் கரும்புலிகள் அணிவகுப்பின் போது முகம் மறைத்தே ஈடுபடுவார்கள். ஒருவரின் முகம் மற்றவருக்குத் தெரிய வருவதில்லை.

இத்தகைய அடிப்படை விளக்கத்தோடு இச்சா நாவலை அணுகலாம்.

**(அ)**

**01. பாத்திரப் படைப்புகள்**

ஆலா, சுல்தான் பப்பா, வாமதேவன் என்ற மூன்று பாத்திரங்களே பிரதானமானவை.

**1. சுல்தான் பப்பா**

//இயக்கத்தின் முதல் நிலைத் தளபதிகளில் ஒருவர் //(பக் 145) என அறிமுகம் செய்யப்படுகிறார். அவரின் செயற்பாடு இரண்டாம் நிலைத் தளபதிக்குரிய தாகிறது. அவர் அரசியல் துறையா, புலனாய்வுத் துறையா என முதலில் அனுமானிக்க இயலவில்லை. பின்னர் நீதிமன்ற குற்றப் பத்திரிகையில் அவரின் பெயர் பொட்டு அம்மானுக்கு அடுத்த நிலையில் 4ம் எதிரியாகக் குறிப்பிடப்படுவதால் (பக் – 205) புலனாய்வுத்துறையே என நிரூபணமாகிறது. இறுதியில், வழக்கில் தேடப்படும் குற்றஞ்சாட்டப்பட்டவரான சுல்தான் பப்பா "ஆலா நிழலகம்" என சிறுவர் இல்லம் ஒன்றை கிளிநொச்சியில் நடத்தி வருவதாகக் காட்டப்படுகிறார். புலனாய்வுத் துறைப் பொறுப்பாளர்கள் குறிப்பாக வழக்கில் தேடப் படுபவர்கள் சாவு, காணாமல் போதல், வெளிநாட்டில் தலைமறைவு என்ற வகையிலேயே அடங்குகிறார்கள். இங்கு சிறுவர் இல்லம் நடத்துவதாகக் காட்டப்படுவது முரண்நகை.

**2. ஆலா**

இதுவே நாவலில் முதன்மைப் பாத்திரம். அம்பாறையிலுள்ள இலுப்பைக்கேணிக் கிராமத்தில் பிறந்தவள். சிறுவயதில் பல துன்புறுத்தல்களை அனுபவித்து, போராளியாக இணைந்து வன்னிக்கு வரு கிறாள். சுல்தான் பப்பாவின் நிர்வாக அலுவலகத்தில் மொழிபெயர்ப்பாளினியாகச் செயற்படுகிறாள். பயிற்சி முகாமில் பயிற்சி அளிப்பவளாகவும் இருக்கிறாள். பிறகு மறைமுகக் கரும்புலியாகி கொழும்பிற்கு வந்து, ஃபாமசி ஒன்றில் வேலை செய்கிறாள். பாலத் திறப்பு விழாவில் வெடிப்பதாக இருக்கிறாள். அதன் போது கைது செய்யப்பட்டு, 300 ஆண்டுகள் தண்டனை விதிக்கப்பட்டு, கண்டி ரஜவீதிய சிறையில் இருக்கும் போது தீரா நோயினால் இறக்கிறாள்.

**3. வாமதேவன்**

தண்டனை அநுபவித்துக் கொண்டிருக்கும் ஆலாவை விசேட பொது மன்னிப்பில் சிறைமீட்டு ஐரோப்பிய தேசம் ஒன்றிற்குக் கூட்டிச் சென்று கொடுமைப்படுத்துகிறார். அப்படியொரு வாமதேவன் உண்மையில் கிடையாது. ஆலா கற்பனையில் உருவாக்கிய பாத்திரம் அது என்பது இறுதியில் (பக் 301) புலனாகிறது.

ஆலா, சுல்தான் பப்பா, வாமதேவன் ஆகிய முதன்மைப் பாத்திரப் படைப்புகள் மூன்றுமே மிகவும் பலவீனமாக உள்ளன. ஷோபா சக்தி பாத்திரங்களுக்கு கைவிலங்கிட்டு தன் விரும்பம் போல் வழிநடத்தி யிருக்கிறார்.

**02. நாவலில் காட்சிப்படுத்தப்படும் எவ்விதத்திலும் சாத்திய மற்ற விடயங்கள்.**

1. கொழும்பில் ஒரு தாக்குதல் திட்டத்திற்கு சுல்தான் பப்பா ஒரு கரும்புலியைத் தேடுகிறார் (பக் 164). நிர்வாகத்தில் இருந்தவளை, அதுவும் பலருக்குத் தெரிந்த ஆலாவை மறைமுகக் கரும்புலியாக மாற்று கிறார். அதுவும் அவள் கரும்புலியாக மாற வேண்டிய முன்மொழிவை சுல்தான் பப்பாவே செய்கிறார். அந்தளவிற்கு விடுதலைப் புலிகளிடம் கரும்புலிப் பஞ்சம் இருந்ததில்லை. பாலத்திறப்பு விழாவில் நடவடிக்கை செய்ய ஆலாதான் செல்ல வேண்டும் (சிங்களம் தெரிந்தவள்) என்றில்லை. சாதாரண நடவடிக்கை அது. முன்னதாக, ஆலாவிற்கு சுல்தான் பப்பா மீது ஈர்ப்பு ஏற்படுவதாகக் காட்டப்படுகிறது. சுல்தான் பப்பா ஆலா வோடு கேலி பேசுகிறார் (பக் 149). அப்போது ஆலா சிறுமி எனவும் காட்டப்படுகிறது. அவளது பதினெட்டா வது பிறந்த நாளில் அவளை சுல்தான் பப்பா திடீர் கரும்புலியாக மாற்றுகிறார். இதில் எதனையுமே விடுதலைப்புலிகள் செய்வதில்லை. இந்த சுல்தான் பப்பா அத்தோடு நின்றுவிடாது இன்னொரு வேலையும் செய்கிறார். //பப்பா தன் வலிய கரங்களால் என் இரு கன்னங்களையும் தொட்டு என் நெற்றியில் முத்த மிட்டார் //என்கிறாள் ஆலா. என்ன ஒரு சினிமாத்தனம்!

2. சில காரணங்களின் நிமித்தம் (இவ்விடத்தில் அவசியமில்லை) நடவடிக்கைக்குச் செல்லும் மறைமுகக் கரும்புலிகளை தலைவர் சந்திப்பதில்லை. அது அங்கிருந்த நடைமுறை. நாவலில் ஆலா கறுப்புவரிச் சீருடையுடன் தலைவரைச் சந்தித்து, சேர்ந்திருந்து உணவருந்தி, ஒளிப்படம் பிடித்துக் கொள்வதாகக் காட்டப்படுகிறது (பக். 166). மேலும் செம்பியன் என்ற இன்னொரு கரும்புலியும் கூடவிருக் கிறான். ஆலாவும் செம்பியனும் முகம் அறிவது தகாத செயலாகவே அங்கு பார்க்கப்படும். மேலும் தலைவரும் ஆலாவும் ஒன்றாயிருக்கும் ஒளிப்படம் இறுதிப் போரில்

படையினரிடம் சிக்குவதாகக் காட்டப்படுவதும், அந்த ஒளிப்படமே முக்கிய தகவல் மூலமாக நாவலில் எடுத்தாளப்படுவதும் அறவே வாய்ப்பற்றவை.

*3. பாலத்திறப்பு விழாவில் வெடிக்கத் தயாரான நிலையில் ஆலா நிற்கிறாள். திடீரென வெள்ளைக் காரனான வெளிநாட்டுத் தூதுவர் ஒருவர் வந்ததும், ஆலாவின் பொறுப்பாளர் ஜெயா கூறுகிறார் //Oscar 4 க்குப் பேசிவிட்டேன். வந்திருப்பவர் நமக்குத் தேவை யான நாடொன்றின் தூதுவர். எனவே நடவடிக்கை கைவிடப்படுகிறது. ஆனால், இந்த தூதுவருக்காகவே நாங்கள் நடவடிக்கையைக் கைவிட்டோம் என்பதை தூதுவருக்கு நாங்கள் உணர்த்த வேண்டும். எந்தவொரு உயிருக்கும் சேதம் வராமல், பாலத்தின் பக்கவாட்டுச் சுவரோடு மோதி, நீ வெடிக்க வேண்டுமெனக் கட்டளை கிடைத்துள்ளது! // (பக் 190). ஆலாவை அப்படியே விட்டு விட்டு ஜெயா சென்று விடுகிறார். இது சாத்திய மில்லை. எதற்கும் ஒரு B- Plan இருக்கும். விடுதலைப் புலிகளின் நிர்வாகச் செயற்பாடுகளை கேலிக்கு உட்படுத்துவதற்கான முயற்சி இது.*

*4. இரகசியமாகக் கைது செய்யப்படும் நடை முறை இலங்கையில் இருக்கிறது. இராணுவப் புலனாய் வாளர் சில காலம் தடுத்துவைத்து விசாரித்து விட்டு, பொலிசாரிடம் ஒப்படைத்துவிடுவர். பொலிசாரே பின்னர் வழக்குத் தாக்கல் செய்வர். பாலத்தில் ஊடகங் கள் முன் கைது செய்யப்பட்டு ஆலாவை பொலிசிடம் உடனடியாக ஒப்படைக்க வேண்டும். வேறு வழியே இல்லை. எல்லாம் பரகசியம். ஆனால், நாவலில் இராணுவ புலனாய்வாளர் ஆலாவை கொண்டு செல் கின்றனர். இரண்டு வருடங்களாக விசாரணைக் கைதி யாக ஆலாவை வைத்திருந்து, விதம் விதான சித்திர வதை செய்கின்றனர். பாலியல் துஷ்பிரயோகம் செய்யப் படுவதாக வக்கிகரமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. பெண் கைதிக்கு ஒரு பெண் கான்ஸ்ரபிள் எப்போதும் காவலில் இருப்பார். காரியவம்சம் போன்றவர் கதையில் வருவது போல் செயற்பட இயலாது (பக் 204). மேலும் இந்திய புலனாய்வாளரின் இரகசிய முகாமிற்கு ஆலா கொண்டு செல்லப்பட்டு, அங்கு அவளுக்குப் போதை மருந்து ஊசி ஏற்றப்படுகிறது. இதுவும் சாத்தியமற்றது. இராணுவப் புலனாய்வாளன் குமாநாயக்கா நீதிமன்றில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்வதாகக் காட்டுவது ஒரு போதும் நிகழாது. பொலிஸ் மட்டுமே வழக்குத் தாக்கல் செய்ய முடியும். ஆலாவின் கைதின் பின்னர் காட்டப் படும் எந்தவொரு நிகழ்வும் நடைமுறைச் சாத்திய மற்றது.*

*5. கண்டி ரஜவீதிய சிறையில் ஆலாவிற்கு வைத்திய உதவி மறுக்கப்பட்டு, பெருங்கொடுமை செய்யப்பட்டு இறந்து விடுகிறாள். நாவலில் காட்டப் படுவது போல் இலங்கைச் சிறை கிடையாது. நாளாந்தம் வைத்தியர் சிறைச்சாலைக்கு வருகை தருவார். கடுமை யான நோய் ஏற்பட்டால் கைதி சிறை வைத்திய சாலைக்கு அனுப்பப்படுவார். //ஆலா தனது இருபத்து நான்காவது வயதில் இறக்கும் போது, அவரது தலை முடிகள் முழுவதுமாகவே கொட்டியிருந்தன. கடை வாய்ப் பற்களைத் தவிர, மற்றைய பற்கள் அனைத்துமே பழுதுபட்டு விழுந்து விட்டன. உடலில் ஏற்பட்ட கூனால் அவரால் நிமிர்ந்து நிற்க முடியவில்லை. ஆலா இறந்த போது அவரின் உடலைப் பொறுப்பெடுக்க யாருமே வரவில்லை //(பக் 299). வைத்தியசாலையிலும் ஆலா விற்கு விலங்கிடப்பட்டிருப்பதாகக் காட்டப்படுவது சாத்தியமில்லை. உண்மையில் நிகழச் சாத்தியமானது; ஆலா கைது செய்யப்பட்ட பின் பொலிசில் பாரப்படுத்தப் படுவாள். தடுப்புக் காவலில் வைத்து விசாரிக்கப் படுவாள். பின்னர் விளக்க மறியலுக்கு அனுப்பப்படு வாள். மேல் நீதிமன்றில் (High Court) வழக்குத் தாக்கல் செய்யப்படும். வெடிப்புச் சம்பவம் ஏதும் நிகழாமையால் சிறிய தண்டனை (ஒருவருடம் முதல் மூன்று வருடம் வரை) பெற்று ஆலா விடுதலை அடைய வாய்ப்புள்ளது. நாவலில் வருவது போல் முந்நூறு வருடத் தண்டனை கிடைப்பது சாத்தியமில்லை. வெடிப்புச் சம்பவமொன்று நிகழ்ந்து பெரும் உயிர்ச் சேதம், பொருட்சேதம் ஏற்படும் பட்சத்தில் தான் முந்நூறு வருடத் தண்டனை கிடைக்கும். இலங்கையில் நீதித்துறையும் சிறைச்சாலையும் விமர்சனத்திற்கு அப்பால்பட்டது அல்ல. ஆயினும் நாவலில் காட்டப் பட்டது போல மிகவும் கேவலமானதும் அல்ல.*

*6. லெப். கேணல் மஞ்சரி கிணற்றில் வீழ்ந்து கிடக்கும் நன்னித்தம்பியை சுட்டுக்கொல்வதாகக் காட்டப்படுவது சாத்தியமற்றது. (பக் 129). இப்படித் திடீர் முடிவு எடுத்து சாவுத் தண்டனை வழங்க முடியாது. மேலும் சாவின் பின் வழங்கப்படும் தரவரிசை முன்னமே வழங்கப்படுவது போல் காட்டப்படுகிறது. உதாரணமாக லெப். கேணல் மஞ்சரி, கப்டன் ஆலா. வாய்ப்பில்லை.*

*7. நாவலில் நாடகீயப் பாங்கான காட்சிகளும் பல உள்ளன. சுல்தான் பப்பா காயமடைந்தவேளை ஆலா செயற்படும் விதம் (பக் 151) வேடிக்கையாக இருக்கிறது. தலைவர் சிங்களப் பாடல் பாடுமாறு ஆலாவிடம் கேட்பது (பக் 168); புலிகளின் ஆதரவாளப் பெண் பால் போச்சியில் அமிலம் நிரப்பி இராணுவக் காவலரனினூடு கடத்தல் (பக் 140, 141) எனப் பலவுண்டு. விரிவஞ்சி தவிர்த்து விடுகிறேன்.*

**03. நாவலில் காட்டத் தவறிய முக்கிய விடயங்கள்**

*1. சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் (ICRC) வகிபாகம்*

*கைதிகள் விடயத்தில் ICRC கரிசனையோடு செயற்பட்டு வருகிறது. தடுப்புக்க காவலில் இருக்கும் கைதிகளை வாரந்தவறாது சென்று பார்வையிடும். சிறைக் கைதிகளை மூன்று மாதங்களுக்கு ஒருமுறை சென்று பார்வையிடும். கைதிகளுக்கும் அவர்களின் குடும்பங்களுக்கும் இடையிலான உறவுப் பாலமாக இருக்கும். கைது செய்யப்படும் ஒரு பயங்கரவாத சந்தேகநபர் விடுதலையாகும் வரை அவரின் அடிப்படைத் தேவைகளை ICRC கவனித்து வருகிறது. நாவலில் எங்கும் ICRC சம்பந்தப் படுத்தப்படவில்லை.*

*2. மனித உரிமைகளுக்கும் அபிவிருத்திக்குமான நிலையத்தின் (CHRD) வகிபாகம்.*

*பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழுள்ள*

கைதிகளுக்கு சட்டரீதியான உதவி புரிந்து வருகின்றது.

3.தனிமனித செயற்பாட்டாளர் இராயப்பு ஜோசஃப் ஆண்டகை

மன்னார் மறைமாவட்ட ஆயராக இருந்த இராயப்பு ஜோசஃப் ஆண்டகை பல்லாண்டு காலமாக தனது மரணப்படுக்கைக்குச் செல்லும் வரை சிறைக் கைதிகளுக்கு துணையாக இருந்து வந்தார். (வேறொரு சந்தர்ப்பத்தில் விரிவாக எழுதுவேன்) அவரின் கண்ணில் படாது "ஆலா" மாத்திரமே சிறையில் இருந்திருக்கிறாள். கற்பனைப் படைப்பிலும் தவிர்த்துவிட முடியாத ஆளுமையாகவே ஆயர் இருந்தார்.

முன்னதாக ஷோபாசக்தியின் "ம்" நாவலை நண்பர் ஒருவரிடம் படிக்கக் கொடுத்திருந்தேன். அவர் அதைப் படித்து விட்டு, "இவர் எல்லாரையும் குறை சொல்லுறார். எனக்குப் பிடிக்கேல்லை. நீங்கள் தந்ததாலதான் படிச்சு முடிச்சன்" என்றார். உண்மை போல் தெரிகிறது. சிறைக்கைதிகள் பற்றி எழுதும் போது இராயப்பு ஜோசஃப் ஆண்டகை இருட்டிப்புச் செய்யப்பட்டுள்ளார். நல்ல மனிதர்கள் ஷோபாசத்தியின் கண்களில் படுவதில்லையோ என எண்ணத்தோன்றுகிறது. வாமதேவன் என்ற பாத்திரத்தின் மூலம் புலம் பெயர்ந்தவர்கள் மோசமாக நாவலில் சித்தரிக்கப்படுகின்றனர். ஆயினும் அங்கும் பலர் சிறைக்கைதிகள் விடயத்தில் கரிசனையுடன் செயற்பட்டு வருகின்றனர்.

**04. முடிவுரை**

இந்நாவல் உருவாக்கத்தில் முறையான கள ஆய்வு செய்யப்படவில்லை. உரிய முறையில் கலந்துரையாடல் செய்யப்பட்டு தரவு சேகரிக்கப்படவில்லை. எந்தத் தரப்பிற்கும் நீதி செய்யப்படவில்லை. மூடிய அறைக்குள் ஒரு சிலர் கூடியிருந்து ஆலோசனை செய்து "நோக்கங் கருதி" செய்யப்பட்ட புனைவுபோல் தெரிகிறது. பாலத்தின் கிழக்கு முனையில் ஆலா வெடிக்காது விட, மேற்கு முனையில் செம்பியன் வெடிக்கிறான். அந்த செம்பியனின் பொறுப்பாளர் அவுஸ்ரேலியாவிலிருக்கும் வைத்தியர் நொயல் நடேசனுடன் உரையாடி தகவல் வழங்குகிறார் (பக் 300) நொயல் நடேசனின், "மலேசியன் ஏர்லைன் 370" எனும் நூலில் உள்ளது என்கிறார், ஷோபாசக்தி. இல்லாத செம்பியனை வழிநடத்திய இல்லாத பொறுப்பாளரை நொயல் நடேசன் சந்தித்தாராம். வாழும் மனிதர்களிடம் தகவல் பெறப்பட்டது போல் காட்டி நம்பிக்கை ஏற்படுத்த முயல்கிறார்கள். நூதனப் பித்தலாட்டம்! இந்தக் கூட்டில் இணைந்திருப்பவரே மலையாள எழுத்தாளர். T.D இராமகிருஷ்ணன். குருடன் குருடனுக்கு வழிகாட்டுவது போல ஒருவருக்கு ஒருவர் வழிகாட்டியிருக்கிறார்கள்.

**(ஆ) சுகந்தி என்கிற அண்டாள் தேவநாயகி நாவல்**

**01. கதைச்சுருக்கம்**

பீற்றர் ஜீவானந்தம் (கதைசொல்லி) ரஜனி திரணகமவின் வாழ்க்கை வரலாற்றை திரைப்படமாக்கும் நோக்கோடு இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வருகிறார். விடுதலைப் புலிகளைத் தவறாகக் காட்டி அரசை வெள்ளையடிப்பதற்கான ஒரு கதையாக இது அமைய வேண்டும் என்ற அடிப்படையில் இலங்கை அரசாங்கமே அத்திரைப்படத்தைத் தயாரிக்க இருக்கிறது.

இதே ஜீவானந்தம் 2002ல் சமாதான நேரம் இலங்கைக்கு வந்திருக்கிறார். ரஜினியின் படுகொலையை இந்திய இராணுவமோ இலங்கை இராணுவமோ செய்திருக்க வேண்டும் என நம்பவைக்க புலிகள் தயாரிக்கவிருந்த திரைப்படத்தை இயக்குவதற்கு வந்திருக்கிறார். புலிகளின் வீடியோ படப்பிடிப்பாளரான தம்பிமுத்து, ஊடகப் பிரிவுப் போராளி சுகந்தி அவருக்கு துணைபுரிகின்றனர். சுகந்தியே ரஜனியாக நடிக்கவும் இருந்தாள். பின்னர் அது நடைபெறாது போகிறது. தற்போது வந்திருக்கும் ஜீவானந்தம் சுகந்தியைத் தேடிக்கண்டு பிடிக்கிறார். பொதுநலவாய அமைப்பின் கூட்டம் இலங்கையில் நடாத்தப்படவிருக்கிறது. அக் கூட்டத்தில் குண்டுவெடிப்பு ஒன்று நிகழத்திட்டம் வகுக்கப்படுகின்றது. அதில் சுகந்தியும் ஈடுபடவிருக்கிறாள். அவர்களில் சிலர் கைது செய்யப்படுகின்றனர். "நெலும் பொக்கன" தாமரைத் தடாக மண்டபம் செல்லும் ஆனந்தகுமாரசாமி வீதியில் குண்டு வெடித்து, 14 பாதுகாப்பு அதிகாரிகள் இறக்கின்றனர். பீற்றர் ஜீவானந்தம் விமானம் ஏறி கேரளத்திற்குத் தப்பிச் செல்கிறார். கி.பி. 992இல் காந்தளூரில் வாழ்ந்த ஆண்டாள் பக்தையான தேவநாயகியின் வரலாற்றுப் பின்னணியையும், சுகந்தி என்ற போராளியின் உண்மைப் பெயரான தேவநாயகியையும் இணைத்துப் புனைந்துள்ளார்.

ஷோபா சக்தியின் இச்சா நாவலானது சில இடங்களில் யதார்த்தத்தை நெருங்கியிருக்கிறது. சொற்ப இடங்களில் அச்சொட்டாகப் பொருந்தியும் இருக்கிறது. ஆலா, தர்மபுர / பாமஸியில் வேலை செய்தது, திருகோணமலையூடு கொழும்பு வந்து, பம்பலப்பிட்டியில் மறைப்பில் (Under cover) வேலை செய்ததை குறிப்பிடலாம். ஆனால், T.D இராம கிருஷ்ணனின் நாவல் யதார்த்தத்தை எங்கும் நெருங்கவில்லை.

**02. நாவலிலுள்ள மிக மோசமான சித்தரிப்புகள்**

1. "டீவைன் பேரள்" (DP) என்ற இரகசிய இராணுவ தடுப்பு முகாமிற்கு திரைப்படக் குழுவினர் தமிழொலி என்ற பெண் பேராளியைச் சந்திக்கச் செய்கின்றனர் (பக் 5–14). DP முகாம் பொறுப்பாளராக கேர்ணல் டி சில்வா இருக்கிறார். புலிகளில் மிகவும் பயங்கரமானவர்கள் அங்கு தடுத்து வைத்து, சித்திரவதை செய்யப்படுகின்றனர். இரகசிய தடுப்பு முகாம் பற்றிய புரிதல் இராமகிருஷ்ணனுக்கு இல்லை போல் தெரிகிறது. ICRC மற்றும் ஏனைய மனித உரிமை பேசும் நிறுவனங்கள் நுழைய அனுமதியற்ற இடமே இரகசிய முகாம். அப்படியான ஓரிடத்தில் திரைப்படக் குழுவினரை அனுமதிப்பது ஒருபோதும் நடக்காது.

2. ரஜனி திரணகம வேலுப்பிள்ளை பிரபாகரனை (VP) கிளிநொச்சியில், ரஜனி கொல்லப்படுவதற்கு சில வாரங்களுக்கு முன், சந்திக்கிறார். அவர்களுக்கு இடையிலான உரையாடல் முழுமையாகத் தரப்படுகிறது (பக் 94 98). அவர்களின் உரையாடலை மாத்தையா இரகசியமா ஒலிப்பதிவு செய்து விடுகிறார். 1994 இல் மாத்தையா கொல்லப்பட்டதன் பின்னர், தம்பிமுத்து அந்த ஒலிப்பதிவை பெற்றுவிடுகிறார். அவர்

2002 இல் ஜீவானந்தத்திடம் சந்திப்பு விவரத்தைக் கூறுகிறார் (பக் 92). இது VPக்கு தெரிந்து விடுகிறது. தம்பிமுத்து VP இன் முன் நிறுத்தப்பட்டு, விசாரணை ஏதுமின்றி, சினிமா படத்தில் வருவது போல், VP இன் கண் முன் நடுவீட்டுக்குள் வைத்து சுட்டுக்கொல்லப்படு கிறார். அங்கிருந்த சுகந்தி, "Are you mad?" என VP யிடம் கேட்டுக்கொண்டு, அவரை நோக்கிப் பாய்கிறாள் (பக் 93) மிகவும் கேவலமான காட்சியாக நாவலில் பதிவு செய்யப்பட்டுள்ளது. ரஜனி பிரபா சந்திப்பு நிகழ்ந்த தாகக் கூறப்படும் காலத்தில் (1989 ஓகஸ்ட், செப்ரெம்பர்) கிளிநொச்சி இந்திய இராணுவக் கட்டுப்பாட்டில் இருந்தது. பிரபாகரனோ மணலாற்றிலிருந்து ஓர் அங்குலம் நகராது இருந்தார். இராமகிருஷ்ணனின் எல்லையற்ற கற்பனை இது.

3. 58 வயதான ஒரு சிங்கம் (இராணுவ அதிகாரி) அரசிற்கு எதிராக எதிர்ப்பு தெரிவிக்கும் பெண்களை கடத்திச் சென்று, பாலியல் வல்லுறவில் ஈடுபட்டு கர்ப்பமாக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டு வருகிறார் (பக் 114 – 119)

4. இரகசிய தடுப்பு முகாமில் (DP) பெண்கள் சித்திரவதை செய்யப்படுவது வக்கிரமமாக எழுதப் பட்டுள்ளது (பக் 337 341) ஷோபா சக்தியின் பாணியை ஒத்திருக்கிறது.

**03. முடிவுரை**

சுகந்தியை பற்றிய தகவலை தனக்கு ஆண்டனி (ஷோபாசக்தி) வழங்கியதாக T.D இராமகிருஷ்ணன் நாவலில் பதிவு செய்கிறார் (பக் 15). மேற்கூறிய இரு நாவல்களும் விடுதலைப்புலிகளைத் தாழ்த்தும் செயற் பாடுகளில் ஒன்றை ஒன்று விஞ்சி நிற்கின்றன. ஷோபா சக்தி, நொயல் நடேசன் போன்றோர் ஈழ மண்ணில் பிறந்து எம்மோடு வரலாற்றைப் பகிர்ந்து கொள்பவராக இருக்கின்றனர். T.D இராமகிருஷ்ணன் பற்றி என்ன கூறுவது? அவருக்கு ஏன் இந்த விபரீத ஆசை? ஜீவநதி இதழ் 137 இல் பேராசிரியர் அ.ராமசாமி, இ.சு.முரளி தரனுடனான நேர்காணலில், தெரிவித்த ஒரு கூற்றை நினைவுபடுத்த விரும்புகிறேன். //**ஒரு நாட்டின் விடு தலைக்கு தேசிய இனத்தின் தன்னுரிமைப் போர் அல்லது ஆயுதம் தாங்கிய போர் எப்படி நடந்திருக்க வேண்டும் என இன்னொரு நாட்டிலிருக்கும் தனி நபரோ, அமைப்போ சொல்வது வழிநடத்த முயல்வதும் சரியாக இருக்காது. சரியோ தவறோ களத்தில் இருப்பவர்களே அதைத் தீர்மானிக்க வேண்டும், என கருதுபவன் நான். இதையே தான் நான் இலக்கியப் பரப்பிற்குப் பொருத்துவேன்** //(பக் 29).

முன்னதாக 1985 இல் அசோகமித்திரன் ஒரு நேர்காணலில் கூறுகிறார். //**தமிழீழப் போராட்டத்தைத் தழுவிய இலக்கியம் என்று எல்லா எழுத்தாளர்களாலும் படைக்க முடியாது. கவிதைகளில் உணர்வு அடிப்படையில் சில வரிகளை இயற்ற முடியும். அதற்கு மேல் அவர் முயற்சி செய்வது உண்மையான போராளிகளை அவமதிப்பதாகக் கூற முடியும். சந்தர்ப்ப சூழ்நிலைகள் பற்றிய பரிச்சயம் கணிசமானளவு இருந்தால் தான் ஒரு சிறுகதையாவது எழுதமுடியும்** //(அசோக மித்திரன் கட்டுரைகள். பக் 119)

முடிவாக, ஆம்ஸ்ரோங் சொல்லட்டும் நிலவைப்பற்றி ஏனையோர் அதுவரை காத்திருக்கட்டும்!

## ஒரு குழந்தையின் முள்ளிவாய்க்கால் நினைவு



முலை அறுந்து
முன்னங் காலிழந்து
மடி எரிந்து
முட்டி மோதி
முடிந்த நாளொன்று
மூச்சாகி நினைவுருக்கி
முகமெல்லாம் வந்து நிற்கவே!

நெஞ்சம் தினம் தோறும்
உறக்கம் தொலைக்குது

சூரியன் சாட்சியாய்
தன்னைத் தானே எரிக்க
நந்திக்கடலும் மூழ்கி மூழ்கி
ஆரவாரம் செய்ய
ஒற்றைப்பனை ஒடிந்து
ஊரின் பயணம் உரைக்குது

நாதியற்ற நாமாகி
நனைந்து தோய்ந்த
நாளாகி வானம் செங்குருதி
போர்வை கொண்டு
நிலத்தில் இரத்தநிழல்
பதிக்க அது நம் நிலத்தை
நினைவுறுத்துது

அப்போது,
பலமிழந்து நடந்தோமே
வளமிழக்க விளைந்தோமே
நிலத்தில் ஊர்
தொலைத்து வந்தோமே
கேளீர் மக்கள் யாவுள
வாரிக்கொடுத்தோமே
வெந்து தணிந்து
வனமாய் மாறிப்போனோமே!

இதுவோ நம் நிலத்தின் கனவு
இதுவே நம் நிஜத்தின் இருண்ட நினைவு!!

**- என். நிலவிந்தன்**



# மூன்று பௌர்ணமிகள்

ஏ.எஸ்.சற்குணராஜா

குசிநாராக் கிராமத்திலுள்ள சல்மரத்தோப்பின் ஊடாக ஆனந்தர் மற்றும் சீடர்கள் சகிதம் நடந்து கொண்டிருந்த புத்தர் பெருமானிற்கு வயிற்றுக் கடுப்பும், குமட்டலும் தொடங்கி விட அவரின் நடை தடங்கி விடுகிறது.

"ஆனந்தா இதிலே எனக்கு ஒரு படுக்கையைப் போடு..."

ஆனந்தர் ஒரு சிவுரவை மடித்து மரங்களிற்கிடையில் விரித்துப் புத்தர் பெருமானை சயனிக்க வைக்கிறார்.

புத்தர் பெருமானின் தலை மாட்டில் இருகைகளையும் மார் போடணைத்தவாறு கவலையுடன் சிந்தனையில் மூழ்கிய ஆனந்தரின் மனதில் பெருமானின் கடந்த காலங்கள் தடங்க லின்றி நினைவுத் திரையில் நிழலாடிக் கொண்டிருந்தன.

***

அரண்மனையின் உப்பரிகையில் தன் பொன்னிற மேனிப் புத்திரன் மண நாள் ஆயத்தங்களில் மெய் மறந்து போய் இருப்பதை பார்த்த சுத்தோதனனின் மனதை தென்றல் மெல்ல தழுவிக் கொண்டிருந்தது. ஆனாலும் ஐவகை உத்தம ஞானசம்பத்துக்கள் நிரம்பிய அசித்த மகரிஷியின் வார்த்தைகள் அண்மையாகவும் சேய்மையாகவும் அன்ன நடைபயில மீண்டும் மனதில் ஒரு புயல் வீசிடுமோ என சுத்தோதனர் கலங்க கோதமியின் ஆறுதல் வார்த்தைகள் அவரைக் குளிர வைத்துக் கொண்டிருந்தன.

ஆன்மீகம் நாடி அனைத்து இடங்களிற்கும் ஓடி தபோவனங்களைத் தேடி ரிஷி முனிவர்களை நாடியவன் இப்போ யசோதரா மேல் மையல் கொண்டு தையலவளை கைப்பிடிக்க இணங்கி நிற்பது சுத்தோதனனுக்கு பெரும் வியப்பாகத்தான் தென்பட்டது.

காந்தார தேசத்து கன்னியரின் நடனங்கள் கபிலவஸ்துவின் களியாட்ட மண்டபத்தில் களைகட்டிட ஆண்மை தீர்ந்தவர்களும், ஆயுள் தீர உள்ளவர்களும் வாய்பிழந்து, இமை மூட மறந்து ஆடல் அழகையும், அசையும் கொங்கை அழகையும், காற்றில் நெளியும் பொன்னிறக் கூந்தல் அழகையும் தனை மறந்து இரசித்துக் கொண்டிருந் தனர். அங்கு அமர்ந்திருந்த சித்தார்த்தருக்கு அதனுடன் மனம் ஒன்றிட மறுத்திடவே எழுந்து வெளியேறி தனது மஞ்சத்தை நோக்கி நெஞ்சம் சென்றிட பாதம் நடைபயின்று கொண்டிருந்தது. அண்ணாந்து பார்க்கையில் ஆகாயத்தில் வட்டநிலா வானில் ஒளிர, சுற்றி வர விண்மீன்கள் மின்மினிகளாய் மிளிர அரண்மனையில் நின்ற அழகு நிறை பூமரங்கள் அவ் ஒளியில் தோய்ந்து சுந்தரமாய் ஒளிர்ந்து நிற்க இரவுப் பறவைகள் கீதம் இசைத்துக் கொண்டிருந்தன. அவர் மனதில் இனம்புரியாத புளுகம்.

ஆடல் அரங்கில் கன்னிகளின் களியாட்ட நிகழ்வில் மதுவிலும் மாதுவிலும் மயங்கியவர்களின் குதூகல ஓசை குறைவில்லாமல் ஒலித்துக்கொண்டிருந்தது.

"அடடா இயற்கை எப்போதும் சுந்தரமாகவே உள்ளது. அது சுதந்திரமாகவே இருத்தல் வேண்டும்" என்ற நினைவுடன் மஞ்சத்தில்

சரிந்தவர் உலகை மறந்து உறங்கி விடுகின்றார்.

வைகாசிப் பௌர்ணமி நாளில் சித்தார்த்தர் பிறந்து சில நாட்களில் அவர் தாயார் மாயா தேவி இறந்து விட்டிருக்கையில் கபிலவஸ்துவின் அரண் மனைக்கு சுத்தோதனரின் குருவான பிராமணர் அசித்த மகரிஷி ஆண்மகனைத் தரிசிக்க அடியெடுத்து வைத்திருந்தார். குருவை வணங்கி வரவேற்று ஆசனத்தில் அமர்த்தி ஆண்மகனை அவர் கையில் கொடுத்து அகமகிழ்ந்த சுத்தோதனனுக்கு அவரின் மேல் அளவற்ற பக்தி. அவரின் ஆன்மீக பலம். ஞான திருஷ்டி. தீர்க்க தரிசனம் தெரிந்தவர் அல்லவா அரசர்.

சித்தார்த்தரை கையில் தாங்கி சிந்தனை நீங்கிய அசித்த மகரிஷி பாலனின் பாதத்தில் கண்களை ஒற்றி களித்தவர் கண்களில் சிரிப்பு, மறுகணம் கண்ணீரின் தெறிப்பு.

சுத்தோதனனின் மந்திரி மித்தசேனனின் "என்ன மகரிஷி" என்ற ஏக்கப் பார்வையின் அர்த்தம் புரிந்த மகரிஷியும்

"தேசத்தை வெல்ல அம்பை விடுத்து, நேசத்தை அள்ள அன்பை விதைத்து அவன் உலகம் போற்றும் உத்தமனாவதை உணர்ந்தேன். அதனால் உவகையில் சிரித்தேன். அடியேன் பார்த்து அகமகிழ்ந்திட எனக்கு ஆயுள் இல்லையே அதனால் அழுதேன்." அசித்த மகிரிஷி அனைவருக்கும் பகர்ந்தார்.

சமாதியடைந்த அசித்த மகிரிஷி சுத்தோதனன் முன்னால் ஒரு கணம் தோன்றி மறைந்தார்.

***

சூரியன் மேற்கு வானத்தில் வண்ணம் தீட்டியபடி கபிலவஸ்து இராச்சியத்திலிருந்து விடை பெற்றுக்கொண்டிருந்தான். இரவிற்கஞ்சி முகில் கூட்டங்களும் வீடு நோக்கி விரைந்து கொண்டிருந்தன. அன்று யசோதரை தனது கோலிய இராச்சியத்திற்கும். கபிலவஸ்து இராச்சியத்திற்கும் இடையில் இருந்த அந்த பிரபல்யமான கோவிலிற்கு நடையில் வருவதற்கு நாளியாகிவிட்டது. வழமையாக சூரியன் மலை களிற்குப் பின்னால் மறைவதற்கு முன்பாகவே மலர் பறித்து இறைவனை வணங்கிவிட்டுச் செல்வது வழக்கமாக இருந்தது. வழமை போல் கோவிலிற்கு முன் இருந்த நீர் நிலையில் மலர்களைக் கழுவி உள்ளே நுழைந்தவளுக்கு கடவுளே காட்சி தந்தது போன்ற பிரம்மை. அந்த ஆலயத்தினுள்ளே இடப்புறத்தில் இளமை ததும்ப, அமைதி தவழ்ந்த முகத்துடன் ஓர் ஆணின் உருவம், அரவமற்றிருந்தது. உள்ளங்கையை தொடையில் வைத்து பத்மாசனத்துடன் தியானத்தில் திளைத்த அவரின் முகமோ ஒளி பொருந்திய பூரண சந்திரனாய் தெரிய யசோதரா தாபம் நிறைந்தே தன்னை மறந்து நின்றிட்டாள்.

சுயநினைவிற்கு வந்தவள் மலர்களைச் சாத்தி வணங்கி மாலையாகி விட்ட நிலையில் வீடு நோக்கி விரைந்து கொண்டிருந்தாள். செல்லும் வழியில் நிறைந்து குலுங்கிய நெற்கதிர்கள் சாமரம் வீசி சந்தோஷம் கொள்ளவே, அவள் உடல் மட்டுமே அரண்மனை செல்ல மனம் என்னவோ ஆலயத்திலேயே தங்கி விட்டது.

மறுநாள் சற்று நேரத்துடன் சென்று மலர்சாத்தி வணங்கி விட்டு மறைந்திருந்து பார்த்துக் கொண்டிருக்க மனதில் கலந்தவன் முதல் நாள் போலவே இன்றும் அதே இடத்தில் வந்து அமர்ந்து கொண்டான். யசோதராவின் விழி தொடுத்த கணை சித்தார்த்தரின் கண்களைத் திறந்து விடவே ஒரே பார்வையிலேயே அவரின் மனதிலும் பட்டாம் பூச்சிகள் பறக்கத் தொடங்கின.

துணிவுடன் வெளியே வந்த யசோதரா, "நீங்கள்..."

"நான் கபிலவஸ்து இராச்சிய மன்னன் சுத்தோதனின் மகன் சித்தார்த்த கௌதமன், சாக்கிய வம்சத்தை சேர்ந்தவன்..."

சொல்லி முடிக்கையில் யசோதராவோ பூ ஒன்றைக் கரங்களில் திணித்து

"நான் கோலிய அரசர் சுப்ரபுத்தரின் மகள் யசோதரா..."

பதிலுக்கு காத்திராமல் வேகமாக வீடு நோக்கி விரைந்து சென்று கொண்டிருந்தாள்.

சித்தார்த்தரோ தன்னிலையடைய தாமத மானது. மனதை ஒரு நிலைப்படுத்த முடியாமல் அன்றைய தியானத்தை அரை குறையில் விட்டு கையில் பூவுடன் வீடு நோக்கி விரையத் தொடங்கினார். வளர்ப்புத் தாயார் கோதமியின் அழைப்பின் நிமித்தம் இரவு உணவிற்காய் உட்கார்ந்து இருந்தவருக்கு சிந்தனை எங்கோ சிறகடிப்பதை அன்னை அவளும் அவதானிக்கத் தவறவில்லை.

"மகனே என்ன நடந்தது? ..."

"இல்லை அம்மா! இன்று மாலை எனது தியானத்தை கன்னி ஒருத்தி கலைத்து விட்டிருந்தாள்."

இளைஞனின் மனதில் கன்னியில்லாமல் கிழவியா நுழைய முடியும்... "யாரவள்?"

"அம்மா அவள் தன்னை யசோதரா என்று அறிமுகம் செய்தாள். அவளின் வார்த்தைகளும் செயல் களும் என் உளத்தில் மகிழ்ச்சி ஒன்றினை மலர்வித் துள்ளது. என் வாழ்நாளில் இதுபோல் உணர்வொன்றை என்றும் நான் பெற்றதில்லை."

கோதமியின் மனதில் மகிழ்ச்சி வெள்ளம் பாய்ந்து கொண்டிருந்தது.

இதனை மன்னரின் காதில் போட்டால் மகிழ்ச்சியடைவார். கோதமி தனக்குள் நினைத்தே மன்னரின் மாளிகைக்குள் நுழைகையில் அரண்மனை நந்தவனத்துப் பூக்களிலிருந்து நறுமணத்தை சுமந்து கொண்டு வந்த தென்றலும் சேர்ந்தே நுழைந்து கொண்டிருந்தது.

***

சித்தார்த்தர் அன்றிரவு விழியை மூடினாலும் உள்ளம் உறக்கம் நோக்கிச் செல்ல மறுத்துக் கொண்டி ருந்தது. நடந்தவைகளை நினைக்கையில் உறக்கம் மறக்க சிந்தனைகள் வரிசையில் நகரும் பட்டாம் பூச்சியாக சிறகடித்துக் கொண்டிருந்தன.

பெண்கள் ஆண்களை காதல் மயக்கம் கொள்ளச் செய்து குடும்பம் என்னும் துயரத்திற்குள் தள்ளி தீராத கவலைகளை கொடுத்து விடுகின்றார்கள். பெண்கள் தன்னலவாதிகள் எந்த விடயங்களையும் பெரிதாக்கி சண்டையிட வைப்பார்கள். குன்றில் தடக்கிக் குழியில் வீழ்ந்தவர்கள் மீண்டதில்லையே... நான் சந்தித்த துறவிகள் யாவருமே பெண்களைப் பற்றி இவ்வாறுதான் பகன்றார்களே...சிறப்பாக கூறிய

தில்லையே.

சித்தார்த்தனின் அன்றைய சிந்தனையில் இக் கருத்துக்கள் மீண்டும் மீண்டும் தோன்றி மறைந்து கொண்டிருந்தன.

பொழுது புலரட்டும் என் குருநாதரை சந்திப்பேன். அதன் மூலம் மனதின் இருள் விலகட்டும், சித்தம் தெளியட்டும்.

அதிகாலை சித்தார்த்தரின் கால்கள் சர்வமித்திர மகரிஷியின் தபோவனம் நோக்கி நடந்து கொண்டிருந்தன. தியானத்தில் மூழ்கிய மகரிஷியின் முன்னால் சித்தார்த்தர் அமைதியாக அமர்ந்து இருக்கிறார். ஆனால் அவர் மனதில் அலையடித்துக் கொண்டிருக்கிறது. வெள்ளிக்கம்பி போல் பளபளக்கும் குருவின் ஜடாமுடி, நீண்ட வெண்ணிற தாடி, பால் நிலவு போல் பிரகாசிக்கும் முகத்தில் நடமாடும் தேஜஸ், அவருடைய உடல் மட்டுமா வெள்ளை? மனமும் கூட வெள்ளை தான். தனக்கு கல்வி, போர்க்கலைகள் போன்றவற்றை அரவணைத்துக் கற்றுக் கொடுத்த ரிஷி பற்றிய நினைவில் மூழ்கிய போது, கண் திறந்த சர்வமித்திர மகரிஷியின் கனிவான பார்வை சித்தார்த்தரை மேய்ந்து கொண்டிருந்தது. குருவின் பார்வையில் தன்நிலை மறந்த சித்தார்த்தரிற்கு வாய்வழியே வார்த்தைகள் வரமறுத்து விட்டன.

"சித்தார்த்தா….."

புருவத்தை உயர்த்தியபடி வினாதொடுத்தது போல் இருந்தது அவரின் பார்வை,

"மகனே தீயில் இன்று தீ பற்றி இருக்கிறது. உயர்ந்த பண்புகளை உச்சியில் தாங்கி உலக மக்களின் சஞ்சலங்களிற்கு தீர்வு காணும் சிந்தனை வசப்பட்ட உனது மனதில் இன்று சஞ்சலம் தோன்றி இருக்கிறது"

"ஞானத்தைத் தேடும் பயணத்தில் நடப்பவனுக்கு இன்று என்ன நாணம்? வேண்டாத ஒன்றுடன் உறவா அதுவும் வேதனை தான். வேண்டியது கிடைக்காமல் போனாலும் வேதனை தான். ஆசைப் பட்டதை அடைய முடியவில்லை, அதுவும் வேதனை தான். ஆசைப்பட்டதை அடைந்து விடு, சஞ்சலத்திலிருந்து வெளியே வந்து விடு, உலகியல் வாழ்க்கையில் உலாவ ஆண், பெண் பிணைப்பு அவசியம் தான்."

அத்துடன் குருவின் வார்த்தை நின்று விடவே,

"குருவே எனது பிரபஞ்சத்தின் படைப்பை பற்றிய உண்மையை தேடும் முயற்சிக்கும் மனித குலத்தின் துயரத்தை துறக்க வைக்கும் ஆய்வுக்கும், இலட்சியத்துக்கும் இப்பிணைப்பு பிணக்கைக் கொடுக்காதா?"

"இல்லை மகனே! நீ தடைக்கல்லையும் படிக்கல்லாக மாற்றக் கூடியவன். யசோதரா உனது இலட்சியத்தின் உந்துசக்தி அவள் பழமையில் ஊறிய வழமைப் பெண் அல்ல. அவளின் இளமை உன் சிந்தனைக்குள் சிக்கி இருக்கலாம். ஆனால் அவளின் உலகம் சார்ந்த சிந்தனைகள் பேரறிவாக ஊறித்தான் போயுள்ளது. உன் இராச்சியத்தில் பேரழகுப் பெண்கள் பெருமளவில் உலாவுகையில் அவளால் மட்டுமே உன் உள்ளத்தில் நுழைய முடிந்தது மட்டும் தற்செயல் அல்ல.. தகும் செயல் தான் . சிந்தனை செயல்களின் ஒன்றிப்பே உங்கள் உள்ளத்தை ஒன்றிணைத்துள்ளது. வாளெடுத்து வன்முறையால் குருதி சிந்தி பேரரசன் ஆவதை விட பெருங்கருணை பொங்க ஞான பலம் மிளிர உலகிற்கான சேவையையே உத்தமமாக கருதும் உத்தமி அவள்."

யசோதராவுடன் ஆண்டுக் கணக்கில் பழகியவர் போல் அவள் பற்றி அவர் உதிர்த்த வார்த்தைகள் குருவினது தவ வலிமையின் தீர்க்க தரிசனமா?

சித்தார்த்தர் குருவை நன்றாக அறிந்தவர்தான், ஆனாலும் இவ்வளவு துல்லியமாக அவள் பற்றி அறிக்கையிட்டது சற்று ஆச்சரியமாகத்தான் இருந்தது.

பயிற்சிக் காலத்தில் முயற்சியின் வன்மையால் தோல்வியை அறியாதவன் ,பணிவு நேர்மை நெற்றிக்கு நேரான கருத்து நெஞ்சத்தில் தாங்கி எப்போதுமே சிந்தனை வசப்பட்ட சித்தார்த்தன் மானிட வரலாற்றில் தன்னைப் பெயரிட வேண்டும் என்பது சர்வமித்திர மகரிஷிக்கு அவாவாக ஆட்கொண்டிருந்தது.

"குருவே பாரம்பரிய சடங்குகளில் பயணித்துத் தான் திருமண மலரைப் பறிக்க வேண்டுமா? சுயம் வரத்தில் வாகை சூட வேண்டுமா? வென்றவரை அடைய பெண் என்ன பரிசுப் பொருளா?"

"மகனே இன்றைய இந்த சத்திரியர்களுக்கு உரிய சடங்குகளில் இருந்து ஒரே நாளில் கடந்து வர முடியாது. யசோதராவுக்காக உன் இலட்சியத்துக்கான உந்துசக்திக்காக உடன்பாடு இல்லாவிடினும் சத்தமின்றி சகித்துக்கொள்."

"குருவே பொய்மைகளை சகிக்கப் பழகிக் கொண்டால் அதில் மாற்றத்தை எவ்வாறு ஏற்படுத்துவது? "

"மனிதர்கள் ஒவ்வொருவரும் தனித்தனியாக வெவ்வேறு இயல்புகளுடனேயே பிறக்கின்றனர். நம்மை சூழவுள்ள விடயங்களை எவ்வளவு தூரம் நம்மால் விளங்க முடிகிறது. அதில் கூட ஆளுக்காள் வேறுபடுகின்றோம். இது ஏன்? இருக்கின்ற ஒன்றைத் தானே நிருபிக்க முடியும். இல்லாதவொன்றை எப்படி நிரூபிப்பது?. இதற்கான பதிலில் எனக்குத் தோல்வி தான். எதிர்காலத்தில் நீ இதற்கு விடைகாண முயல்வாய், வெற்றியும் பெறுவாய். ஆனால் அப்போது நான் உயிருடன் இருந்தால் தெரியப்படுத்து, தெளிந்து கொள்கின்றேன்."

வேதச் சடங்குகள் மீதும் கடவுளுக்கும் மனிதர்களுக்கும் இடையே நடுவர் வேலை பார்ப்பவர் மீதும் ரிஷிக்கும் நம்பிக்கை இல்லைத்தான். அதானாலேயே பிராமணராக இருந்தும் இவற்றை விடுத்து வனமேகி தனிமையை நாடி இயற்கையுடன் கூடி தவசிரேஸ்டாக வாழத்தலைப்பட்டவர்.

இதற்கு மேல் குருவிடம் விவாதம் செய்வதை விடுத்த சித்தார்த்தர் குருவை வணங்கி விடைபெற்று வீடு நோக்கி விரையத் தொடங்கினார்.

நேராக யசோதராவை சந்திக்க சென்றவர் சர்வமித்திர மகரிஷியுடன் நடந்த சம்பாசனைகளை பகிர்ந்து கொண்டார். சலனத்திலிருந்து மீண்டு கொண்டார்.

"யசோதரா திருமணத்தன்று வேதச் சடங்குகளில் நம்பிக்கை கொண்ட உனது தந்தை சுப்ரபுத்தர் பிராமண புரோகிதர்களைக் கொண்டு பாரம்பரிய சடங்குகளைச் செய்யத்தான் போகிறார். இதை எவ்வாறு தவிர்க்க போகிறோம். அல்லாவிடின் சகிக்கப் போகின்றோம் ?"

"கபிலவஸ்துவின் குமாரனே இது தொடர்பாக மூளையை கசக்காதீர்கள். மகிழ்ச்சியை இழக்காதீர்கள். முட்டாள்தனமான நகைப்புக்குரிய சடங்குகளை கண்டு களியுங்கள். அதனுடன் ஒன்றிவிடும்படி உங்களை வற்புறுத்துகின்றேனா?"

"இல்லை யசோதரா மனிதர்களின் மடைமையை நீக்குவதை கடமையாகக் கொண்டவன், மடமையைப் பார்த்து மகிழ்வதா? பொய்மையை என்றும் புகழ்வதா? பழகிக்கொண்டால் மாற்றத்துக் கான பயணம் மண்ணாகி விடாதா?."

சித்தார்த்தரை இழுத்து தன்னுடன் அணைத்துக் கொண்டாள் யசோதரா.

***

கோலியரின் தலைநகரரன தெவ்தகவில் கோலாகல திருமணம், குதூகலக் கொண்டாட்டம் நிறைவடைந்து அங்கு அமைதி ஆட்கொண்டுவிட்டது.

கபிலவஸ்துவின் தலைநகரம் கிம்புல்வத்புரவின் அரண்மனையில் யசோதரா மடியை மஞ்சமாக்கி துயில நினைத்தாலும் சிந்தனைகள் சிதறி மனவானில் வலம் வந்து கொண்டிருந்தன.

கோலியர்களும், சாக்கியர்களும் இராச்சியத் திற்கிடையே ஓடும் ரோகினி நதிநீரின் பங்கீடு தொடர்பில் பரம விரோதிகள். வற்றாத காலங்களில் தொற்றாத பிணக்கு ஓடையாகி விடுகையில் ஒட்டிக் கொள்கிறதே! பெருக்கெடுக்கையில் பெருகும் சந்தோஷத்தை வறண்டு போகையிலும் வளர்க்க முடியாதா?. இந்த உலகம் வன்முறைமூலம் வளரும் சந்தோஷத்தில் வழ்வதற்குப் பழகிவிட்டது. இதனால் பெருமளவு மனிதர்கள் இன்பத்திற்குப் பதிலாக துன்பத் தில் மூழ்கி வாழ்க்கையை முடித்துக் கொள்கின்றனர். ஆன்மீக விழுமியங்கள் உண்மையெனில் மக்களின் வாழ்க்கைகள் மகிழ்ச்சியாக வேண்டுமே?. இதை விளக்குவதற்குப் பதில் அர்த்தமற்ற வழக்கங்கள் மூட நம்பிக்கையுடனான செயல்கள் ஆன்மீகத்திற்கான பாதையென மதமென்ற பேரில் மக்கள் நம்பவைக்கப்படு கின்றனர்.

இறைவன் என்ன இடையில் ஒருவரின் உதவி தேவைப்படும் அளவிற்கு பலவீனமானவரா? அப்படி யாயின் பலவீனமான ஒருவரிடம் எமக்கான உதவியை எவ்வாறு எதிர்பார்க்க முடியும்?"

சித்தார்த்தரின் சிந்தனையை புரிந்து கொண்ட யசோதராவோ

"உங்கள் சிந்தனையை சிறைப்பிடிக்க நான் கைப்பிடிக்கவில்லை. தங்களின் பாதங்கள் இந்தப் பரந்த உலகில் எப்போது பதிய விரும்புகிறதோ அப்போதே உண்மையைத் தேடி உலகெங்கும் ஓடட்டும்."

ஏதோ ஒரு நிறைவுடன் தூக்கம் தழுவ அன்றைய பொழுது கடந்து விடுகிறது.

***

சித்தார்த்தர் துயின்ற யசோதரா மடியில் ராகுல குமாரன் துயின்று கொண்டு இருக்கின்றான். சித்தார்த்தருக்கோ வயது **40** ஐ அடைய ஒருவருடம் பாக்கி, அன்று சித்தார்த்தர் முடிவு ஒன்றை எடுக்க முனைந்து கொண்டிருந்தார்.

"என் வாழ்க்கைத் துணைக்கு இப்போ வாரிசு ஒன்று துணையாகிவிட்டது. பாவையவள் பாசம் வைக்க பாலனவன் பார்வை ஒன்றே போதும். இது என் பிரிவுத் துயரை மறக்க மருந்தாகி விடலாம். என்னை மறந்தாகி விடலாம்."

பயணத் தடை அகன்று அவரின் பாதையில் ஓர் ஒளி பிரகாசிப்பது போல உணர்வு.

சூரியன் துயில் கொள்ள, சந்திரன் மேலெழுந்து வர மெல்லத் தூங்கிய இருவரையும் தொந்தரவு செய்யாமலேயே குமாரனின் நெற்றியில் முத்தம் ஒன்றைப் பதித்து, சத்தம் இன்றியே இருவர் முகத்தையும் சிறிய ஓர் நேரம் பார்த்து நின்றவர், வெளியே பாதம் பதித்தே பயணத்தை தொடங்கினார்.

காத்து நின்ற குதிரை கந்தகன் துணையுடன் மந்திரி சன்னவை அழைத்தே, லட்சியம் ஏந்தி இராச்சியம் நீங்கியவர், நிரஞ்சன நதியைக் கடந்த பின்னர் குதிரையை நிறுத்தினார். குதிரை,கந்தகனையும், சன்னவையும் தடவிக் கொடுத்தே அரண்மனை செல்ல ஆணையிட்டவர், அவர்களின் பதிலிற்கு கூடக் காத் திருக்காமலே காட்டை நோக்கி நடக்கத் தொடங்கினார்.

கத்தரித்த முடியையும், கழற்றிய பூ நூலையும் ஆறு எங்கோ அடித்துச் சென்று கொண்டிருந்தது. நாட்டிலே உறவுகளைத் துறந்தவர் காட்டிலே துறவி களின் உறவிற்காய் தூங்காமல் நடந்தார். ஞானத்தின் வாசலை நா வினாவிய போது சிலரோ விடை தருவதிலிருந்து விலகி கொண்டார்கள்.

உத்தக்க ராமபுத்த, ஆலாரகாலாம இரு யோகிகளின் நட்பால் யோக தியானம் என்னும் கடலில் மூழ்கி எழுந்தாலும் ஞான முத்தை எடுக்க முடிய வில்லை. "யோக தியானம் என்னைப் புலனுணர்ச்சியற்ற நிலைக்கே கொண்டு செல்கிறது. ஞானத்தை நோக்கிக் கொண்டு செல்லவில்லையே. மனதை ஒருநிலைப் படுத்தும் தன்மையை நான் என்றோ பெற்றுவிட்டனே!"

வெறுமையால் அவர்களை விட்டு ஞானம் தேடி நடையைத் தொடர்ந்தார்.

ரிஷிகள் சிலரின் சகவாசம் கிடைத்திருந்தது. அவர்களின் அறிவுரையால், அப்பிரத் தியானத்தில் அமர்ந்தார். கையளவு உணவுடன் காலம் கழிந்தது. கண்கள் குழி விழுந்தன. விலா எலும்புகள் வெளித் தள்ளின. முள்ளந்தண்டும் முதுகை விட்டு வெளியே வந்துவிட்டது. இன்னமும் ஞானம் வந்து விடவில்லை. ஊசாட முடியாத உடல் நிலை, அயலில் உள்ள ஊரொன்றை நோக்கி நடக்கத் தொடங்கியவர் ஊரெல்லையிலுள்ள பரந்த ஆல மரத்தின் கீழ் அசதி சேரவே அமர்ந்து கொண்டார்.

***

அன்று சேனானிக் கிராமம் பூரணை நாளில் புதுக்கோலம் பூண்டிருந்தது. கிராமத் தலைவர் மகள் சுஜாத்தா சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தாள். அக் கிராமத்தவர் வணங்கும் தெய்வம் ஊரெல்லை ஆல மரத்தில் அமர்ந்து அருள் பாலிப்பதாக அவர்களுக்குள் ஒரு ஐதீகம், அஜபால என்னும் அன்பு நாமம் வழங்கி அன்று தொட்டு ஆராதித்து வந்தனர் அவ் ஆலமரத்தை. சுஜாத்தா நல்ல வரன் வேண்டி அங்கு வரம் வேண்டி னாள். அத்துடன் ஆண்பிள்ளை கிடைக்கவும் நேர்த்தி வைத்து குனிந்து வணங்கி நிமிர்ந்து நின்றாள். இரண்டும் கிடைத்த இரட்டிப்பு மகிழ்ச்சியில் வைத்த நேர்த்தியை

நிறைவேற்ற இன்று முயன்று கொண்டிருந்தாள். பசுப்பால் கறந்து நீர் கலக்காமல் அதில் பாயசம் காய்ச்சியே பாத்திரத்தில் இட்டு தோழிகள் தொடர அஜபாலவை நோக்கி அடியெடுத்து வைக்கிறாள். நெருங்கி சென்றவளுக்கு அடுத்து ஓர் ஆச்சரியம்! முகத்திலே தெய்வீக களையுடன் மெலிந்த ஆண் உருவம் அமைதியாக அமர்ந்திருந்தது.

"அடடா என் பக்தியை மெச்சி வரம் தந்த இறைவன், இன்று வருகையும் தந்து இருக்கிறானோ?" சிந்தித்தவள் அருகில் சென்று அமர்ந்திருந்தவர் முன் பாயாசப் பாத்திரத்தை வைத்து மும்முறை வணங்கிக் களிப்புடன் ஊர் திரும்ப, சித்தார்த்தரும் அருகில் உள்ள அருவியில் நீராடி களைப்புத் தீர பால் பாயாசம் அருந்தி அகமகிழ்ந்து கொண்டார்.

பொழுது சாய்கையில் பூரண சந்திரன் பொலிவுடன் வானில் மிதக்க பொடி நடையாகப் புறப் பட்டவர் பரந்து விரிந்த போதி மரம் ஒன்றின் கீழ் அமர்ந்து சிந்தனையை ஒரு நிலைப்படுத்தி தியானத்தில் ஆழ்ந்து கொண்டார். அன்று அவரிடத்திலே சம்போதி என்ற ஞான உதயம் தோன்றியிருந்தது.

சத்தாரி அரிய சச்சானி எனும் நான்கு உயரிய உண்மைகளை உணர்ந்து கொண்ட பூரணத்துவத்தால் புத்தராக மாறியிருந்தார்.

ஏழு வாரங்களை அவ்விடத்தில் கழித்த பகவான், தனவான் ஒருத்தன் கொடுத்த திருவோட்டை கையில் ஏந்தி சில சீடர்களுடன் ராஜகிருகம் என்னும் ராஜ்ஜியத்திற்குள் பிரவேசித்துக் கொண்டிருந்தார்.

***

ராஜகிருகத்தின் எல்லையோரம் வாழ்ந்து கொண்டிருந்த வயதான ஏழைப் பெண்மணி பூரணி உற்றார் உறவினர் அற்றவள். அங்குள்ள வீடுகளில் வேலைகள் செய்து வயிற்றை நிரப்புபவள். முதன்நாள் வேலை புரிந்த இடத்தில் கிடைத்த அரிசியை மாவாக்கி அன்றைய உணவுக்காய் மாவடை தாயாரித்து கொண் டாள். மாவடையை மடியிலே கட்டி ஆற்றோரம் நீர் அள்ளக் குடத்துடன் மெல்ல நடந்து சென்றவள், புன்னகை ததும்ப திருவோடு தாங்கிய துறவி ஒருவர் எதிரே வருவதைக் கண்டு கொண்டாள். அவரின் அமைதி தேங்கிய முகம் பூரணியை ஆட்கொள்ளவே மடியில் வைத்திருந்த மாவடையை திடீரென எடுத்து திருவோட்டில் போட்டு விடுகிறாள். அவளை அறியாமலே இரு கைகளும் தலைமேல் உயர வணங்கி நின்றவளை புத்தர் பெருமானும் வார்த்தைகளால் ஆசிர்வதித்துவிட்டே, அப்பால் சென்று சீடர்களுடன் மரம் ஒன்றின் கீழ் அமர்ந்து ருசித்துப், புசித்து பசியாறிக் கொண்டிருந்தார். பார்த்து நின்ற பூரணியும் பூரண மனநிறைவுடன் வீடு நோக்கி நடக்கத் தொடங்கினாள்.

***

முதன்மைச் சீடர் ஆனந்தர் உட்பட, அநேகர் பின் தொடர குசினாராவின் காட்டுப் பகுதி ஒன்றின் ஊடாக நடந்து சென்று கொண்டிருக்கிறார் புத்தர் பெருமான். கீழ் வானில் நிலவு தோன்றிக் கொண்டிருக்க தனது 80 வயதில் அடியெடுத்து வைத்துக் கொண்டிருந்தார்.

காட்டிலே வேட்டையாடும் கானக மனிதன் சுந்தன் அங்கு வசித்துக் கொண்டிருந்தான். விலங்குகளை வேட்டையாடிப் புசித்துக் கொண்டிருந்தான். அன்று புத்த பெருமான் வருவது பற்றி காற்று வந்து அவன் காதில் செய்தி சொல்லியிருந்தது. எதிர்பார்த்து இருந்தவன், அவர் வருகையில் கால்களில் விழுந்து ஆனந்தக் கண்ணீர் சிந்தி வணங்கி நிற்கிறான்.

இன்று இரவு உணவை வழங்கி வைக்கிறேன். வாழ்க்கையில் எனக்குக் கிடைத்தது ஒரு பாக்கியம்,வாய் மொழிந்தது வாக்கியம் புத்தர் பெருமான் வேண்டு கோளை ஏற்றுக் கொண்டார். அவனைத் தேற்றிக் கொண்டார்.

பன்றி இறைச்சி பரிமாறப்பட்டது. அண்ணார்ந்து அவரைப் பார்த்த சீடர்களைத் தவிர்த்து விடுமாறு தயவாய் உணர்த்தினார். மாமிசத் தவிர்ப்பை மக்கட் உணர்த்தியவர் தாவரம் புசித்து தவத்தால் உயர்ந்தவர் அவருக்கோ இன்று தர்ம சங்கடமான நிலை.

பக்தியுடன் படைத்தவனின் உணவைப் புசிக்க மறுத்தாலும் அவன் மனதை வாட்டுமே, மகிழ்ச்சியைப் போக்குமே. திருவோட்டில் இட்டதைத் திருப்பிக் கொடுக்க முடியாதே! என் தத்துவம் தவறாகி விடக் கூடாதே, சிக்கலில் இருந்து விடுபட பன்றி இறைச்சியை உண்டு விடுகிறார். சுந்தனின் மனதை வென்று விடுகிறார்.


***

புத்தர் பெருமானுக்கு வலி கடுமையாகிக் கொண்டிருந்தது. ஒரு கையால் வயிற்றை அமத்திப் பிடித்தவாறு மறுகையால் ஆனந்தரை அழைக்கிறார்..

"ஆனந்தரே சில வேளைகளில் நான் என் பிறப்பை அறுக்கக் கூடும். ஓர் தொடக்கத்திற்கு முடிவு எப்போதும் உண்டு. இது வழமை, இதனையிட்டு யாரும் கவலை கொள்ள வேண்டாம். சுந்தனை யாரும் நிந்தனை செய்தல் ஆகாது. அவன் தீமை நினைக்காத திறந்த மனம் உடையவன். பாசத்தின் உச்சத்தால் பசிக்கு உணவு இட்டவன். அவனைத் தூசிக்க வேண்டாம். ஆசீர்வசித்து விடுங்கள். எனது போதனைகளைத் தொடருங்கள். உலக மக்களின் இடர்களைக் களைந்திடும் வழியைக் கூறுங்கள்..."

தொடர்ந்து மௌனம் நிலவி விட புத்தர் பெருமான் பரிநிர்வாணம் அடைந்து கொண்டிருந்தார். தலை மாட்டில் ஆனந்தரின் கண்களில் இருந்து கங்கை வழிந்து கொண்டிருந்தது. வானின் உச்சியில் முழு நிலவு பிரகாசிக்க, மண்ணில் ஒளி தந்த நிலவு உலகைத் துறந்து கொண்டிருந்தது.

உலகில் அவரின் தத்துவ மலர்கள் இதழ் விரித்து நறுமணத்தை வீசத் தொடங்கியிருந்தன....




நூல் :
கோவர்த்தனம் (நாவல்)

ஆசிரியர் :
ஸ்ரீலேக்கா பேரின்பகுமார்

வெளியீடு : ஜீவநதி

விலை : 500.00

# நாடகத் துறையும் அரசியல் தலைவர்களும்

நாட்டிய கலாநிதி கார்த்திகா கணேசர்



பெரியாரும் அறிஞர் அண்ணாவும்

கலைமூலம் நசுக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணமும் உயர்வும் தேட வேண்டும்; சுபீட்சம் கிட்ட வேண்டும் என்று உழைத்த கலைஞர்களுக்கு உலக அரங்கில் முக்கியமான இடம் உண்டு.

கல்வி அறிவு இல்லாத மக்கள்; எதுவும் கற்று அறிய முடியாதவர்கள்; மூட நம்பிக்கை என்ற இருளிலே வாழ்ந்து மடிபவர்கள்; ஜாதி அடக்குமுறையின் தாங்க முடியாத கஸ்டங்களை அனுபவிப்பவர்கள்; அத்தனைக்கும் காரணம் தம் முற்பிறப்பில் செய்த பாவம் என நம்பும் அப்பாவிகள் மலிந்த இடமாக இருந்தது தமிழ்நாடு.

தாழ்த்தப்பட்டவர்களுக்காகக் குரல் கொடுத்தார் ஒருவர். அவர்தான் பிற்காலத்தில் மக்களால் பெரியார் எனப் போற்றப்பட்ட ஈ.வே.ராமசாமி நாயக்கர். படிப்பறிவற்ற மக்களுக்கு நாடகம் மூலம் அறிவுக் கண்ணைத் திறந்தார் பெரியார். அதனால் அதுவரை அடிமைத் தனமே தமது வாழ்வு என நம்பியிருந்த மக்கள் சிந்திக்க வழி பிறந்தது. திராவிடக்கழகமும் அதன் ஊழியர்களும் இவரோடு முன்னின்று உழைத்தார்கள். அவர்களில் முக்கியமானவர் க.நா. அண்ணாத்துரை என்ற கலைஞர்.

பெரியாரின் சிந்தனைக்கு நாடக வடிவம் கொடுத்து மக்களின் சிந்தனையைத் தூண்டியவர் அண்ணாத்துரை. பட்டி தொட்டி எங்கும் இவர்களின் நாடகங்கள் நடந்தன. க.நா. அண்ணாத்துரையின் நூல்களை வெளியிட்ட பாரி புத்தக நிலைய அதிபர் செல்லப்பன் ஒருமுறை, நாடகம் நடக்கும் இடங்களிலே இருக்கைகள் இருக்காது; தென்னோலைகளை வெட்டிக் கிடுகாகப் பின்னி அதன் மேல் உட்கார்ந்து, வெட்ட வெளிகளிலே தான் கிராமங்களிலே அண்ணாவின் நாடகங்களை மக்கள் பார்த்தார்கள்; எனக் கூறினார். ஆனாலும் அடக்கப்பட்டவர் என வாழ்ந்த சமூகத்தின் வாரிசுகள் இன்று தலைநிமிர்ந்து மற்றவர்களுக்குச் சமமாகக் கல்வியிலும் தொழில் முறையிலும் வளர்ந்துள்ளார்கள் என்றால் அதற்கு காரணம் அன்று திராவிடக்கழகம் செய்த அயராத முயற்சிகளே எனலாம்.

க.நா. அண்ணாத்துரை என்ற கலைஞனின் பெயர் பரவலாக நாடு பூராகவும் பரவி இருந்த காலம் அது. ஒரு நாளைக்கு 4,5 இடங்களிலே ஓடி ஓடி நாடகம் நடத்திய காலம் அது. நாடகம் ஒன்றே மக்களின் கண்களைத் திறக்கும் என்ற நிலை. அதனால் ஓய்வு ஒழிச்சல் இல்லாது நாடகங்களை நடத்தினார்கள். நாடகம் எழுதித் தயாரிப்பது அத்தனையும் அண்ணாத்துரை அவர்களின் பொறுப்பு. அவரைப் பார்க்க வேண்டும் அவரோடு பேச வேண்டும் என மக்கள் விரும்பிய காலம் அது!

ஒரு நாள் ஒரு நகரத்துக்கு இந்த நாடகக் குழு போய் இறங்கியதாம். வந்தவர்கள் விறு விறு என மேக்கப் போட்டுக்கொண்டு மேடை ஏறவேண்டியளவு நேரம் தான் இருந்தது. அதனால் முன் கூட்டியே நேர விரயம் ஏற்படாதிருக்கக் கருதி, அந்த நகரத்தில் இருந்த மேக்கப் கலைஞரும் உதவிக்கு அழைக்கப்பட்டிருந்தாராம். அவர் தான் எப்படியாவது அண்ணாத்துரைக்கு மேக்கப் போடவேண்டும் என ஆசைப்பட்டாராம்.

ஆனால் வந்த வேகத்திலே ஒரு நடிகர் அவரது கையைப் பிடித்து, உட்காரவைத்து, "நேரமாகிறது, சீக்கிரம் போடு" என்றாராம். வேறு வழியில்லாது அவரும் அந்த அசிங்கமான முகத்திற்கு மேக்கப் போட உட்கார்ந்தார். அண்ணா வுக்கு மேக்கப் போடவேண்டும் என்ற ஆசையெல்லாம் நிராசை யான நிலையில், முன்னால் உட்கார்ந்திருந்த முகத்திற்கு மேக்கப் களியை எடுத்து பொட்டு வைத்தார்.



சம்பிருதாயமாக முதலிலே மேக்கப் களியை பொட்டு போன்று நெற்றியில் வைத்து பின் முகத்தில் தடவப்படும் களிம்புடன் அதைச் சமப்படுத்தி விடுவது மேக்கப் சம்பிருதாயம். இதைச் செய்து முடித்ததும் மேக்கப் கலைஞர் தனது ஆர்வத்தை அடக்க முடியாது அவரைப் பார்த்து, "யாரப்பா அண்ணா" எனக் கேட்டாராம். அவருக்கு முன்னால் உட்கார்ந்திருந்தவர், "நான் தான் அப்பா அண்ணா" என்றாராம். ஒருபுறம் தாம் அண்ணாத்துரைக்கு மேக்கப் போட்டோம் என்ற சந்தோஷமும், மறுபுறம் அவரது கற்பனையில் ஆஜானுபவமான வாட்டசாட்டமான ஆளாக அவர் எதிர் பார்த்த அண்ணா அவர் இல்லையே என்ற ஏமாற்றமுமாகப் பல்வேறு உணர்ச்சிகளுக்கு ஆளானாராம்.

இவ்வாறு மக்களின் விடிவுக்காகத் தனது எழுத்தாலும் பேச்சாலும் நடிப்பாலும் உழைத்தவர் அறிஞர் அண்ணா.அரிதாரம் போட்டு நடித்த செயல் வீரர். மக்கள் தலைவன். பின்னர் தமிழ் நாட்டின்முதலமைச்சரும் ஆனார்.

அண்ணாத்துரை இறந்த போது தமிழ்நாடு என்றுமே கண்டிராதளவு கூட்டம் தமது இறுதி அஞ்சலியைச் செலுத்த சென்னையை நோக்கி வந்தது. மக்கள் தலைவனாக வாழ்ந்தவர் மாண்டபோது சென்னை மாநகர் பல நெருக்கடிகளுக்கும் இன்னல் களுக்கும் ஆளானது. பல பகுதிகளிலும் இருந்து வந்த மக்களைச் சமாளிக்க முடியாமல் திண்டாடியது சென்னை நகர். உணவுப் பற்றாக் குறையும் தண்ணீர் பற்றாக்குறையும் தங்குமிடப் பற்றாக்குறையும் ஏற்பட்டது. இதற் கென அவசரகால அடிப்படையில் அண்டை மாநிலங்களில் இருந்து அத்தியாவசியப் பொருட்கள் உடனடியாக வரவழைக்கப்பட்டன.

நாடகமானது பலரின் சிந்தனையைத் தூண்டுவது. அதே சமயம் அதில் நடிப்பவரோ தம்மில் இருக்கும் திறமையை தாமே உணரவும் வைப்பது. நடிகனானவன் இப்போது இருப்பதுபோல் அந்தக் காலத்தில் பயிற்சிக்கு உட்படுத்தப் படுபவன் அல்ல. நடிப்பு என்பது ஒருவனது சொந்தத் திறமை. இது கற்றுக் கொடுத்து வருவதல்ல. அவர்கள் தொடர்ந்தும் நாடக உலகில் இருப்பதால் அவர்களது திறமை மேலும் புடம் போடப்பட்டு செப்பனடைகிறது.

இலங்கையில் பிரதமராக இருந்த பிரேமதாஸ அதுவரை இலங்கையின் பிரதமர்களாக இருந்தவர்களைப் போல் கல்லூரிப் பட்டதாரியல்ல; சட்டத்தரணியும் அல்ல. இவர் சிறுவனாக இருந்த காலத்தில் Tower Hall Theatre என்ற நாடக சாலையில் நாடகம் சம்பந் தப்பட்ட துறைகளில் ஈடுபட்டவர். இவரது குடும்பம் அப்போது பின் தங்கிய குடும்ப பொருளாதார நிலை யில் சிக்கியிருந்தது. மேற்படிப்பைப் பற்றிச் சிந்திக்கக் கூட முடியாத நிலை. அதனால் பிரேமதாசாவை வளர்த்ததெல்லாம் Tower hall theatre இலிருந்த குழுக்களே.

இங்கு தான் இவர் தான் ஒரு சிறந்த எழுத்தாளன் என்பதை உணர்ந்தார். சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் வல்லமை யோடு சரளமாகப் பேசும் நாவன்மை படைத்திருந்தார். பிறேமதாசாவின் பேச்சைக் கேட்டவர்கள், "அவரது பேச்சு மக்களின் நரம்புகளிலே மின்சாரம் பாய்வது போன்ற உணர்வை ஏற்படுத்த வல்லது" என்பார்கள். இதையெல்லாம் அவர் Oxford லோ Cambridge லோ கற்றுக் கொள்ளவில்லை. நாடக மேடையே இதற்கு வழிகாட்டியது.

அத்துடன் சிறுவர்களுக்கான நாடகங்களை எழுதுவதில் கைதேர்ந்தவர் பிறேமதாஸா. இவர் அரசியலில் நுழைந்ததும் அரசியல் அறிவை வளர்ப்ப தற்காக இலங்கைப் பாராளுமன்றத்தில் இருந்து இலங்கை சுதந்திரம் பெற்ற காலத்தில் இருந்து வெளியான Hansard எனப்படும் பாராளுமன்ற நடவடிக்கைகளை தொகுத்துத் தரும் நூல்கள் அனைத்தையும் ஒன்று விடாமல் படித்து அரசியல் அறிவை வளர்த்துக் கொண்டார்.



எங்களுக்கொரு ஆங்கில நாடகத் தயாரிப்பாள ரான நண்பர் ஒருவர் இருந்தார். அவரின் பெயர் Haig Karunaratne. இவர் ஒரு ஆசிரியர். இவரது பாடசாலையில் தொழில் பார்த்த பிறிதொரு ஆசிரியர் பின்நாளில் பெரிய தொழிலதிபராக மாறினார். பெரிய உல்லாசப்பயணி களுக்கான Hotel கட்டினார். என்னுடைய கணவர், எங்கள் நாடகத் தயாரிப்பா ளரான Karunaratne ஐப் பார்த்து "ஏனப்பா, உன்னைப்போல ஆசிரியர் களெல்லாம் பெரிய தொழிலதிபர் களாகி விட்டார்கள்; ஆனால் நீ ஏன்



இன்னும் நாடகம் போட்டுக்கொண்டு திரிகிறாய்" என்று ஒரு நாள் கேட்டார். அதற்கு அந் நண்பர், "ஆமாம், அந்த ஆசிரியனின் கற்பனைகள் யாவும் கொங்கிறீற் கற்களாக உருவெடுக்கிறது; என் கற்பனைகள் யாவும் மேடையில் உருவாகி, மக்களின் மனதிலே வாழ்கிறது." என்று பதிலளித்தார்.

ஆமாம், கலையிலே தன்னை முழுதாக ஈடுபடுத்திக் கொண்ட கலைஞன் தனது கற்பனை களுடன் ஒன்றாகி வாழ்கிறான். அதிலே திருப்தியும் காண்கிறான். அவனுக்குப் பணமும் பொருளும் கொடுக்கும் இன்பம் அவன் உருவாக்கும் கலைகளுக்கு ஈடாகுமா? இது ஒரு கலைஞன் தன் கலை மூலம் பெறும் இறுமாப்பு.

இதையே இராமனைப் பாடுவதை தனது இலட்சியம்; சங்கீதமே தனது முழுமூச்சாக வாழ்ந்த தியாகப்பிரம்மம் எனப் போற்றப்படும் தியாகராஜ சுவாமிகள் 18ம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். இவர், மன்னன் தன் புகழைப் பாடும் படி கேட்டு பல்லக்கு, பொன், மணி, பொருள்கள் என்பவை யாவும் கொடுத்தனுப்பிய போதும் அதை ஏற்க மறுத்து, மன்னனைப் பார்த்து, "நிதிசால சுகமா" எனப் பாடினார். "எனது ஒப்பற்ற இசையை இராமபிரானுக்கே அர்ப் பணிப்பேன்; உனக்கல்ல; எனக்கு நீ கொடுக்கும் செல்வங்கள் எனது இசைக்குப் பேசும் விலை. இராமபிரானுக்கு என் இசையை அளித்து இன்பம் காண்பேன்; அவை நீ கொடுக்கும் செல்வத்தினை விடப் பெரியது", என பொருள் படும் "நிதி கால சுகமா" எனப் பாடினார்.

அந்தத் தியாகராஜரின் இறுமாப்பை; திருப்தியை எமது நண்பர் Haig இலும் நான் கண்டேன்.

# உத்தமியர்க்கும் உத்தமனார்க்கும் வேண்டுவது

**முற்பாயிரம்**

வெள்ளைநிற மல்லிகையோ
வேறெந்த மாமலரோ
வள்ளல் அடியினைக்கு
வாய்த்த மலரெதுவோ
உள்ளக்கமலமடி உத்தமனார் வேண்டுவது...
- விபுலானந்தர்

உள்ளக் கமலம்
உலர்ந்து மடிய
ஆர்த்தெழும் ஆங்காரம்
ஆன்மீகமென ஓங்கியெழும்
பிரமாண்டங்கள்
கோவில்கள் சிலைகள்
நின்று நிமிர
நிலைப்படுத்தி நிமிரும் மார்புகள்
உருவங்கள் அடையாளங்கள்
குறியீடுகள்
எழுச்சியில்
எல்லைகளைக் காவற்படுத்தும்
போர்க்கலை நிகர்த்த
நிபுணத்துவம்
ஆன்மீகம் இதுவென
மயங்கி மகிழும் புத்தி
செளும்பே செம்பென
ஆகிடும் வாழ்வு
முரண்பாடு மோதல்
பகைமை அழிவு என
அச்சத்தில் ஆழ்த்தி
சொர்க்கத்தைப் பூமியில்
தமதென ஆக்கி
மகிழ்வு வாழ்வில்
கொலுவிருக்கும் அதிகாரம்.....

உள்ளக் கமலமடி
உத்தமியர்க்கும்
உத்தமனார்க்கும் வேண்டுவது.
**- சி.ஜெயசங்கர்**

# ஆளுக்கொரு நீதி

சிவ.ஆரூரன்

ஒரு மாலை வேளை; நண்பி தணிகாவைச் சந்திக்க அவளின் வீட்டிற்குச் செல்கிறேன். நாமிருவரும் ஆரம்ப வகுப்பு முதலே ஒன்றாகப் படித்து வருபவர்கள். அடுத்தாண்டு க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கு உயிரியல் பிரிவில் தோற்றவிருக்கிறோம். அடுத்தவாரம் பாட சாலை தவணைப் பரீட்சை தொடங்கவிருக்கிறது. தற்போது கற்றல் விடுமுறை; தணிகா பாடத்தில் சந் தேகங்கள் கேட்டிருந்தாள்; அதனைத் தெளிவுபடுத்தவே இப்போது சென்று கொண்டிருக்கிறேன்.

அவளின் வீட்டுப் படலையூடு நுழையும் போது அவளின் அம்மா கண்டுவிட்டு என்னை உள்ளே கூப்பிடுகிறார். "தணி... சனா வந்திருக்கு..." என்கிறார்.

தணிகா வெளியே வருகிறாள். "சனா... உள்ள வாடி." தணிகா தன் படிக்கும் அறைக்குள் என்னைக் கூட்டிச் செல்கிறாள். "சனா, காந்தப்புலத்தில் ஒரு கணக்கு செய்யேலாமல் கிடக்கு. ஒருக்கால் செய்து காட்டுறியோ?"

"கொண்டு வா."




அவளுக்கு விளங்கப்படுத்துகிறேன். அவள் மேலும் சில சந்தேகங்களைக் கேட்க நான் தெளிவு படுத்துகிறேன். முக்கால் மணிநேரம் கடக்கிறது. "சனா... இரவு, நான் ரீ போட்டுக் கொண்டு வாறன். அம்மா சீட்டுக்காறரோட அலுவலா நிக்கிறா" என்று விட்டு தணிகா சமையலறைக்குட் செல்கிறாள். நான் அமைதியாக அங்கே உட்கார்ந்திருக்க விறாந்தையில் குழுமியிருக்கும் பெண்களின் பேச்சொலி நன்கு தெளிவாகவே கேட்கிறது. நான் ஜன்னலூடு எட்டிப் பார்க்கிறேன். எட்டுப்பேர் வரையில் அங்கு இருக் கின்றனர். அவர்கள் நிலத்தில் இருப்பதால் மேலே இருக்கும் ஜன்னலை அவர்கள் கவனிக்கவில்லை. நானும் தொடர்ந்து பார்த்துக் கொண்டிருக்காது, உள் நகர்ந்து கதிரையில் இருக்கிறேன். தணிகாவின் அம்மா "கூறல் சீட்டு" பிடிப்பதில் தாச்சிக்கு நிற்பவர். இன்று சீட்டுக் கூறும் நாள் என்பதால் அவர்கள் இங்கு கூடியிருக் கிறார்கள். அனைவரும் எம் ஊர்ப்பெண்கள் தான். வீட்டு வேலைச் சுமைகளுக்கு மத்தியில் இந்தச் சீட்டுக் கூறல் அவர்களுக்கு ஓர் ஒன்று கூடல் போல் தெரிகிறது. மிகவும் உற்சாகமாகப் பேசுகின்றனர். கேட்கச் சுவையாக வும் இருக்கிறது. ஒரு கற்பனையான நிகழ்ச்சி நிரலுக்கு அமைவாக ஊர்ப்புதினம் பேசுகின்றனர்.

இடையில் கனகா அக்கா பற்றிய பேச்சு வருகிறது. அது புதினமா புரளியா என சரியாக என்னால் கணிக்க முடியவில்லை. "ஓ... கனகான்ர வீட்டுக்கு அவன் வந்து போறவன் தான். நானும் காணுறனான்..." ஆனந்தா அன்ரி சந்தேகத்தை உறுதி செய்ய முனைகிறார்.

"ஓ... நானும் கண்டிருக்கிறன். "ஒன்றன் பின் ஒன்றாகப் பல குரல்கள் வழி மொழிகின்றன.

"பிழை விடுறவன் வீட்ட வரமாட்டான்." இது ஜெயந்தி அன்ரி.

"ஆ...ங் உது தான்! வெளிப்படையா வீட்டுக்கு வந்து போனால் ஆக்கள் பிழையா நினைக்கமாட்டினம் எண்டு தான் அவையின்ர நிலைப்பாடு" என்கிறார் ஆனந்தா அன்ரி. பேச்சு நீள்கிறது. கனகா அக்காவின் பெயர் அடிக்கடி பேசப்படுகிறது. அந்த "அவன்" பெயர் மட்டும் வெளியாகவில்லை. கவனமாகத் தவிர்த்து விடுகின்றனர்.

பொதுவாக ஊர்க்கதை பேசுவது அம்மாவுக்குப் பிடிக்காது. ஆனால் எனக்கு அதில் இரசிப்பு இருக்கிறது. என் வயதை ஒத்தவர்களோடு கூடிப்பேசுவதுண்டு. ஊர்ப்புதினப் பேச்சின் அனைத்து சூட்சுமங்களையும் அறிந்து வைத்திருக்கிறேன்.

"நீங்கள் என்ன சொன்னாலும் நான் நம்ப மாட்டன்!" என்கிறார் ஜெயலட்சுமி அன்ரி.

சிலர் எதிர்வாதம் முன்வைப்பது உரை யாடலைக் கூர்மையடையச் செய்வதற்குத் தான். இதுவும் ஒரு சூட்சுமம் தான். இப்போது ஜெயலட்சுமி அன்ரியும் புரளியை நம்புகிறார். மேலதிக விவரத்தை வெளியே எடுக்க விரும்புகிறார். எனக்குச் சிரிப்பு வருகிறது.

"ஜெயா, இதைக்கேள்..." என ஆனந்தா அன்ரி விவரமளிக்கிறார்: "இரண்டு பேரையும் ஒண்டா வைச்சு வெள்ளவத்தையில ஒராள் கண்டிருக்கு. ஏன் அங்கை போகவேணும்? கொஞ்சம் யோசியன்."

"ஆர் கண்டது?"

"அதை விடன்; அதோ முக்கியம். மற்றது, இப்ப கொஞ்ச நாளைக்கு முன்னம் கனகா ஏதோ வருத்தம் எண்டு ஆஸ்பத்திரியில இருந்தவள் எல்லோ. வயித்தில குழந்தை இருந்து கரைச்சதால தான் வருத்தம் வந்ததாம்."

"இதென்ன பழிக்கதை." ஜெயலட்சுமி அன்ரியின் குரலில் ஆர்வம் தெரிகிறது.

ஆனந்தா அன்ரி சாட்சி ஆதாரங்கள் மூலம் விளக்கம் கொடுத்து, தர்க்க ரீதியாகப் பேசுகிறார்.

இதுவரை ஆர்வமாக எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்த, அந்தக் கூட்டத்தில் இளைய வரான அஜந்தா அக்கா, "இப்பிடியான பொம்பிளை யால எங்களுக்கும் அவமானம்" என்கிறார். அவருக்கும் கனகா அக்காவுக்கும் கிட்டத்தட்ட சம வயது.

"பின்ன என்ன!"

கூட்டத்தில் வயது மூத்தவரான பாரதி அன்ரி இப்போது கூறுகிறார்: "கௌரவமா வாழுறதுக்கு இவையளுக்கு என்னவாம். இவளுக்கு நல்ல தாலிப்பலன் இருந்திருந்தால் புருசன் ஏன் சாகப் போறான். அவன் செத்துப்போனான்; இவளுக்கு ஆம்பிளைச் சுகம் தேவைப்படுது. ஒரு பிள்ளை இருக்குத் தானே. இது தான் கடவுளின்ர விதி எண்டிட்டு, பிள்ளையை வளத்து ஆளாக்க வேண்டியது தானே. ஒரு கதைக்கு, சத்தியாவும் இவளைப் போல புருசனை இழந்தவள் தானே. ஆராவது அவளின்ர விரல் மடிப்பினமோ?" ஜெயலட்சுமி அன்ரி சொல்கிறார்: "உண்மை தானுங்கோ. பாரதி அக்கா. சத்தியா என்னஆள்! புருஷன் சாகேக்க மகள் வயித்தில அவளை இஞ்சை கண்டோம், அங்கை கண்டோம் எண்டு ஆராவது சொன்னவையோ. வாழ்க்கையை ஒறுத்து வாழ்ந்தவள். இப்பவும் வாழுறாள்."

இப்போது தணிகாவின் அம்மா குறுக்கிட்டு, "சிந்தனா வீட்டுக்குள்ள நிக்குது" என்கிறார்.

திடீர் அமைதி ஏற்படுகின்றது.

"நாங்கள் சத்தியாவைப் பற்றி பிழையா ஒண்டும் கதைக்கேல்லைத் தானே." ஆனந்தா அன்ரி கூறுகிறார்.

எனக்கு சிரிப்பு வருகிறது. கூடவே பெருமை யாகவும் இருக்கிறது. சத்தியா வேறுயாருமல்ல; என்னுடைய அம்மா தான். நான் அம்மாவின் கருவில் இருந்த போது **1998** இல் அப்பா சாவடைந்தார். அப் போது அம்மாவின் வயது **32.** எனக்கு அண்ணா இருக் கிறார். என்னை விட ஆறுவயது கூடியவர். தற்போது பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கற்கிறார். அப்பா சாவடைந்த பிறகு, சித்தி வீட்டிலிருந்த அம்மம்மா எங்கள் வீட்டிலேயே வந்து இருந்தார். அப்பா அரச உத்தியோகத்தராக இருந்தமையால் அப்பாவின் பென்சன் எங்களுக்குக் கிடைத்தது. அம்மாவும் சும்மா வீட்டில் இருக்கவில்லை; சிறிதளவில் விவசாயம் செய்யத் தொடங்கினார். ஓட்டுக்குள் ஒடுங்கிக் கிடக்கும் ஆமை போல வீட்டுக்குள் தான் அவர் முடங்கிக் கிடப்பார். யார் வீட்டிற்கும் அம்மா தனியே செல்வ தில்லை. எப்போதும் அண்ணாவையும் தன்னோடு கூட்டிச் செல்வார். தவறிழைப்பதோ, அல்லது தவறிழைப்பது போல் வெளியே காட்டுவதோ ஒன்று தான். இரண்டிற்கும் சமூகம் ஒரே தண்டனையைத் தான் வழங்கும். சமூகத்தோடு பழகுவதில் அம்மா மிகவும் அவதானமாகவே இருந்தார்.

கனகா அக்காவும் அம்மாவின் நிலையில் தான் இருக்கிறார். மகள் பிறந்து ஓராண்டுக்குள்ளேயே தனது **26** வது வயதில், **2009** இல் விதவையாகியவர். இருவரும் போரில் மிகவும் உச்சமாகப் பாதிக்கப்பட்டவர்கள். அம்மா சமூகத்தைச் சரியாகக் கணித்திருக்கிறார். கனகா அக்கா இவ்விடத்தில் தவறிழைத்து விட்டார். அவர் மீது எனக்கு பரிதாபம் ஏற்பட்டாலும், அம்மாவைப் புகழ்ந்து பேசுவது எனக்கு மகிழ்வாக இருக்கிறது.

"என்ன, டொக்ரர் அம்மா... சிந்தனையோட... சிரித்தபடி, தேனீரோடு தணிகா வருகிறாள்.

"இன்னும் ஏ.எல் சோதினை எடுக்கேல்லை. அதுக்குள்ள டொக்ரரோ."

"நீ டொக்ரர் தான், அது உறுதி!"

"வரேக்கை பாப்பம்." சிரிக்கிறேன்.

"அண்ணன் எஞ்சினியர்: தங்கை டொக்டர். சத்தியா அன்ரி பெருமையோட கூட்டிக்கொண்டு போவா."

இருவரும் தேனீர்அருந்துகிறோம்.

நான் வீடு திரும்புகிறேன்.

அம்மா முற்றங்கூட்டிக்கொண்டு நிற்கிறார். "என்ன பிள்ளை, கொஞ்சம் பிந்திப் போட்டுது."

"தணிகா கொஞ்சம் டவுட் கேட்டவள்; கிளியர் பண்ணியிட்டு வாறன். அம்மா."

"சரி பிள்ளை."

அம்மாவைக் காணும் போது பெருமிதமாக இருக்கிறது. நடந்ததை அம்மாவோடு பகிர்ந்து கொள்ளவும் முடியாது. "நீ ஏன் மற்றாக்களின்ர கதையைக் கேட்டனீ?" என என்னைத் தான் ஏசுவார். "நான் சொல்லாட்டி என்ன, ஜெயலட்சுமி அன்ரி வந்து சொல்லிப் போட்டுத்தானே போவா" என நினைத்து மனதில் சிரித்துவிட்டு, கால் முகங் கழுவ கிணற்றடிக்குச் செல்கிறேன்.


தாமதமாகி ஜெயலட்சுமி அன்ரி வருகிறார். "என்னக்கா பொழுதுபடுற நேரம் வாறீங்கள்" அம்மா வியப்போடு. கேட்க, "உதால போகேக்கை சும்மா வந்தனான்..." என்றபடி அவர் அம்மாவை நெருங்கு கிறார்.

இருவரும் மாமரத்தின் கீழ் நின்று பேசு கின்றனர். அன்ரியின் பேச்சுக்கு அம்மா எதிர்வாதம் பேசு கிறார். சரியாக விளங்கவில்லை. கனகா அக்காவின் கதை யாகத்தான் இருக்க வேண்டுமென அனுமானிக்கிறேன்.

ஆளையாள் தெரியாத இருட்டு ஏற்படுகின்ற போது ஜெயலட்சுமி அன்ரி செல்கிறார். அம்மா குப்பையை அள்ளிக் கொண்டு சென்று கொட்டிவிட்டு வந்து ஓலைக் கடகத்தை தொம் என நிலத்தில் போடுகிறார்.

"அவள் ஒரு வாழ்விழந்த இளம் பொம்பிளை. அவள் ஏதோ பிழை விட்டிட்டாள். அதைத் தூக்கிப் பிடிச்சுக் கதைச்சுக் கொண்டு திரியினம் இவையள், புருசன் மாரோடை இருந்து கொண்டு.... பெரிய உத்தமியள் எல்லாரும்..." அம்மா ஏசிக்கொண்டு கிணற்றடிக்குச் செல்கிறார்.

அம்மா இந்தளவிற்குக் கோபப்பட்டதை நான் முன்பொருபோதும் கண்டதில்லை. இப்போது அம்மாவை நினைக்க எனக்குப் பெருமையாக இருப்பதைவிட பாவமாக இருக்கிறது.



# ஜெய் பீம் தோழர்

■ அ. யேசுராசா

இந்தியாவின் புகழ்பெற்ற ஆவணத் திரைப்பட நெறியாளரான **ஆனந்த் பட்வர்தன்** பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன்; Bombay Our City, In the Name of God, War and Peace, Reason என்பன அவற்றுள் சில. ஆயினும் இதுவரை, அவரது படைப்பாக்கம் எதையும் பார்க்கும் வாய்ப்புக் கிட்டியதில்லை.

அவரது '**ஜெய் பீம் தோழர்**' ஆவணப் படத்தைச் சில நாள்களின் முன் பார்க்க முடிந்ததில், மிக்க மகிழ்ச்சி! தமிழில் உப தலைப்புகளுடன்கூடிய இறுவட்டுப் பிரதியையே நான் பார்த்தேன்.

*11. 07. 1997* அன்று, வடகிழக்கு மும்பையிலுள்ள ராமாபாய் காலனியில் அமைந்திருந்த அண்ணல் **அம்பேத்கரின்** சிலை, செருப்பு மாலை போடப்பட்டு சேதமாக்கப்பட்டதில், ஒரு குழுவினரால் கலவரம் ஏற்படுகிறது. காவல்துறையினர் வந்து திடீரென கண்மூடித்தனமாகத் துப்பாக்கிச் சூடு நிகழ்த்தி, தடியடிப் பிரயோகமும் செய்ததில், தலித்துகள் பத்துப்பேர் கொல்லப்பட்டும் பலர் காயப்படுத்தப்பட்டும் உள்ளனர். கலவரத்தில் சம்பந்தப்படாத பகுதிகளிலுமுள்ள




தலித்துகள் பலர் தாக்கப்பட்டுக் கைதுசெய்யப்படுகின்றனர் (எங்களையே சுட்டுவிட்டு எங்கள்மீதே வழக்குத் தொடர்ந்திருக்கின்றனர்!" என்று, ஒரு பெண் மணி சொல்கிறார்.) ; சிலையைச் சேதமாக்கிய இந்துத்துவ அமைப்பின் உயர்சாதியினரோ, பக்கச்சார்பான காவல் துறையினரோ தண்டிக்கப்படவில்லை. தாக்குதல்களுக்கு ஆணையிட்ட காவல்துறை உயர் அதிகாரியான **மனோகர் கதம்**, பிணையில் வெளிவருகிறார்; பின்னர் நீதிமன்றால் தண்டனை விதிக்கப்பட்டாலும் அவர் சிறைக்குச் செல்லாமல், மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்படுகிறார். தலித்துகள் மீதான தாக்குதல்களினால் துயரடைந்த – தலித் கவிஞரும் பாடகருமான '**விலாஸ் கோக்ரே**', *15. 07. 1997* இல் தற்கொலை செய்கிறார். இவற்றைப் பின்னணியாக வைத்தே இந்த ஆவணப்படம் உருவாக்கப்பட்டது. ஆயினும், இவற்றுடன் தொடர்பான இன்னும் பல விடயங்கள் இணைக்கப்பட்டுள்ளன. சாதிய தீண்டாமையின் ஆதாரமான இந்துத்துவக் கொள்கைகள்/ அமைப்புகள், அவற்றினால் ஏற்கெனவே தலித்துகள் மீது மேற்கொள்ளப்பட்ட வன்முறைகள், அம்பேத்கரின் கருத்து வெளிப்பாடுகள் – அமைப்பு ரீதியான செயற்பாடுகள், "இந்துவாகப் பிறந்தேன் – ஆனால் இந்துவாக இறக்கமாட்டேன்" என்று கூறி, *1956* இல், பெரும் எண்ணிக்கையான தலித் மக்களுடன் பௌத்த மதத்திற்கு மாறியமை, தலித்தியக் கலைக் குழுக்கள் / அறிவூட்டும் பேச்சாளர்களால் தலித்துகளிடம் ஏற்பட்ட விழிப்புணர்வு, அவர்கள் வாழ்வியலில் ஏற்பட்ட முற்போக்கான மாற்றங்கள், சிவசேனையினதும் பாரதிய ஜனதா கட்சியினதும் தலித்துகளுக்கும் இஸ்லாமியருக்கும் எதிரான பேச்சுகள், அச்சுறுத்தல்கள், தாக்குதல்கள்; இதே சாதிவெறி அமைப்புகளுடன் இணைந்த – *1998* நாடாளுமன்றத் தேர்தல் சந்தர்ப்பவாதத்தில் திசைமாறிய 'குடியரசுக் கட்சி'யினர் போன்ற தலித் அரசியல்வாதிகள், அவர்கள் பற்றிய தலித் கலைக்குழுக்களின் ஆடல் பாடல்கள்மூலமான விமர்சனக் கருத்துகள் முதலியன, உண்மைத்தன்மையுடன் வெளிப்படுத்தப்படுகின்றன. இவையெல்லாம் செம்மையான திரைச்சுவடியாக்கத்தில் – தாக்குவலுவுள்ள காட்சிப்படுத்தல்களுடன், செம்மையான படத்



தொகுப்பில் கலையழகுள்ள “பிரச்சாரமாக” அமைந்து – சிறந்ததொரு ஆவணத் திரைப்படமாக என்னைக் கவர்ந்தது!

மராத்தி, ஹிந்தி மொழிகள் பேசி ஆங்கில உப தலைப்புகளுடனும் உருவாக்கப்பட்ட மூலப்பிரதியிலிருந்து, தமிழ் உபதலைப்புகளுக்கான மொழியாக்கத்தை **ஆர். ஆர். சீனிவாசன், மகிழ்நன், மில்லர், வி. ஏ. சூர்யா, மதியழகன் சுப்பையா** ஆகியோர் செய்துள்ளனர். பொதுவில் பாராட்டும்படியாக உள்ளபோதும், பாடல்களின் மொழியாக்கம் மட்டும் இன்னும் செம்மைப் படுத்தப்படலாம் எனத் தோன்றுகிறது.

***

இந்த ஆவணப்படத்தில் மனதில் பதிந்தவற்றில், வகைமாதிரிக்கு சிலவற்றை இங்கு பகிர்கிறேன்:

சாதி, மத, மாநில மறுப்புத் திருமணம் செய்த ஒரு தம்பதிக்கு, மூன்று சிறுமிகள்; ஒருநபர் அவர்களுடன் உரையாடுகிறார்.

“உங்கள் பெயரென்ன?”
“சம்தா.”
“சம்தா என்றால்?”
“சமத்துவம்.”
இரண்டாவது சிறுமியிடம் கேட்கிறார் :
“உங்கள் பெயரென்ன?”
“பிரத்ன்யா.”
“பிரத்ன்யா என்றால்?”
“அறிவு”

பிறகு, மூன்று சிறுமிகளும் சேர்ந்து பாடுகிறார்கள் :

“கடவுளே இல்லை விதியும் கிடையாது
எல்லாமே பொய்
மனிதனின் மனிதத்தன்மை
வானிலும் பரந்தது
கடவுள்கள் பேய்கள் சாத்தான்கள்
எல்லாமே பொய்கள்




சொர்க்கம், நரகம், பாவம், புண்ணியம்
அனைத்துமே பொய்.
அறத்திற்கும் அறமற்று இருப்பதற்கும்
இடையேதான் உண்மையான போர்!”

***

மூத்த தலித் போராளி ஒருவர் கூட்டத்தில் பேசுகிறார் :

“1947 இல் நமக்கு விடுதலை கிடைத்தபொழுது, இந்தியாவின் மக்கள் தொகை 35 கோடியாக இருந்தது.

அதில் 60 இலட்சம் மக்கள் தீண்டத்தகாதவர்களாக இருந்தனர். அதே வேளையில் 33 கோடி கடவுள்களும் இருந்தனர்.

35 கோடி மக்களை அடிமைத்தளையிலிருந்து விடுவிக்க, 33 கோடி கடவுள்களுக்கும் நேரம் கிடைக்கவில்லை.

கெடுவாய்ப்பாக 33 கோடி கடவுள்களையும் கைவிட்டுவிட்டோம்.

ஆனால் அம்பேத்கரை கடவுளாக்கிவிட்டோம்!
அண்ணலின் படங்களை
கழுத்தில் அணிகிறோம்
காலையில் எழுந்தவுடனே ‘ஜெய் பீம்’
படுக்கப் போகுமுன் ‘ஜெய் பீம்’
மது அருந்தும் பொழுதும் ‘ஜெய் பீம்’
அண்ணலே உங்களுக்கும் ஒரு கிளாஸ்
இதுதான் வழிபடுபவர்களின் பண்பாடு
அண்ணல் பௌத்தத்தைத் தழுவினார்
ஆனால், அண்ணல் வழக்கமான
பௌத்தத்தை ஏற்கவில்லை.
எதைப் படித்தாலும் அதைக் கேள்வி கேட்டார்.
மதத் தலைவர்களையும்
அரசியல்வாதி களையும்
நீங்கள் கேள்வி கேட்கவேண்டும்.
கேளுங்கள் மக்களே!
கடவுள் கோவில்களிலோ
சிலைகளிலோ இல்லை
ஏழைகளுக்கான தொண்டில்தான்
கடவுளைக் காண முடியும்.”

* * *

இந்தியாவில் தினமும் 2 தலித்துகள் கொல்லப்படுகிறார்கள். 3 தலித்துகள் வன்புணர்வுக்கு ஆளாகிறார்கள்.

–தேசிய குற்ற ஆய்வுக் கழகம் (2009)

* * *

ஒருவர் பாடுகிறார் :

“என்ன நடந்தது என்பதை அறி
அதைத் தாண்டிச்செல்ல போராடுங்கள்
ஒற்றுமை வாகனத்தின் லகானைப் பிடியுங்கள்
பற்றியெரிகிறது மராத்வாடா!
....
தலித்துகளே! ரத்தம் சூடேறட்டும்
அநீதியை எதிர்த்துப் போராடுங்கள்
தலித்துகளே! போராட்டக்களத்தில்
வாழ்வதற்காக சாகத் துணியுங்கள்

–கவிஞர் விலாஸ் கோக்ரே

என்ன நடந்தது என்பதை அறி
ஒற்றுமை வாகனத்தின்

லகானைப் பிடியுங்கள்
பற்றியெரிகிறது மராத்வாடா!"
* * *

தெலங்கானாவின் புரட்சிகரப் பாடகர் '**கத்தார்**' முன்பு வந்து, விலாஸ் கோக்ரேயுடன் தங்கியிருந்திருக்கிறார். கத்தார் பாடுவதும் அவர் கருத்துச் சொல்வதும் காட்டப்படுகின்றன. கத்தார் சொல்கிறார்:

"விலாசின் வருகைக்குப் பிறகுதான் **ஆவ்ஹான் கலைக்குழு**விற்கு எழுச்சி கிடைத்தது. முதலில் மனத்தைக் கவர்வது குரல்தான். மீராவை எடுத்துக் கொள்ளுங்கள், துக்காராமை எடுத்துக்கொள்ளுங்கள். சிறிய இசைக்கருவியைக்கொண்டு அவர்கள் கிருஷ்ணனாகவும் ராமனாகவும் ஆகியிருக்கிறார்கள். சின்னதொரு இசைக்கருவியைக்கொண்டு எங்களைப் போன்ற மக்கள் பாடகர்கள், புரட்சிகரக் கவிஞர்கள் - புழுதியிலிருந்து வந்த நாங்கள், அவர்களின் முறையைப் பின்பற்றுகிறோம். அதனால்தான் மக்களை ஈர்க்கும் இடத்தில் நிற்கிறோம்."
* * *

**பாய் சங்காரே**, மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்திய அவர்களால் மிகவும் நேசிக்கப்பட்ட - முக்கியமான தலித் பேச்சாளர். அறிவுபூர்வமான கருத்துகளை, இலகுவான மொழியில், சிரித்துச் சிரித்துக் "கேலி கிண்டல்"களுடன் மக்களிற்கு வெளிப்படுத்துவார். அம்பேத்கர் 1927 இல், மஹாடியிலுள்ள சவ்தார் ஏரிக்கு அருகில் மனு ஸ்மிருதியை எரித்தார். பிந்திய காலங்களில், பாய் சங்காரே ஆண்டுதோறும் அவ்விடத்தில் மனுஸ்மிருதியை எரிக்கும் வழக்கத்தைக் கொண்டிருந்தார். அவ்வாறு, 20. 03. 1999 இல் எரிக்கும்போது, இந்துத்துவவாதிகளால் கொல்லப்பட்டார். மக்கள் கூட்டத்தின் முன் தனது சொற்பொழிவில் ஒருமுறை, இவ்வாறு சொன்னார்:


"கடவுளைப் பற்றிய பேச்சு பயனற்றது என்று புத்தர் சொன்னார். ஆத்மாவைப் பற்றிப் பேசுவதும் வீண். கடவுள் இருந்தாலும் அது உங்களிடையே பெரிய மாற்றத்தை ஏற்படுத்தாது. கடவுள் இல்லாவிட்டாலும் அது உங்களிடையே பெரிய மாற்றத்தை ஏற்படுத்தாது. ஆகையால் புத்தர் கடவுளைப் பற்றியோ ஆத்மாவைப் பற்றியோ பேசவில்லை. பரமாத்மாவைப் பற்றியும் பேசவில்லை. மனிதனின் இருப்பைப் பற்றி மட்டுமே பேசினார். இறப்பிற்குப்பிறகு என்னவாகும் என்பதைக்கூட அவர் பேசவில்லை. பிறப்பிற்கும் **இறப்பிற்கும் இடையில் உள்ள பயணத்தில் நாம் எப்படி நடந்துகொள்ளவேண்டும்** என்பதைப் பற்றி மட்டுமே, **புத்தர்** பேசினார்."
***

மும்பை உயர்நீதிமன்ற வழக்கறிஞரான பி. ஏ. செபாஸ்டின் சொல்கிறார் :

"ஸ்ரீ கிருஷ்ணா கமிஷனின்படி, ஜனவரி 1993 ஆம் ஆண்டின் கலவரமானது இந்துத்துவ சக்திகளால் ஒருங்கிணைக்கப்பட்டது. குறிப்பாக **பால் தாக்கரே** தன் விசுவாசப் படைகளுக்குக் கட்டளையிட்டு இஸ்லாமியர் மீதும் அவர்தம் உடைமைகள்மீதும் வன்முறையை ஏவிவிட்டபொழுது, **மும்பைக் காவல்துறை மென்மையாக வேடிக்கை பார்த்தது!**"

மனித உரிமைச் செயற்பாட்டாளரான புஷ்பா பாவே கூறுகிறார் :












*"மும்பையில் வேலையற்ற விரக்தியுற்ற இளைஞர்கள்,* **சிவசேனை** *போன்ற கட்சிகளால் தவறாகவும் மூளைச்சலவை செய்யப்பட்டும் வருகின்றனர். தங்கள் பிரச்சினைகளுக்கு* **தமிழர்களின் ஆக்கிரமிப்பே** *காரணம் அல்லது மற்ற மதத்தினர் தான் காரணம் என்று நம்பவைக்கப்படுகின்றனர். உண்மையான எதிரி யாரென்று அவர்களுக்குச் சொல்லப்படுவதே இல்லை."*

* * *

*1998 தேர்தல் சூழலில், பாரதிய ஜனதா / சிவசேனைக் கட்சிகளின் பொதுக் கூட்டமொன்று நடக்கிறது. மகாராஷ்டிர* **மாநில முதல்வர் மனோகர் ஜோஷி** *பேசுகிறார்: "சிலருக்கு சிவசேனை என்ற பெயரை ஜீரணிக்க முடிவதில்லை. ஸ்ரீ கிருஷ்ணா கமிஷன் (1992 – 93 கலவரம்) மும்பையின் பாதுகாவலர்மீது குற்றம் சாட்டியது. நாளை நான் பால் தாக்கரே அவர்களைக் கைதுசெய்யும் நிலை வந்தால்,* **முதல்வர் பதவியை ராஜிநாமா செய்வேனே தவிர, பால் தாக்கரேயைக் கைது செய்ய மாட்டேன்."**

*அதே மேடையில், சிவசேனைத் தலைவர் பால் தாக்கரே : "என்மீதான ஸ்ரீ கிருஷ்ணா கமிஷனின் புகாரை எடுத்துக்கொள்ளுங்கள். நான் கூற விரும்புவதெல்லாம் நான் கைதுசெய்யப் படும்போது அவர்களும் மும்பையில் இருக்கவேண்டும். இங்கே இருக்கவேண்டும்.* **அப்பொழுதுதான், மும்பை எரியும்பொழுது அந்தத் தீயில் அவர்களைத் தூக்கிப்போட முடியும்.** *சுன்னத் செய்யப்பட்டவர்கள்மீது நேசமா? யார் இந்த மனித உரிமை ஆர்வலர்கள்?* **அவர்கள் சுட்டு வீழ்த்தப்பட வேண்டும்."**

* * *

*இந்த நாசகார சக்திகளுடன்தான், தலித்துகளின் 'குடி அரசு;க் கட்சித் தலைவர்கள், சந்தர்ப்பவாத தேர்தல் கூட்டில் இணைகின்றனர்' அது விமர்சிக்கப்படுகிறது.* **'கபீர் கலா மஞ்ச்'** *குழுவினர், மக்கள் முன் மேடைகளில், ஆடல் பாடல்களுடன் உணர்ச்சிகரமாகத் தமது விமர்சனங்களை வெளிப்படுத்துகின்றனர்!*

*"நம் தந்தை அம்பேத்கரின் பெயரால்*
*எப்படி சந்தை களைகட்டுகிறது பாரீர்!*
*எப்படி அண்ணல் காயப்படுத்தப் படுகிறார் பாரீர்!*
*நாம் எத்திசையை நோக்கி நகர்கிறோம் பாரீர்!*
*அம்பேத்கரின் சமத்துவத் தேரை*
*பின்னோக்கி இழுத்தவர் எவர்?*
*அந்தத் தேரை ஏலம் விட்டது யார்?*
*...*
*நம்மை அம்பேத்கர்*
*போராடச் சொன்னார்*
*படித்தவர்கள் ஒன்றுபட்டார்கள்*
*பின்னர்*
*சமரசம் செய்துகொண்டார்கள்...."*

* * *

*காவல்துறையின் கெடுபிடிகளால், ஷீத்தல் ஷாதேவ் என்னும் தலித் போராளிப் பாடகியும் 'கபீர் கலாமஞ்ச்' கலைக் குழுவினரும் தலைமறைவு. "இவர்கள் இதுவரை குற்றமிழைக்கவில்லை; ஆனால் இனிமேல் குற்றம் இழைக்கலாம் என்பதால்தான் தேடுகிறோம்" என்று, போலியாகச் சொல்கிறது காவல்துறை!*

*ஷீத்தல் ஷாதேவின் தாய் சொல்கிறார் :*

*" 'ஒருபோதும் ஆயுதம் எடுக்கமாட்டோம்' என்று ஒவ்வொரு கலைநிகழ்வின் போதும் என் பிள்ளைகள் வாக்குறுதி அளிப்பார்கள். "பாடலாலும் பறையாலும் மட்டுமே உலகை மாற்றியமைப்போம்; என்று கூறுவார்கள். இதுபோன்ற பேய்களின் வேட்டையால், அவர்கள் தலைமறைவாக இருக்கிறார்கள். அவர்கள் பகிரங்கமாக வெளிவரவேண்டுமென்பது என் விருப்பம். அவர்கள் குற்றமற்றவர்கள் என்பதை இந்த நாடு உணரட்டும். இந்த நாட்டில் ஏழைகளுக்காக நாங்கள் பேசினோம். 'நக்சலைட்' முத்திரை குத்துவதன் மூலம் சாவித்திரிபாயின் அழியாப் புகழைக் கெடுக்கிறீர்கள். அம்பேத்கரின் உலகப்பார்வை உட்பட, அனைத்துலகப் பார்வைகளையும் மூடுகிறீர்கள். பிறகு நீங்கள் நடத்தும் உலகம்தான் என்ன?"*

* * *

*நமது சூழலிலும், சமூக அரசியல் பிரச்சினைகளை மக்கள் முன் கொண்டு சென்று விழிப்பூட்டும் தீவிரச் செயற்பாடுகள் எவ்வாறு அமையலாம் என்ற படிப்பினையைத் தருவதாக இருப்பதும், இவ்வாவணத் திரைப்படத்தின் முக்கியத்துவத்தை அதிகரிக்கிறது!*

*– 24. 09. 2022*





நூல்: மகிழ்ச்சிப் பேரிகை
(சிறுகதைத்தொகுதி)
ஆசிரியர் : திக்வெல்லை கமால்
வெளியீடு : ஜீவநதி
விலை : 400.00




நூல்: உள்ளக வெளியில் அரங்கு
(கட்டுரைத்தொகுதி)
ஆசிரியர் : கதிரேசு ரதிதரன்
வெளியீடு : ஜீவநதி
விலை : 1000.00




நூல்: சத்தியமும் சாத்தியமும்
(கட்டுரைத்தொகுதி)
ஆசிரியர் : கொற்றை பி. கிருஷ்ணானந்தன்
வெளியீடு : ஜீவநதி
விலை : 500.00

# இன்னொரு தாஜ்மகால் கண்ட கனவு

கண்களைக் கசக்கியவாறே அவள் நித்திரை விட்டெழுந்தாள். கதவைத் திறந்து வெளியே வந்தாள். சூரியன் தன் கதிர்களை வாசலில் விரிக்க ஆயத்தமாகிக் கொண்டிருந்தான். மல்லிகைச் செடியிலிருந்து சில பூக்கள் நிலத்தில் விழுந்து கிடந்தன. வாசலைக் கடந்து வீதியின் அருகே வேலியோரம் வந்து சேர்ந்தாள். காகமொன்று செத்த எலியைக் கால்களுக்கிடையே வைத்துக் கொத்திக் கொண்டிருந்தது. நேரம் ஆறு மணியை முத்தமிட ஆரம்பித்தது. படலையைத் திறந்து வீதியைப் பார்த்தாள்.

யாரையோ எதிர்பார்த்துத்தான் வாசலுக்கு வந்தாளா? தலைநகரில் தொழில் செய்யும் தன் காதலனுக்கு சிறிய பார்சலொன்றைக் கொடுத்தனுப்பு வதற்காக அவள் யாரையோ எதிர்பார்த்தாள். வீதியில் யாரும் வரவில்லை.

மீண்டும் வீட்டுக்குள் வந்தாள். மேசையின்மீது காதலனுக்கு அனுப்பவெனத் தயார் செய்து வைத்திருந்த சிகரெட் பெட்டி அளவிலான பார்சலில் எழுதியிருந்த விலாசத்தை வாசித்துப் பார்த்தாள். மீண்டும் வாசித் தாள். காதலனின் பெயரை உச்சரிப்பதும் பல தடவைகள் அதனை வாசிப்பதும் காதலிகளுக்குச் சந்தோசமான விடயம்போலும். தான் உயிருக்குயிராக நேசிக்கும் தன் அன்புக் காதலனுக்கு அனுப்பும் பிறந்தநாள் பரிசு அல்லவா. காதலித்ததும் வாக்குறுதிகளைப் பரிமாறிக் கொண்டதும் ஒரு வருடம் கடக்காதநிலையில் காதலனின் பிறந்த நாளுக்குப் பரிசுப் பொருள் அனுப்பும் முதல் சந்தர்ப்பம் இதுதான். தன்னையும் தன் காதலை யும் நேசிப்பதுபோல் இந்தப் பரிசுப் பொருளைப் பார்த்து தன் காதலன் எப்படியெல்லாம் மகிழ்ச்சி அடைவான் என்பதை கற்பனை பண்ணிக் கொண்டாள்.



காதலனுடனான சந்திப்பு வழமையாக அவளின் வீட்டில்தான் சம்பவிக்கும். முன்னர் ஒரு தடவை வீட்டுக்கு வந்தவன் தனக்குக் கொழும்பிலே தொழில் ஒன்று கிடைத்திருப்பதாகவும் அதனைச் சொல்லிவிட்டுப் போக வந்திருப்பதாகவும் சொன்னது அவளின் ஞாபகத்துக்கு வந்தது. இரண்டொரு மாதங் களுக்கு அவளைச் சந்திக்க முடியாதிருக்கும் என்பதை எண்ணி அவளைக் கண்களால் விழுங்கியதையும் மார்பகங்களுக்கிடையே பதக்கம் இல்லாமல் தொங்கிக் கொண்டிருந்த தங்கச் சங்கிலியை உற்றுப் பார்த்து அவளைப்போலவே தானும் பொருளாதார வசதி இல்லாதவன் என்று மறைமுகமாக அவன் சொன்னதை யும் இரைமீட்டிப் பார்த்தாள். அன்றைய சந்திப்புக்குப் பின்னரான நிலையில் அவனின் பிறந்தநாள் வந்து அவள் மனதைச் சந்தோசப்படுத்தியது. சிகரெட் பெட்டி அளவிலான பார்சலில் இருப்பது அவனின் பிறந்தநாளுக் கான பரிசுதான்.

படலை தட்டப்படும் சத்தம் கேட்டது. எதிர்பார்த்தபடி காதலனின் நண்பனொருவன் பயணப் பொதிகளோடு நின்றிருந்தான். உள்ளே வருமாறு அழைத்தாள். காலைத் தேனீர் அருந்திவிட்டுப் செல்லு மாறு கேட்டாள். பஸ்ஸுக்குத் தாமதமாகிவிட்டதாகச் சொல்லவும் கையிலிருந்த பார்சலைக் கொடுத்து தனது காதலனிடம் சேர்ப்பிக்குமாறு கேட்டுக் கொண்டாள். பார்சலை வாங்கியவன் உடனே கிளம்பினான். காதலனை ஒரு கணம் மனதுக்குள் நினைத்துக்

ஏ.பீர் முகம்மது

கொண்டே மீண்டும் வீட்டுக்குள் நுழைந்தாள்.

கொழும்பு வந்தவன் அன்று இரவே தான் கொண்டு வந்த சிறிய பார்சலை நண்பனிடம் கொடுத்தான். பின்னர் இருவரும் கடையொன்றினுள் சென்று தேனீர் அருந்திவிட்டு வெளியில் வந்தனர். வந்த வேலை முடிந்தால் நாளை மாலை ஊர் திரும்ப உத்தேசம் என்று நண்பனுக்குச் சொன்னான்.

பத்து நாள் இடைவெளியில் காதலர்கள் இருவரினதும் பிறந்த தினங்கள் அமைந்ததால் அவளைப் போலவே அவனும் யாரிடமாவது கொடுத்தனுப்பலாம் என்று பரிசுப் பொருளொன்று வாங்கி வைத்திருந்தான். இப்போது நல்ல சந்தர்ப்பம்.

ஊர் போனதும் தனது காதலியிடம் கொடுக்குமாறு சிறிய பார்சலொன்றை நீட்டினான். அவளின் பிறந்தநாள் பரிசாக இதனை வாங்கியதாகச் சொன்னான். நகைக் கடைகளில் தருகின்ற மோதிரப் பெட்டியொன்றின் அளவிலான சிறிய பார்சல் அது. இரண்டு மாதங்களின் பின்னர் ஊர் வருவேன் என்று தகவலும் சொன்னான்.

காதலர்களின் அன்பளிப்புகளை காவிச் செல்வதுதான் தனது வேலை என்று நக்கலாக நண்பன் மறுமொழி சொன்னான்.

நண்பனை அனுப்பிவிட்டு அவசர அவசரமாக அறைக்கு வந்து தன் காதலி கொடுத்தனுப்பிய பார்சலைக் கையிலெடுத்தான். அதில் எழுதியிருந்த தன் பெயரையும் விலாசத்தையும் பல தடவைகள் வாசித் தான். அச்சுப் பதித்ததைப்போல தனது பெயரை எழுதும்போது அவள் எப்படி மகிழ்ச்சி அடைந்திருப் பாள் என்பதைக் கற்பனை பண்ணி அவனும் மகிழ்ந்தான். பார்சலை உடைத்துப் பார்த்தான். பரிசுப் பொருளோடு மிகப் பெரும் ஆச்சரியமும் பார்சலின் உள்ளே இருந்தது.

பிறந்தநாள் பரிசாக தங்க முலாம் பூசப்பட்ட கடிகாரக் கைப்பட்டியொன்றை அவள் அனுப்பி யிருந்தாள். இந்தப் பொருளை ஏன் தெரிவு செய்தாள்? அவன் அவனுக்குள் குழம்பினான்.

நேரடியாகச் சந்தித்து பிரியாவிடைபெற அவளின் வீட்டுக்குச் சென்றபோது அங்கு நீண்ட நேரம் கதைத்திருந்தது ஞாபகம் வந்தது. அவன் கட்டியிருந்த தங்க முலாம் பூசிய கடிகாரத்தைப் பார்த்து "அழகாக இருக்கிறது" என்று அவள் சொன்னதும் கூடவே ஞாபகத்துக்கு வந்தது.

வெளிநாட்டிலிருக்கும் நண்பன் ஒருவன் கைப்பட்டியில்லாமல் இந்தக் கடிகாரத்தை மட்டுமே அனுப்பினான். கையில் போதிய பணம் இல்லாததால் தோலினால் செய்யப்பட்ட கறுப்பு நிற சாதாரண பட்டியை நானே வாங்கிக் கட்டிக் கொண்டேன். பணம் சேர்ந்ததும் தங்க முலாம் பூசிய பட்டியொன்றை வாங்கிக் கொள்ளலாம் என்று அவன் பதில் சொன்னதும் நினைவுக்கு வந்தது.

கடிகாரத்தின் பெறுமதிக்குத் தக்கதாக தங்க முலாம் பூசிய கைப்பட்டியொன்றை வாங்கிக் கொள்ளக் காத்திருக்கிறேன் என்று அவன் சொன்னதை ஞாபகம் வைத்து இந்தப் பரிசை அவள் தெரிவு செய்திருக்கிறாள் என்பதை ஊகித்துக் கொண்டான். அதற்காக அவளுக்கு நன்றி செலுத்த வேண்டியதுதான். ஆனால் கடிகாரம் இல்லாமல் கைப்பட்டி இருந்து என்ன பயன்?

அவனின் தலை இப்போது அவனுக்குப் பாரமாக இருந்தது. தான் கட்டியிருந்த தங்க முலாம் பூசிய கடிகாரத்தை விற்று அதன்மூலம் பெற்ற பணத்தில்தான் அவளுக்குப் பிறந்தநாள் பரிசாக அவள் கழுத்திலே அணிந்திருந்த தங்க மாலைக்குப் பதக்கம் வாங்கி அனுப்பியிருந்தான்.

ஊர் போய் அவளைச் சந்தித்தால் கையில் கடிகாரம் இல்லாத காட்சிதானே அவளுக்கு முதலில் தெரியும். அவள் அதுபற்றி விசாரித்தால் விடை என்ன? உண்மை சொல்வதா? கடிகாரத்தை விற்றுத்தான் பதக்கம் வாங்கி அனுப்பினேன் என்பதா? வேறு காரணம் முன்வைப்பதா? மனம் பரிதவித்தது.

கட்டிலில் போய் சாய்ந்து கொண்டான். கடிகாரச் சிக்கலில் இருந்து மனதை விடுவித்தான். அடுத்த நாள் காலை தான் அனுப்பிய பரிசுப் பொருள் கிடைக்கும்போது அவள் அடையும் மகிழ்ச்சி நிலையை கற்பனை செய்து கொண்டே நித்திரைக்குத் தயாரானான்.

பொழுது விடிந்தது. அவளுடைய வீட்டு வேலியில் காகம் ஒன்று கரைவதும் பின்னர் வாசலுக்கு இறங்கி வந்து கத்துவதுமாக இருந்தது. காகத்தின் இவ்வாறான நடத்தை ஏதாவது விசேட செய்தி யொன்றின் முன்னறிவிப்பு என்பது ஊரவர்களின் நம்பிக்கை.

சற்று நேரத்தில் தான் பார்சல் கொடுத்தனுப்பிய தனது காதலனின் நண்பன் சிறிய பார்சலொன்றைக் கொடுத்து விட்டுச் சென்றான். அவள் மனதுக்குள் வெண்ணெய் திரண்ட சந்தோசம். பார்சலை உடைத்துப் பார்த்தாள். தனது கழுத்துச் சங்கிலிக்குப் பொருத்தமாக தங்கத்தால் ஒரு பதக்கம் இருந்தது.

தனது காதலன் தொழில் பெற்று கொழும்புக் குப் போக முன்னர் தனது வீட்டுக்கு வந்தது. தனது கழுத்தில் கிடந்த பதக்கமில்லாத தங்கச் சங்கிலியை அவன் பார்த்தது. எல்லாம் அவளுக்கு ஞாபகம் வந்தது. பதக்கம் வாங்கியதற்கான காரணத்தை அவள் விளங்கிக் கொண்டாள்.

அவளிடமிருந்து காதலனுக்குச் செய்தி பறந்தது. பதக்கமொன்றைப் பிறந்த நாள் பரிசாக வாங்கி அனுப்பியதற்காக செய்தியில் அவனுக்கு நன்றி சொல்லியிருந்தாள்.

ஆனால் அந்தப் பதக்கத்தைக் கொழுவ தங்கச் சங்கிலி அவளிடம் இல்லை. அதனை விற்றுப் பெற்ற பணத்தில்தான் காதலனுக்குப் பிறந்தநாள் பரிசாக தங்க முலாம் பூசிய கடிகாரப் பட்டியொன்றை அவள் வாங்கி அனுப்பியிருந்தாள்

காகம் வேலியில் தொடர்ந்து கரைந்து கொண்டிருந்தது.

# 8 குடும்பம் என்றொரு கோயிலிலே...

கோகிலா மகேந்திரன்

உண்மையில் திருமணமாகிக் குடும்பம் ஒன்று உருவாகும் நேரத்தில், சாகசம் போன்ற துணிகர நகர்வு ஒன்று ஆரம்பமாகிறது எனக் கொள்ளலாம். நல்ல முறையில் அமைகின்ற ஒரு திருமணத்தில் சம்பந்தப்படு கின்ற இருவரும் விரும்பும் வளர்ச்சியைப் பெறுவதற்குக் குடும்பம் இடம் தரும். அவர்கள் காட்டும் ஆளுக்கா ளான அன்பு இந்த வளர்ச்சியை அநுமதிக்கும். காலம் மெல்ல நழுவிச் செல்லச் செல்லத் திருமணத்தை இணைத்து வைத்திருப்பது தாலியோ, மோதிரமோ, எதிர்ப்பால் கவர்ச்சியோ இல்லை. வாழ்வின் ஒவ்வொரு நகர்விலும் போடப்படும் நூற்றுக் கணக்கான நூல்கள் அவர்களின் பிணைப்பை இறுக்கி, இறுக்கிக் கொண்டு வரவேண்டும்.

நல்ல மனைவி, நல்ல கணவர், நல்ல பிள்ளை, நல்ல குடும்பம் தெய்விகம் என்று கூறுவது சுலபந்தான்! அப்படி அமையவில்லையாயின் என்ன செய்யலாம்? தம்பதியினர் தமக்குள் உருவாகிப் பெரும் பூதமாக வளரத் தொடங்கியிருக்கும் முரண்பாடுகள், பிரச்சினை களைத் தீர்த்துக் கொள்ளவும், தமது உறவை மேலும் மேம்படுத்துவதற்காகவும் உதவி நாடிச் செல்லலாம். முறையாகப் பயிற்சி பெற்ற குடும்ப உளவளத்துணை யாளர்களால் இந்த உதவியைச் செய்ய முடியும். மேலைத்தேய நாடுகளில் பெரும்பாலும் சிலவேளை இங்கே என்றாலும் இத்தகைய ஒரு உதவியின் பின் தாங்கள் பிரிந்து போக விரும்புவதாகவும் உறுதியான முடிவு எடுக்கக் கூடும். அப்படித் தான் அவர்கள் முடி வெடுத்தாலும் கூட அதைக் கௌரவமான முறையில் செய்வதற்குச் சீர்மியர் உதவுவார். பிரிந்து சென்ற பிறகும் அல்லது சட்ட பூர்வமாக விவாகரத்துப் பெற்ற பிறகும், ஆளை ஆள் உளவு பார்த்தல், பழிவாங்குதல், பிள்ளை களை வைத்து உலுப்பி எடுத்தல் போன்ற நடத்தைகள் தொடரக் கூடாதல்லவா?

திருமணமாக தம்பதியினருக்கிடையில் சிக்கல்கள் வந்து வளர்ந்து, உளவளத்துணையாளரின் உதவி தேடிப் போகுமளவு செல்வாக்குச் செலுத்தும் காரணிகளாகத் தொடர்பாடலில் பாவிக்கப்படும் மொழியும் உடல் மொழியும் பாலியல் சார் திருப்தியீனம், பிள்ளை வார்புத் தொடர்பான கருத்து வேறுபாடும் நடத்தை வேறுபாடும், மது போதை சார் பாவனையுடன் கூடிய உளவிளையாட்டுக்கள், கோபம், பயம் போன்ற வீரியமிக்க மறை உணர்வு வெளிப்பாட்டு முறைகள், வீட்டு வன்முறைகள், ஒருவருக்கொருவர் செய்து விடும் நம்பிக்கைத் துரோகம் என்று பல காரணிகள் இருக்கலாம். இவற்றில் ஒன்றோ இரண்டோ அல்லது பலவோ கூட்டுச் சேர்ந்தும் இயங்கலாம்.

"இனி முடியாது" என்ற புள்ளியில் தம்பதிகளில் ஒருவர் உதவி தேடி உளவளத்துணையாளரிடம் போகிறார் என வைப்போம். துணையாளர் அவரூடாக மற்றவரை வரச்சொல்லி அனுப்பும் போது, அவர் வர மறுக்கலாம். (வந்தால் வேலை கொஞ்சம் சுலபமாக அமையும்). "எனக்கு ஒரு பிரச்சினையுமில்லை. உனக்குத்தான் (உங்களுக்குதான்) பிரச்சினை. நீ போய்க் கதைச்சால் காணுந்தானே! எல்லாம் சரிவரும்" என்பதே பெரும் பாலும் மற்றவரின் பதிவாக இருக்கும். "இரண்டு கை தட்டினால் தான் சத்தம் வரும்" என்ற எளிய உண்மைகூட அவர்களுக்குப் புரிவதில்லை. அல்லது புரிந்து கொள்ள விரும்புவதில்லை. "உலகம் முழுவதும் பிழையாக இருக்கிறது. நாங்கள் மட்டும் சரியாக இருக்கிறோம்" என்ற நினைவு கொண்டவர்களாகவே பெரும்பாலான மனிதர்கள் இருக்கிறார்கள்! உண்மை யில் பெரும்பாலான மனிதர்களின் முறையற்ற சிந்தனை யாலும் செயற்பாட்டினாலுமே இன்று உலகம் அழிவுப் பாதையில் செல்கிறது என்பதை எங்கே சொல்லி அழுவது?

சரி தம்பதியினரில் மற்றவர் வரவில்லை என்றாலும் உளவளத்துணையாளர் வந்தவரைக் கைவிட்டு விடமாட்டார். முடிந்தவரை இவருக்குத் தனியாக உதவி, உணர்வுகள், எண்ணங்கள், நடத்தைகள் ஆகியவற்றில் இவரிடம் ஏற்படும் மாற்றங்கள் குடும்பத்தில் சிறு முன்னேற்றங்களையாவது ஏற்படுத்த வழி செய்வார்.

பிரச்சனைகளின் தன்மையைப் பொறுத்தும், உளவளத்துணையாளர் உதவப் போகும் வழியைப் பொறுத்தும், தம்பதியினருக்கு உதவும் காலம் இரண்டு முதல் இருபது வாரங்கள் வரை வேறுபடலாம். இவ்விடயம் தொடர்பில் தம்பதியினரின் கருத்தும் கேட்கப்படலாம்.

உதவி செய்பவர் முதலில் அவர்களுடன் தனித்தனியே கலந்துரையாடிப் பின்னர் இருவரையும் ஒருமித்துச் சந்திக்க ஏற்பாடு செய்யலாம். உதவி செய்பவருக்கு முன்னே இருவரும் அமர்ந்திருக்கும் போது, மௌன நிமிடங்கள் நகரக்கூடும். இருவரது மனதிலும் ஆயிரக்கணக்கான எண்ண அலைகள் சென்றுவர உதவியாளர் நேரம் தரலாம். சிலவேளை ஒருவர் பேசும் போது மற்றவர் அமைதியாகக் கேட்டுக் கொண்டிருக்கலாம். இருவரும் பேசுவதற்குச் சீர்மியர் சம நேரம் வழங்குவார் என்பது முக்கியம். சில சமயம் உதவியாளருக்கு முன்னிலையிலேயே அவர்கள் கடுமை யாக விவாதிக்கலாம். கத்தலாம், அழலாம், அவற்றைச் சீர்மியர் உரிய முறையில் வழி நடத்துவார். அன்றைய அமர்வு நிறைவடையும் தருணத்தில் உணர்வுக் கொந்தளிப்பை ஓரளவு சமநிலைப்படுத்தி அனுப்புவார்.

அமர்வுகள் கடந்து செல்லும் போது, பொதுவாகப் பின்வரும் விடயங்களை வீட்டில் நடைமுறைப் படுத்துமாறு உதவியாளர் கேட்கக் கூடும். நெருக்கீடு தராத விடயங்கள் தொடர்பில் இருவரும் கதைக்கும் நேரத்தைத் தெரிந்தே அதிகரித்தல் ஒரு இலகுவான வழி. அது ஒரு சினிமாப்படம் பற்றியதாக இருக்கலாம். அல்லது தெருவில் யாரோ கதைத்துச் செல்லுகின்ற எமக்குச் சம்பந்தமில்லாத விடயம் பற்றியதாக இருக்கலாம். ஜீவநதி சஞ்சிகையில் வந்த ஒரு கவிதை பற்றியதாக இருந்தாலும் இருக்கலாம். வீடு தொடர்பான நெருக்கீடு தரும் விடயங்களைக் கதைக்காமலே விட்டு விடுவது என்பது இதன் அர்த்தமில்லை. "சுத்திச் சுத்திச் சுப்பற்றை கொல்லைக்கை" நில்லாமல் நெருக்கீட்டுக் கதையின் நேரத்தை திட்டமிட்டுக் குறைக்கலாம்.

பௌதீக இடைவெளி பாதிக்காத அளவுக்கு, இருவருக்கிடையில் அகலமானதும் ஆழமானதுமான குழியைத் தோண்டக் கூடியது தொடர்பாடல் குறைவுந் தான். தொடர்பாடல் இருக்கும் போது சில விவாதங் களும் வருந்தான். கருத்து வேற்றுமையும், பழக்க வழக்க வேற்றுமையும் முற்றிலும் இல்லாத தம்பதிகள் எப்படி இருக்க முடியும்? ஆயினும் "இன்னொருவரை மாற்றுவது எம்மால் முடியாது. என்னை மட்டுமே மாற்ற என்னால் முடியும்" என்பதை அழுத்தமாக நினைத்துக் கொண்டு, எந்த விவாதத்தையும் நித்திரை நேரத்துக்கு வெகு தூரம் முன்பாகவே நிறைவு செய்து கொள்ள வேண்டும். விவாதத்தைத் தொடர்ந்து வரும் எண்ண அலைகள் நித்திரையைக் குழப்புவதை அனுமதிக்க முடியாது. அனுமதிக்கக் கூடாது.

சமீப காலங்களாக நடந்த விவாதங்களால், வீட்டில் ஒருவருக்கொருவர் ஒரு சொல்லும் சந்தோஷமாகச் சொல்ல முடியாத நிலையா? மற்றவர் சொல்வதைக் கேட்கவே முடியாது என்ற சூழலா? "புண்படுத்தல்" என்ற கண்ணாடியில் தான் நாள் தோறும் முகம் பார்க்கிறீர்களா? அமைதி என்பது முற்றாகவே கிழித்தெறியப்பட்டுவிட்டதா? இருந்தாலும் கூட, நீங்கள் சந்தித்த அந்த முதலாவது சந்திப்பின் சங்கீதம்! அந்தச் சங்கீதத்தின் எதிரொலி ஒரு முறை உங்கள் காதில் கேட்க அனுமதித்துப் பாருங்கள்! சுவாரசியமான விடயம் ஒன்றையாவது இருவரும் சேர்ந்து நாள் தோறும் செய்வது என்று இனி ஒரு விதி செய்வோமா? அது நல்லதோர் பாட்டுக் கேட்பதாகவும் இருக்கலாம். "செஸ்" விளையாடுவதாகவும் இருக்கலாம்.

"Why Couples Fight?" என்ற Mira Kirshen baum இன் நூலையும் இருவரும் சேர்ந்தோ அல்லது தனித்தனியாகவோ வாசிக்கலாம்.

இரு தனிப்பட்ட நபர்கள் இணைந்து வாழும் புதிய சூழலில் இருவருக்குமான தனிநபர் தேவைகள் முதலில் மேலெழும். அது உணவு, நித்திரை போன்ற அடிப்படைத் தேவைகளின் பூர்த்தியில் இருந்து, சுய கணிப்பு சுயதிறன் நிறைவு போன்ற உயர் நிலைத் தேவைகள் நிறைவு செய்யப்படுவது வரை வேறுபட்டா லும் இந்தத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள ஒவ்வொரு தனி உயிரியும் முயலும். ஆரம்பத்தில் துணைவர் முன்னே அது வேண்டுதல்களாகவோ அல்லது அன்பான குரலில் அமையும் கோரிக்கைகளா கவோ அமையலாம். எல்லாம் சரிவர நிறைவேறுவதோ, நிறைவேற்றப்படு வதோ இல்லைத்தானே! தேவை நிறைவேற்றங்கள் தோல்வியடைந்து வலுவிழந்து போகும் நிலையை உணரும் போது பெருமூச்சுக்கள் கண் உருட்டங்கள் மௌன மொழியுடன் கூடிய முக பாவங்கள், தசை இறுக்கங்கள் போன்ற மறையான உடல் மொழிகள் தோன்றலாம். இன்னும் இன்னும் பூமிப்பந்து சூழலும் போது, எதிர்ப்பு நிலைகள் வலுப்பெற்று மற்றவரை அவமதிப்பதான, கீழே போட்டு மிதிப்பதான வசனங் களாகவோ அல்லது உடல், உள, உணர்வு ரீதியான பயமுறுத்தல்களாகவோ அமையலாம்.

"அது உங்கடை பரவணிக்கும்"

"பொம்பிளையளின்ரை புத்தி பின்பக்கந்தான் எண்டு எப்பவோ சொல்லியாச்சு..."

"நான் இன்னும் கை நீட்டேல்லை. அடிச்சா, தலைவேறை கால் வேறை தான்..."

போன்ற வசனங்கள் இந்நிலைமைக்கான மாதிரி வெளிப்பாடுகளாகலாம்.

"நேர்மையீனம்" என்பது மனிதரில் மிகப் பொதுவாகக் காணப்படும் இயல்புதான் ஆகவே உதவி நாடி வந்திருக்கும் இந்தத் தம்பதியினரிடம், வாரத்தில் ஒரு மணி நேரத்தை "நேர்மை மணித்தியாலம்" ஆக்குமாறு உதவியாளர் கேட்கலாம். குறிப்பிட்ட அந்த ஒரு மணிநேர எல்லைக்குள் இருவரும் கட்டாயம் "உண்மை பேசுவோம்" என்று முதல் படியில் ஒத்துக் கொள்ளலாமே!

அதி நவீன தொழில்நுட்ப சாதனங்களில் மகிழ்வுக்காகத் தங்கியிருத்தல் இப்போது உலகெங்கும் பரவலான வழக்காறாகிவிட்டது. ஆயினும் நாள் முழுவதும், ஆயுள் முழுவதும் அப்படி இருக்க வேண்டியதில்லை. இருப்பது நல்லதுமில்லை.

கணவன், மனைவி போன்ற மிக நெருக்கமான ஓர் உறவில், "தங்கியிருத்தல்" என்பது யதார்த்தமான உண்மை. அது, "தெரிவு" என்ற நிலையில் வைத்துப் பார்க்கப்பட வேண்டியதில்லை. பௌதீகத் தேவை களுக்காக ஒருவரில் ஒருவர் தங்கியிருப்பதை குறிப்பது. சாப்பிடுவது, உடுப்புத்துவைப்பது, பயணம் செய்வது முடிந்தவரை குறைத்துக் கொண்டாலும் உளநலமும், உணர்வு நலமும் பரஸ்பரம் தங்கியிருப்பது நிச்சயமே! ஆகவே "வாரத்தில் ஒரு நாளாவது தொழில் நுட்ப சாதனங்கள் எல்லாவற்றையும் நிறுத்திவிட்டு, உங்கள் இருவருக்கும் ஆரம்பத்தில் இருந்த மென்மை இறுகிப் போய்விடாமல் பார்த்துக் கொள்ளலாம். முன்னர் கண்ட அன்பின் ஆழங்கள் மீளவும் உங்கள் உறவை நிலை நிறுத்த உதவி செய்யும் என நம்பலாம்" என்று உதவியாளர் உங்களுக்குப் புரிய வைக்க முயலக் கூடும்.

"சொந்தக் காலில் நிற்கப் போகிறேன்" என்று எல்லாவற்றையும் பிரித்துக் கொண்டு விலகிப் போவது சுலபம் போல இருக்கலாம். ஆயினும் எந்த ஒரு விடயத்திலும் இன்னும் சிறிதளவு முயற்சி செய்வதற்கு நேரம் போய்விடவில்லை என்று கொஞ்சம் நிதானித்தால் புரியும்.

"மற்றப் பறவை மறைந்தெங்கோ போகவுமிவ்
வொற்றைக்குயில் சோகமுற்றுத் தலை குனிந்து
வாடுவது கண்டேன்..."

என்பது பாரதியின் அவதானம். "இல்லை" என்று வெளியே விவாதித்தாலும் அகத்தின் எங்கோ ஒரு

மூலையில் அந்த உண்மை தென்படும்.

துணைவரின் நல்ல இயல்புகள் அனைத்தையும் எழுதி வருமாறு உதவி செய்பவர் கேட்டால், அதை விருப்புடன் செய்யலாம். தெருவில் ஒரு நிமிடம் சந்தித்த மனிதரிடம் கூட நாம் ஒரு நல்ல இயல்பை அவதானித் திருப்போம். நாளிலும் பொழுதிலும் எம்மோடு அருகிருந்து வாழும் துணைவரின் நல்ல இயல்புகள்? சற்று யோசித்தால் எத்தனை எத்தனை கூற முடியும்? அவ்வளவையும் எழுதிக் கொள்வோம். துணைவர் "ஹெரோயின்" பாவிப்பதில்லை என்றால் கூட அது ஒரு நல்ல இயல்பு தானே! இப்படியே ஒவ்வொன்றாக எண்ணிக்கொண்டு வர வர "சேர்ந்து வாழலாம்" என்ற உறுதி தானே வந்து விடும். தம்பதிகள் இருவருமாகச் சேர்ந்து செய்ய யோசித்த இலக்குகளை எழுதிப் பார்க்கலாம். அப்பாடா! இன்னும் எவ்வளவு வேலை இருக்கிறது செய்து முடிக்க? இப்போது உடைத்துக் கொண்டு போனால் எல்லாம் "அம்போ" தானே!

குடும்பத்தின் வரப்பிரசாதங்களை எழுதி வருமாறு துணையாளர் கேட்டாரா? நல்லது நீங்கள் இருவரும் பக்கத்தில் நின்று படமெடுக்கும் போது ஆளுக்காளான உயரம் அளவாக இருக்கிறது என்பதி லிருந்து குடும்பத்திற்கு வருமானம் தரக்கூடிய காணி ஒன்று இருக்கிறது வரை எத்தனை எத்தனை அடுக்கிக் கொண்டு போகலாம்? வற்றாத நதி போல அள்ள அள்ளக் குறையாது வந்து கொண்டிருக்குமே!

"நான் எதற்கெல்லாம் இந்தக் குடும்பத்திற்கு நன்றியாக இருக்கிறேன்" என்பதைக் குடும்ப அங்கத்தவர் அடிக்கடி ஆளுக்காள் உண்மையாகப் பகிர்ந்து கொள்ளலாம்! துணைவரின் நடத்தையில் நான் பாராட்டும் விடயம் எது?" என்பதை அன்றன்று, உடனுக்குடன் கூறிவிடலாம். துணைவரின் எந்த இயல்பு உங்களுக்கு முன் மாதிரியாக இருக்கிறது என்பதை முகத்துக்கு நேரே கூறினால் என்ன? இவற்றையும் செய்து பார்க்கும் போது விளைவுகள் மிகச் சந்தோஷமாக இருக்கும் என்பதைத் துணையாளர் உங்களுக்கு உணர்த்தக் கூடும்.

இவ்வளவு காலமும் வாழ்ந்த வாழ்வில் மிகச்சந்தோஷமான சில சம்பவங்கள் நடந்திருக்கும். மிக நீண்ட காலம் சந்திக்காத ஓர் உறவினரைச் சந்தித்ததாக இருக்கலாம். குடும்பத்தில் எதிர்பாராத சில வெற்றிகள் வந்திருக்கும். அவற்றையெல்லாம் அன்றைய நாளுக்குப் பிறகு நினைக்கவே கூடாது என்று எங்காவது சட்ட ஏற்பாடு இருக்கிறதா என்ன? பல முறை மீள மீள நினைப்பதும் அவற்றைப் பற்றி உரையாடுவதும் துணை வரோடு தானே செய்ய முடியும்! செய்து பார்ப்போமா?

இந்தக் குடும்பத்தின் நீண்டகால ஸ்திரத் தன்மைக்காக உங்கள் துணைவர் வழங்கும் பங்களிப்புப் பற்றிக் கொஞ்சம் எடுத்துச் சொல்லலாம். இல்லையா? இந்தக் குடும்பத்தின் எதிர்காலம் எப்படி இருக்கப் போகிறது என்று ஒரு மகிழ்வான பகற்கனவில் பயணம் செய்யலாம். தவறில்லையே! இந்தக் குடும்பத்தின் எந்த விடயங்கள் தொடர்பாக மற்றவர்களிடம் எடுத்துச் சொல்லும் போது உங்களுக்குப் பெருமையாக இருக்கிறது என்று நினைத்துப் பார்க்கலாம்.

நிறுவனங்களிலும் பாடசாலைகளிலும் வாராந்த ஒன்று கூடல் நடைபெறுவதை நாம் பார்த் திருப்போம். ஆரோக்கியமான குடும்பங்களிலும் அது நடை பெறும். மிகக் காத்திரமான இந்தக் கலந்துரை யாடல் எதிர்காலத்திட்டங்கள் முன் வைக்கப்படலாம். பிரச்சினைகள் விரிவாகக் கலந்துரையாடப்படலாம். முடிவுகள் எடுக்கப்படலாம். ஒன்று கூடலில் எடுக்கப் படும் முடிவுகள் காலப் போக்கில் நிறைவு செய்யப்பட லாம். அந்த வாரத்தில் யாராவது ஒருவர் பொருத்தமற்ற நடத்தையைக் காட்டியிருந்தால், மன்னிப்புக் கேட்கும் நேரமாகவும் இதைப் பழக்கப்படுத்திக் கொள்ளலாம்.

அந்த ஒன்று கூடலில், "சுவாரஸ்ய நேரம் என்றொரு நிகழ்வையும் இணைத்துக் கொள்ளலாம். ஒருவர் தனது பிள்ளைப் பருவத்தில் நடந்த சுவாரஸ்யமான சம்பவத்தை விபரிப்பதாக இருக்கலாம். ஒருவர் தனது மிகப் பெரிய பயம் அல்லது பலம் பற்றிப் பேசுவதாக அமையலாம். ஒரு அங்கத்தவர் தனது வாழ்வின் "ஊக்க மூட்டியான மனிதர்" பற்றி விபரிக்கலாம். மற்றவர் தான் அவ்வாரம் எழுதிய கவிதை ஒன்றை வாசிக்கலாம். "இந்தக் கணத்தில் வேறு எங்கோ ஓரிடத்தில் இருக்க முடியும் என்றால் எங்கே இருப்பது உங்களுக்கு விருப்பம்? "என்ற கேள்வியை ஒருவர் முன்வைக்க மற்றாள் பதில் கூறலாம். "கடவுளி டத்தில் இந்த நிமிடத்துக்க மட்டும் நிறைவேறக் கூடிய ஒரு வரம் கேட்கலாம் என்றால் என்ன கேட்பீர்கள்?" என்று மற்றாள் கேட்க முந்தியவர் விடை கூறலாம். "சுவாரஸ்ய நேரம்" ஒன்றின் ஆக்கம் கற்பனை வளம் மிக்க குடும்பத்தில் மிக அற்புதமாக இருக்கும்.

தம்பதியினர் இருவரும் ஒருவரக்கு முன்னால் மற்றாள் அமர்ந்து "கண் தொடர்பில்" இருத்தல் பயிற்சியை நாள் தோறும் ஐந்து நிமிடம் செய்து வரலாம். நெறித் தொடுகையுடன் 4டிய ஆழ்ந்த சுவாசப்பயிற்சியை வாரம் ஒரு முறை செய்யலாம். (கொவிட் 19 தொற்று இருந்தால் வேண்டாமே!)

நெருக்கிட்டைத் தூண்டும் காணரிகளை இனம் கண்டு தவிர்த்து, முடிந்த வரை, இருவரும் சேர்ந்து விடயங்களைச் செய்து செய்யப்படும் காரியங்கள் அனைத்திலும் ஒரு நேர ஒழுங்கையும் தொடர்ச்சியை யும் பேணி ...

இப்படி வாழும் ஒரு குடும்பத்திலிருந்து விவாகரத்துக் கோரும் எண்ணம் கண நேரந்தானும் வராதே!

**(இன்னும் பேசுவோம்)**

## எழுத்து

ஆழ்மனதின் சிந்தனை
அடையாளப்படுத்த முடியாத
எங்கேனுமுள்ள
உயிரணுவொன்றில் குடியிருக்க,
அமைதியான பொழுதொன்றில்
அதை எழுத்தாக தரும்
ஆழ்மனம்

ஆழ்மனதிடம்
எழுத்தைக் கேட்கையில்
அதன் பதில்கள்
வாழுதலின் இரைச்சல்களிடையே
தெளிவற்றதாய் கேட்கிறது

இந்நிலையில்
எதைத்தான் எழுதிவிட முடியும்

கடந்து வந்த பாதையின்
தணல்கள் பற்றி
ஆணிகள் பரவியிருக்கும் பாதையிலிருந்தவாறு
ஆறுதலடைவதே
சாத்தியமற்றதாகையில்

அதை எழுதுவதென்பது
எவ்வாறு சாத்தியம்?

இரு பாதையோரங்களிலும்
கண்ணுற்று வந்த
பூச்செடிகளின் எழிலையும்
அதிலிருந்து வந்த
மகரந்த வாசனையையும் கூட

இந்நிலையில்
எழுத முடியவில்லை

கடந்து செல்லும் பாதையில்
எங்கேனும்
ஒரு பசுமையான சோலையும்
நீர்ச்சுனையும் தென்றலும்
கிடைத்தால்
ஆழ்மனதுடன் பேச முடியும்

அப்படியொரு வேளையில்

கடந்துவிட்ட வலியையும்
சோலையின் இனிமையையும் சேர்த்து
குறைந்தபட்சம்
இரு கவிதைகளாவது பிறக்கும்

அப்போது எழுதுகிறேன்
நிச்சயமாக...



## எழுத்து – 2
**(முதலாம் எழுத்தின் முரண்)**

உணர்வின் அலைகள்
மனதின் மூலையில்
அங்கோர் ஓரத்தில்
பேருறக்கம் கொண்டிருக்கும் போது
என்றாவது நிகழும்
சிறு விழிப்பில்
அதன் நுரைகளையாவது
எழுதாமலிருப்பதென்பது
இவனால் இயலாதது

எந்தவொரு உணர்வையும்
வார்த்தையில்;
செயலில்;
முகபாவனையில் என
ஏதேனுமொரு வடிவில் வெளிப்படுத்தினாலும்

எழுத்தில்
அதை பறையடிக்காது
மூடி வைப்பதென்பதும்
இவனுக்கு சாத்தியமற்றது

அதை எழுதிவிடுதலில்,

கிடைக்கும் ஆறுதல்
குறையும் பாரம்
அது தாண்டிய நிம்மதி

மனதில்
அக்கினியை வைத்து
அடைகாத்து
குஞ்சு பொரிப்பதில்
கிடைப்பதில்லையே

**- பத்மபிரஷன்**

நீண்ட நேரமமாக கொட்டித் தீர்த்த மழை சற்று தணிந்திருந்தது. சுவரோரமாக வழிந்து கொண்டிருந்த மழை நீரை மொப்பரால் துடைத்து துடைத்து வெளியே ஊற்றிக் கொண்டிருந்தேன். ஆனாலும் தண்ணி நின்ற பாடில்லை. மழை நின்ற போதும் ஓட்டுத்தண்ணி கசிந்து கொண்டே இருந்தது எனது சக ஆசிரியர் லாலும் நானும் வீட்டைச் சுத்தம் செய்து கொண்டிருக்கிறோம்.

நீண்ட நேர வாதப் பிரதிவாதங்களுக்கு பிறகு லாலும் சதீஸ் சேரும் என்னோடு துப்புரவுப் பணிகளில் இணைந்து கொண்டனர். அவர்கள் அப்படித்தான் ஏதாவது பேசத் தொடங்கி விட்டால் நிறுத்துவது பெரும்பாடாகிவிடும். இடையில் நான் விலகிக் கொண்டு விடுவேன். இது எனது தந்திரமும் கூட ஒருவரோடு அதிகமாக வாதம் செய்து கொள்வதில் எனக்கு உடன்பாடல்ல. என் சுபாவம். நான் நானாக வாழ முனைவதில் தவறொன்றுமில்லையே.

"தொப்" என்ற சத்தம் தரையில் தன் இறக்கைகள் பிய்ந்து, தலை நசிந்து துவம்சமாகிப் போயிருந்தது அந்த வௌவால்

எனக்கு குமட்டிக்கொண்டு வந்தது. அது விழுந்தது என்னவோ லாலின் தோள்பட்டையில் தான் முற்றத்தில் எடுக்கும் வாந்தியின் சத்தம் என் காதில் நாராசாக நுழைகிறது.

"எடே... நெஞ்சத் தடவடா" வாயக் கழுவு என்றெல்லாம் சதீஸ் சேரின் கரிசனையும் கேட்கிறது.

நாங்கள் இந்த வீட்டில் கிருகப்பிரவேசம் செய்து கொஞ்ச நாள் தான் ஆகிறது.

ஆரம்பத்தில் அந்த வீட்டைப் பார்த்தபோது நம்மைப் போல் கொடுத்து வைத்தவர்கள் இல்லை என்றேபட்டது. ஏக்கர் அளவில் பரந்த காணி நடுவில் வீடு, வீடும் வெளியில் இருந்து பார்த்தால் அதன் உள்ளே உள்ள பிரமாண்டம் தெரியாது சற்று உள்ளே போனால் நேரே நீண்ட கோல் அதற்கு நேரே ஒரு அறை. அது தனியாக இருந்தது. அந்த அறையின் பின்புறம் ஒரு கதவு அதையும் திறந்தால் கழிப்பறை வசதியோடு நீண்ட அற்றாக் பாத்ரூம். இது வீட்டின் ஒரு புறம் மறுபுறத்தில் நேரே ஒரு கொலிடோல் அதன் ஒரு பக்கமாக இரண்டு அறைகள், ஒரு சமையல் அறை அதன் பின்புறமும் அதே கழிப்பறை வசதியோடு கூடிய அற்றாச் பாத்ரூம் நடுவே இடைவெளிவிட்டு இரண்டு அறைகள் தனித்தனியாக இரண்டு அறைகள் நடுவே ஒரு வெளி. அறைகளில் ஒன்றை சாமியறையாக நண்பர் லால் பிரகடனம் செய்திருந்தார். அதற்கு அத்தாட்சியாய் சுவாமிப் படங் களும் குத்து விளக்கும் வைக்கப்பட்டிருந்தன. இந்த வீட்டின் அமைப்பை பார்த்த போது மேஸ்திரியார் எந்த மனையடி சாஸ்திரத்தை பின்பற்றி இருப்பார் என்பது இன்று வரை எனக்கும் பிடிபடவில்லை.

"அப்பாடா... ஒரு மாதிரி இருந்தாச்சு இனி அந்த ஏரியாவுல இருக்கிறேல்ல" என்று நான் நெஞ்சை நிமிர்த்திய போது "சேர் நாங்கள் நாலு வருசம் தண்ணியும் இல்ல, கறண்டும் இல்ல. இப்ப ஓகே சேர்" தனது பாணியில் சொல்லி என்னை ஆசுவாசப் படுத்தினார் சதீஸ் சேர்.


நீண்ட நேர வாதங்களும் பேச்சுக்களுமாக எங்கள் பொழுது கடந்து கொண்டிருந்தது. பாடசாலை நேரம் தவிர்ந்த நேரங்களில் என் பொழுது புத்தக வாசிப்பில் மூழ்கிக் கிடக்கும். என் சக ஆசிரியர் ஐங்கரன். எங்களிலும் சற்று வயது குறைந்தவர் நான் அவரை தம்பி என்றே அழைப்பதுண்டு. பாடசாலையின் விடயங் களைப் பற்றிய நீண்ட வாதப் பிரதிவாதங்களில் லாலும், சதீஸ்சேரும் அடிக்கடி மூழ்கி விடுவது உண்டு. சில சமயம் லால் விலக நினைத்தாலும் அவர் விடுவதா யில்லை.

வீட்டின் முன்புள்ள முற்றத்தில் ஓடவும், கிறிக்கட் விளையாடவும் பழகிக் கொண்டோம். டோர்ஜ் லைட் இல்லாமல் இரவில் நடக்கும் துணிவும் எனக்கு வந்திருந்தது.

அப்போது பாடசாலைக்குப் பின்புறம் இருந்த

# இருத்தலுக்கான அழிப்பு

மா.சிவசோதி



திட்ட வீடொன்றில் நானும் சதீஸ் சேர் உம் தான் கிருகப்பிரவேசம் செய்திருந்தோம். அன்றைக்கு இரவின் பின் எனக்கு பாம்பின் மீதான பயம் இன்னும் சற்று அதிகரித்தது என்றே சொல்ல வேண்டும்.

நேரம் - இரவு இரண்டு மணியைக் கடந் திருந்தது. விடுமுறையின் பின் அன்று தான் வீட்டிற்கு வந்தோம். கதவைத்திறந்த போது "வாசலில் நின்று வரவேற்பதைப்போல்" சுடுண்டு படுத்திருந்த கரு வளையன் தலையை நிமிர்த்தியது.

பாடசாலைக் காலத்தில் கூட நான் அப்படி பாய்ந்ததில்லை. ஒரே பாய்ச்சலில் கிட்டத்தட்ட எட்டு அல்லது பத்தடிகளைத் தாண்டியிருப்பேன்.

சதீஸ் சேர் கதவுக்குப் போட்டிருந்த தடியால் அடித்து வெளியில் தூக்கிப்போட்டார். அந்தக் கையோடு பாம்புகளைப் பற்றி ஒரு பதிகம் பாடிய பின் தகனக் காரியங்களில் ஈடுபட்டார்.

இரவு நெடுநேரம் தூக்கம் வரமாட்டேன் என்றது சாப்பிடும் போது அது சுருண்டு படுத் திருப்பதாய் அருவருத்துக் கொண்டு வந்தது சுவர்களில் ஒட்டிக் கொண்டிருக்கும் தேரைகளைப் பார்க்குந் தோறும் ஏதோ செய்வதாயிருந்தது.

இன்றும் அதே பாம்பு எனக்குள் வந்து வந்து போனது. மீண்டும் வந்து விடுமோ என்ற கலக்கமும் ஒரு புறம். இப்படியே நினைத்தபடி ஒரு இரண்டு மூன்று மணி நல்ல உறக்கம் சட்டென்று விழித்துக் கொண்டேன். டோர்ச் லைட் தலைமாட்டில் எடுத்து கால்பக்கமாக அடித்துப் பார்த்தேன். எதுவுமில்லை. ஒரு திருப்தி "நடுச்சாமத்திலே சாமந்திப்பூ ஆள அசத்துது" எஸ் பி பியின் குரலும் ஜானகியின் குரலும் எனக்குள் புகுந்து கொண்டு துளையமாடியது.

அந்த நேரத்தில் எனக்குள்ளும் ஒரு பாட்டு சட்டென்று பிறக்க "நடுச்சாமத்தில பாம்பு வந்து ஆள வெருட்டுது" உதடுகள் மௌனமாய் உச்சரிக்க பக்க வாட்டில் திரும்பிப் படுத்துக் கொண்டேன். அருகில் சதீஸ்சேர் ஆழ்ந்து தூங்கிக் கொண்டிருந்தார். ஒரு சிறு செருமலுடன் திரும்பிப் படுத்துக் கொண்டார். நுளம்பு வலைக்குள் இரண்டு பேரும் இருந்ததால் சில சமயங்களில் இடிபடுவது உண்டு. நான் சற்று மெதுவாக திரும்பி சிவரோரமாக இருந்த அந்த சிவப்பு நிற ஒளியைக் கண்டு பயந்தே விட்டேன். பாம்புகளின் கண்கள் இருளில் சிவப்பாக ஒளிரும் என்று கேள்விப்பட்டதுண்டு. இதுபற்றிய ஆய்வில் ஈடுபட நான் விரும்பியதில்லை. தலைமாட்டில் இருந்த டோர்ச்சை எடுத்து மெதுவாக அடித்துப் பார்த்தேன்.

சட்டென்று என் உடல் வேர்த்தது. என் ஈரக்குலை நடுங்கியது. இது நடக்குமென்று நான் நினைத்துக் கூட பார்க்கவில்லை. பாம்பு ஒன்று வலை யின் வெளியே எங்களுக்கு அருகாக படுத்திருந்தது.

ஞாயிறு தோறும் நான் கையெடுத்த வல்லிபுரத் தான் வந்து தன் சக்கரத்தை சுழற்றி தன் அடியவனையும் காப்பாற்றி விட்டான் என்றே எண்ணத் தோன்றியது.

நான் கட்டிலில் ஏறிக் குந்திக் கொண்டேன் சதீஸ் சேரும் அவுக்கென எழும்பி சண்டியன் போல பொல்லுடன் பாம்புடன் நேருக்கு நேர் யுத்தத்தில் ஈடுபட்டார். சுவரில் ஏற முயற்சித்த பாம்பின் தலைமீது அடி பலமாக விழுந்திருக்க வேண்டும். தலை நசிந்து உடலையும் வாலையும் அசைத்தபடி இருந்தது.

"இனி வராது சேர். இந்த ரெண்டும் கொஞ்ச நாளா இஞ்சதான் சுத்தி திரிஞ்சிருக்கினம். மதியம் அடிச்சது இப்படி இரவில் வந்தது. இவை யெல்லாம் சின்ன வயதில் பார்த்த "நீயா" திரைப்படம் தான் மனத் திரையில் ஓடிக்கொண்டிருந்தது. ஆனாலும் சதீஸ் சேரை கமலஹாசனாக தற்பனை பண்ண நான் முயற்சிக்க வில்லை.

இந்தச் சம்பவத்துடன் இந்த வீட்டிற்குக் குடியேறி ஒரு சில மாதங்களே ஆகி இருந்தன. ஆரம்பத் தில் வௌவால்களைப் பற்றி நாம் அவ்வளவாக அலட்டிக் கொள்ளவில்லை. ஆனால் நாட்கள் நகர நகர சில வேளைகளில் துர்நாற்றம் வீசத் தொடங்கி யிருந்தது. லெவல் சீற்றின் மேலால் வௌவால்களின் எச்சம் அதிகரித்தமை தான் காரணம் என்று "சண்முகம் ஐயா" தீர்மானமாக கூறியபோது நாமும் அதனை ஏற்றுக் கொண்டோம்.

உலகை அச்சுறுத்திய தொற்று நோய்களில் பல வௌவால்களூடாகவே பரவியது என்பதை வாசித்த அனுபவங்களும் உண்டு. இப்போது கொரோனாவும் தலை தூக்கியிருந்தது எல்லாம் எனக்குள் பீதியை ஏற்படுத்திய வண்ணம் இருந்தன.

சில நாட்களாக அதன் வாடையும் சற்று அதிகமாக வெளிப்பட்டது. அன்று இரவின் பின் காலை யில் நாம் எல்லோரும் சேர்ந்து வௌவால்களை வீட்டில் இருந்து துரத்துவதற்கான போர் உத்திகளைப் பற்றிக் கலந்துரையாடினோம்.

ஓரிரு நாட்கள் அவற்றின் விநியோகப் பாதையை கண்டறியும் வேவு நடவடிக்கைகளை லால் ஆரம்பித்திருந்தார். அதற்காக அவர் "ஜேம்ஸ் பாண்ட்" துப்பறியும் திரைப்படங்களை பார்த்திருக்க வேண்டும் என நான் நினைத்துக் கொண்டேன்.

மறுநாளே தன் புலனாய்வுத் தகவல்களோடு மீண்டும் கூட்டம் ஆரம்பமானது. ஓட்டுக்கும் சுவருக்கு மிடையில் அடிக்கப்பட்ட நெற்சில இடங்களில் கிழிந்திருப்பதும் தான் காரணம் என்பதை தனக்கே உரிய பாணியில் கூறினார். மறுநாளே சுற்றிவர நெற் அடிக்கப்பட்டு மாலையில் எம் எதிரிகளின் வருகையைப் பார்த்து பதுங்கிக் கொண்டோம். பாகு பலி படத்தில் நான் பார்த்த காளகேயப் படையை விடவும் அதிகமாகத் தோன்றியது. வீட்டின் கூரை யினுள் புகுந்து கொள்ளும் அத்தனை வழிகளும் அடைக்கப்பட்டுப் போனதால் "காயகேயரை வெற்றி கொண்ட பாகுபலியாக" கற்பனை செய்தபடி அன்று உறங்கிப் போனோம்.

மறுநாள் காலையில் சண்முகம் ஐயா அரக்கப் பரக்க "சேர்... சேர்... என்று ஓலமிட்டவாறு அறைக் கதவைத் தட்டினார்.

நான் எழுவதற்கு முன்னதாகவே லால் கதவைத் திறந்து கொண்டு ஓடினார்.

சண்முகம் ஐயா காட்டிய இடத்தைப் பார்த்து அந்த காலையில் எச்சிலை காறித்துப்பியபடி "சேர்... என்ன சேர் அது" என்று குமட்டல்களுக்கிடையே சொல்ல முயற்சித்தார். நானும் மூக்கைப் பொத்தியபடி எட்டிப் பார்த்தேன். நான் அங்கு கண்ட காட்சி, "லெவல் சீற்றின் ஒரு பகுதி உடைந்து கழன்று விழுந்து வௌவால்

களின் எச்சங்கள் வாசலை நெருங்க முடியாதவாறு மணத்துக் கொண்டிருந்தது. சண்முகம் ஐயா முகத்தை மறைத்துக் கட்டியவாறு அவற்றைத் துப்பரவு செய்யும் பணிகளில் ஈடுபடத் தொடங்கினார்.

"சேர்... இது சரிவரா சேர்" வேற வீடு ஒண்டு பாப்பம் இல்லாட்டி அங்கேயே போவம்" என்று சலிப்புடன் சொன்னார்.

"இல்ல சேர் இதுக்கு ஒரு வழி பண்ணுவம் இனியும் அந்தப் பூச்சி புழுக்களோட படுக்கேலா தானே" என்று நான் சொல்லிக் கொண்டேன்.

எனது பதில் லாலுக்குத் திருப்தியைத் தரவில்லை என்பது அவர் முகத்தில் தெரிந்தது.

"சேர் ... நாங்கள் மட்டுமே இதில் எவ்வளவு பேர் வாழ்ந்திருப்பினம் அப்ப இது இல்லத்தானே. இது எங்கட வீடு மாதிரி. இதுகளுக்குப் பயந்து போன மெண்டா" என்று சதீஸ் சேர் கூறியபோது எனக்குள்ளும் ஓர் வீரார்ந்த உத்வேகம் பிறந்தது.

எங்கள் எல்லோர் மனத்திலும் அந்தச் சம்பவங்கள் பசுமரத்தாணியாய் பதிந்து போயின. ஆனாலும் எம் முயற்சிகளை கைவிட்டு விடவில்லை. சில நாட்களில் ஒரு மாலைப் பொழுதில் ஐங்கரன் பல சீன வெடிகளுடன் வந்திருந்தார்.

அன்று மாலை மறுபடியும் நாம் தாக்குதலுக்கு தயாராகினோம். லெவல் சீற்றிற்கும் கூரைக்குமிடையே தொங்கிக் கொண்டிருந்த வௌவால்களை விரட்ட தன் நண்பர்களுடன் சேர்ந்து ஒரு புதிய திட்டத்தை வகுத்து வைத்திருந்த தம்பி ஆறுமணி வாக்கில் தாக்குதலைத் தொடங்கினார். முதலில் ஒரு வெடி வெடித்தது. ஆனால் நாம் நினைத்தது போல் எந்த சலனமும் இல்லை. இரண்டாம் முறையும் அஸ்திரம் செலுத்தப்பட்டது. மூன்றாவது அஸ்திரம் சற்று பலமாக இருந்து "அருச்சுணன் திவ்வியாஸ்திரத்தை" ஒத்திருந்தது. அதன் சத்தம் கேட்டு அயல்வீட்டார் புதினம் பார்ப்பதற்காகத் தலைகளை வேலிகளின் மீதும், மதில்களின் மீதும் வைத்ததையும் அவதானித்தோம்.

"மழைக்காலத்தில் புற்றில் இருந்து புறப்படும் ஈசல்களாய்" இடைவெளிகளினூடாக பதறி அடித்தபடி வெளிவரத் தொடங்கின வௌவால்கள். எமக்குள் ஒரு எக்களச்சிரிப்பு "சேர் இஞ்ச பாருங்க எவ்வளவு வௌவால்" என்று வியப்பில் ஆழ்ந்து போனார்.

"தக்கன பிழைக்கும்" என்று யாரோ சொன்ன தாக ஞாபகம். பதறியடித்தபடி தம் வாழ்விடத்தை விட்டு வெளியேறும். வௌவால்களைப் பார்த்துச் சிரிப்பதிலும் ஒரு குரூரம் வெளிப்படத்தான் செய்தது. எமக்கு முன்பே இவை இங்கே குடியேறி விட்டன. தமது வாழ்விடத்தை விட்டு செல்ல மனமன்றி எக்கச்சக்கமாக சுற்றிப் பறந்தன. சில நெற்களில் தொங்கி துடிதுடித்துச் செத்துப் போயின. நன்றாக இருட்டும் வரை எமது தாக்குதல் தொடர்ந்து கொண்டே இருந்தது. அங் கிருந்த அத்தனையும் அன்று விரட்டியடிக்கப்பட்டன. மீண்டும் ஒரு திமிருடன் தூங்கிப் போனோம்.

சில வருடங்கள் நாம் இந்த வீட்டில் காலூன்ற வேண்டிய அவசியம் இருந்ததால் நாம் பல சிரமங்களை யும் எதிர்கொண்டபடி இருந்தோம்.

வெயில் காலங்களில் துர்நாற்றம் அதிகமாக இருந்ததை அறிந்து கொண்டோம். சில நாட்களில் இன்னுமொரு ஆச்சரியம் எமக்குக் காத்திருந்தது. அன்று வழமையாக பாடசாலை விட்டு வீட்டிற்கு வந்திருந் தோம். லால் கதவைத் திறந்தபடி உள்ளே போனார்.

சேர்... சேர்... இஞ்ச வாங்கோ என்று அரக்கப் பரக்கக் குரல் கொடுத்தார்.

நான் கதவைத்திறந்து உள்ளே நுழைகிறேன் சுவர் முழுவதும் வௌவால்கள் தொங்கிக் கொண்டி ருந்தன. லைற்றை போட்டுவிட்டு வெளியே வந்தோம். நாம் செய்யும் அத்தனை முயற்சிகளையும் தாண்டி தமது இருப்பிடத்தை விட்டு வெளியேற விருப்பம் இன்றி மீண்டும் மீண்டும் போராடிக் கொண்டிருக்கும் வௌவால்களின் முன் எமது அத்தனை முயற்சிகளும் தோற்றுப் போய்விட்டதை கூறித்தான் ஆகவேண்டும்.

அன்று நாம் பேசிக்கொண்டிருக்கும் போது என் அண்ணனிடம் இருந்து ஓர் அழைப்பு. பட்டனை அழுத்தி விட்டு "சொல்லண்ண" என்றேன். எனது பேச்சின் கரகரப்பு அவருக்குள் ஏதோ ஒரு உணர்வை தூண்ட "என்னடா ஏதும் பிரச்சினையோ" என்றார் "எனக்கு சொல்ல வேண்டும் என்றாற் போல் பிரச்சினை எல்லாம் ஒன்று விடாமல் சொல்லி விட்டேன்"

"டேய்... வலை கொஞ்சம் தாறன் போட்டியெண்டா உள்ள போகாது தானே" என்றார்.

சில நேரங்களில் நாம் அவற்றை உன்னிப்பாகக் கவனிக்கத் தொடங்கியிருந்தோம். அவை எம் கண்களில் படுவது குறைவாகத்தான் இருந்து. நாம் ஒரு பெருமிதத் துடன் இருந்தும் ஒரு பறவையைப் போல எங்கள் மனம் இறக்கைகட்டிப் பறந்து சில நாட்களாக எங்களுக்குள் ஓர் புது தெம்பும் உற்சாகமும் பிரவாகம் பெற்றிருந்தது.

அன்று பாடசாலை விடுமுறை தொடங்கிய தால் மாலையே நாம் வீடுகளுக்குப் புறப்பட்டோம். அந்த விடுமுறை நாட்களில் நாம் எங்கள் வீட்டுப் பக்க மும் போகவில்லை. சண்முகம் ஐயாவுடன் இடை யிடையே தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசு வோம். அவ்உரையாடலில் வௌவால்கள் பற்றிய பேச்சு இருக்காமலில்லை. விடுமுறைக் காலம் முடிந்து மீண்டும் பாடசாலைக்கும் புறப்பட்டுப் போனோம். பாடசாலை நிறைவடைந்ததும் எங்கள் மோட்டார் சைக்கிளில் பயணித்திருந்தோம். வீட்டின் கதவை திறந்த போது எமக்கு பூதாகரமான பிரச்சனை ஒன்று எமக்காக காத்திருந்தது.

அன்று அந்த மடத்தனமான காரியத்தை நாம் செய்திருக்க கூடாது. துர்நாற்றத்தை போக்கவும் நான்கு பக்கமாகவும் ஓடுகளை கழட்டி விட்டிருந்தோம். மழை வராது என்ற நம்பிக்கையில் நாம் செய்த காரியம் வீடுமுழுவதும் வௌவால் எச்சங்கள் தேங்கிக் கிடந்து துர்நாற்றத்தை வீசிக் கொண்டிருந்தன. என்ன செய்வது என்று சிந்தித்துக் கொண்டிருக்கும் போதே சண்முகம் ஐயா வந்து சேர்ந்தார்.

அன்றை மழை நாளில் தான் பட்ட சிரமங்களை சொல்லி ஓய்ந்தார். சில நாட்களாக நான் இந்த வீட்டிற்கு வருவதில்லை என்பதையும் சொன்னார்.

கால்களை நிலத்தில் வைக்க முடியாமல் இருந்தது. "சேர்... இது சரிவரா அங்கேயே போவம்" மறு பேச்சின்றி நானும் சைக்கிளை திருப்புகிறேன்.

வீரார்ந்த எண்ணங்களும் முயற்சியும் இருந்ததனாலோ என்னவோ... என் மனம் முழுவதும் வௌவால் எழுந்து பறக்கத் தொடங்கியிருந்தன.

## உயிர் வாடுது....

ஒன்றாயே அனைவர்க்கும் விடிகின்றது -ஏனோ
ஒருவர்க்கு ஒருதுன்பம் படிகின்றது.
நன்றாக வரும் என்று மனம் நம்புது -ஆனால்
நரகம் தான் பலநேரம் நமை வீழ்த்துது.
கன்றாக மனம் துள்ளிப் பலநாளது -ஆச்சு.
கவலைகள் விடைகொள்ளத் தயங்கின்றது.
மன்றாடிக் கணம் நெஞ்சும் அழுகின்றது -யாரும்
வரந்தந்து அணைக்காது உயிர் வாடுது!

யார் மேய்ப்பர், யார் மீட்பர் அறியாமலே -யாரு
யமன், தெய்வம் எனக்கண்டு தெளியாமலே
வேர் நொந்து உதிர்கின்ற துணராமலே -ஆடும்
விழுதெல்லாம் உயிர் வாடல் படியாமலே
தீர்வென்ன வருமென்றும் புரியாமலே -எட்டுத்
திசை திக்கும் தெருவோரம் தவஞ்செய்யுமே!
ஊர் மீள வழிசொல்லத் தெரியாமலே -தோற்கும்
உயர் கல்வி...எதிர்காலம் இருள் சூழுதே!

எவருக்கு எதுபற்றிப் பொறுப்புள்ளது? -மக்கள்
இழிந்தோட...எவர் வென்று உயர்கின்றது?
தவிக்கின்ற முயல் கொல்லும் குணம் ஆளுது -இலாபத்
தருணத்திற் கெவர் நெஞ்சும் வலைவீசுது.
புவியேற்றும் அறம் பற்றிப் புகழ்கின்றது -தர்மம்
புரிந்தும் தம் நலத்துக்கூர் அலைகின்றது.
சவமாகிடினும் ஏங்கி மனம் வாடுது -தோன்றும்
சபலத்தில் வரலாறும் நலிகின்றது!

## கற்பனைத் தீனி

வைரங்களை ஏற்றிச் சென்ற
மூன்றாம் பிறை நிலவுப்
படகு கவிழ்ந்ததோ?
வானக் கடலெங்கும்
விண்மீன் வைரங்கள் சிதறி
மின்னிக் கொண்டிருக்கு!
முகில்களாம் சாக்குகளில்
முடிந்தவரை அவற்றை அள்ள
அலைகிறது காற்று...ஆம் மூச்சுக் காட்டாது!
வைரக் கனவுகளைக் கண்டபடி
வெறுங் கூழாங்
கற்களை அளைந்தளைந்து
கரைகிறது என்நினைவு!
கற்பனை என ஒன்றும் இல்லாட்டில்
இவ் உலகில்
சற்றேறக் குறைய முக்கால் வாசிப் பேர்கள்
ஏக்கங்கள் தீராது,



எதையும் கண்டடையாது,
தீயவற்றைச் செய்தேனும்
சுகங்களினைக் கண்டு,
அதால்
தீராக் கவலைகளில் சிதைந்து,
மனம் நலிந்து,
சாவை அணைப்பவராய்த் தாமிருப்பா
உண்மை இது!

**- த.ஜெயசீலன்**

## மலையகப் பாடல்

அந்த ஜனவரியின் அதிகாலை
கலந்து பொன்னிறத்துச் சூரியனுடன்
மலை வலைய அடிக்கே
தவழ்ந்து தவழ்ந்து வந்தது
பனிமூட்டம்

அந்த ரம்மிய மலையக நகர் இல்லாவிடத்து
நாம் ஒரு போதும்
ஒருவருக்கொருவர் சந்தித்திருக்க மாட்டோம்

பெப்ரவரியில் நாம்
பூங்கா மூலையில் பண்டைய கோட்டை சுவர் மீது
அமர்ந்திருந்தோம்
எனது நண்பர்கள் தங்களது காதலிகளைப் பற்றி
அலட்டிக் கொண்டிருந்தனர்
அவளது பதினேழாவது பிறந்த நாளுக்கான
வாழ்த்தட்டையொன்று எனது புத்தகங்களுக்கிடையில்
இருந்தது

கண்ணீர்ப் புகை, துப்பாக்கித் தோட்டாக்களால்
நாங்கள் கலைக்கப்படாதிருந்தால்
சிலவேளை நாங்கள் இன்னும் அங்கேயே இருந்திருப்போம்

மார்ச்சில் நகரம்
மரண பயத்தால் சிக்குண்டிருந்தது
நாங்கள்
கொலையாளிகளுக்கெதிராகப் போராடுவதற்கு
ஒன்றிணைந்தோம்

திடீரென வந்து குவிந்த
சிப்பாய்க் கூட்டங்களைத் தவிர
அந்த ஏப்ரலில் எமது நகருக்கு
வசந்தம் கொண்டுவரப்படவில்லை

புரன் அப்பு சிலையருகே
எமது தோழர்கள் ஒவ்வொருவராக
கொல்லப்பட்டு எரிக்கப்பட்டனர்
மே மாதப் பூக்கள் முன்னெப்போதையும்விட சிகப்பாகின

பாடசாலை இரண்டாம் தவணை விடுமுறையின்போது
அரை இறுதி சம்ஹாரம்
பாடசாலை நிலத்தில் முகாமிட்டது
பாடசாலை மூன்றாம் தவணை
ஒருநாளும் உதயமாகவில்லை

இருண்ட நவம்பர் வானின் கீழ்



நகர வீதிகள் மனித சடலங்களால் நிரம்பியிருந்தன
டிசம்பர் மாதம் எவராலேனும்
அவை அகற்றப்படாதிருப்பின்
அப் பாரிய சடல மலைகள் இன்னமும்
நகர வீதிகளிலேயே கிடந்திருக்கும்

எனது நண்பர்களும் நண்பிகளும்
சடல மலைகளுக்குள் மறைந்து
சதா சர்வகால இளமைக்குள் காணாமற் போயினர்

எந்த ஒருவராலும் அவர்கள் கொல்லப்பட்டிருக்காவிடின்
அவர்கள் இன்னமும் எம்மிடையே

வரலாற்றின் புல்டோசர்
எந்நாளும் சென்றது எங்கள் பூந்தோட்டங்கள் மீதே
இன்றவள் இல்லாமலேயே
அவளது இருபத்தி இரண்டாவது பிறந்த நாளும்
கடந்து செல்கிறது
யாரை வாழ்த்துவது?

இந்த ஜனவரியிலும் மலை வலையத்து கீழ்நோக்கி
அடித்துக் கொட்டும் பொன்னிற சூரியக் கதிர்கள்
அல்லது வெண்ணிற பனிமூட்டத்தைக் காண
அவர்கள் மீதமிருந்திருந்தால்
நான் ஒரு நாளும்
கவிதையெழுதப் போவதில்லை

-

அஜித் சீ. ஹேரத்
தமிழில் :- இப்னு அஸூமத்

கதை இல்லாக்கதைகள் - 17

# அவர் வந்திட்டார் தானே!

கொற்றை பி.கிருஷ்ணானந்தன்

அன்று ஒரு வெள்ளிக்கிழமை அது மட்டுமல்லாது செல்வச்சந்நிதி முருகனின் திருவிழாவும் கூட. இராசேந்திரம் ஐயா அந்தக்காலத்திலென்றால் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் காலையில் தவறாமல் தனது மோட்டார் சைக்கிளில் சந்நிதி முருகனிடம் போய்விட்டுத்தான் தனது தச்சுத் தொழிலுக்குப் போவது வழக்கம். ஏதும் துடக்கு வேறு இட்டிடைஞ்சல் காரணமாக அந்தக்கிழமை போக முடியாது போய் விட்டால் அவரது மனதில் சஞ்சலம் குடிகொண்டு விடும். இதை அவருடைய இல்லத்தரசி நன்கு புரிந்து வைத்திருக்கிறாள்.

இப்போது எண்பது வயதாகிவிட்ட இராசேந்திரம் ஐயாவை எழுபத்தி மூன்று வயதில் நடந்த இதய அறுவைச் சிகிச்சைக்குப் பிறகு தனியே கோவிலுக்குப் போவதைப் பிள்ளைகள் அனுமதிப்பதில்லை. விஷேச தினங்களில் ஏதும் வாகனங்களில் தாங்கள் போகும் போது அவரையும் கூட்டிக்கொண்டு போனால் தான் உண்டு.

இந்தவாரம் அவர்களது திருமணப் பொன் விழாவை வெளிநாட்டிலுள்ள அவர்களது ஆண்பிள்ளைகள் இருவரும் பணம் அனுப்ப இங்குள்ள இளைய மகனும் மகளும் மருமகனும் முன்னின்று சிறப்பாகக் கொண்டாடிய சந்தோஷமும் அவரைக் கோவிலுக்குப் போய்வரத் தூண்டியிருக்கலாம்.

இன்று வான்பிடித்து அவர்களுடைய பெறாமக்கள் போவதால் அவர்களுடன் தானும் போக வேண்டுமொன்று நேற்றையிலிருந்தே அடம் பிடித்துக் கொண்டிருந்தார் இராசேந்திரம் ஐயா. முடக்கு வாதத்தால் அறைக்குள் முடங்கிப்போயிருந்த அவரது மனைவி படுத்தபடியே சொன்னாள்.

"அவர் போய்வரட்டும். தடுக்காதையுங்கோ"

இனி எவருக்கும் இரண்டாவது கதைக்கு இடமில்லை. உரிய அனுமதி கிடைத்துவிட்டது.

மகளிடம் கேட்டு தனது சங்கிலி மோதிரங்களை வாங்கிப் போட்டுக்கொண்டார். முன்னரே ஒரு சிறிய சங்கிலியை ஊர்த்திருவிழாக் காலங்களில் அவர் அணிபவர்தான் என்றாலும் வெளிநாட்டுக்கு மகன்கள் போய் இடையில் லீவில் வந்தபோது தகப்பனுக்கு ஐந்து பவுண் சங்கிலியையும் இரண்டு பெரிய மோதிரங்களையும் அணிவித்து அழகுபார்த்து விட்டுத்தான் சென்றார்கள்.

மனைவியும் மகளும் மருமகனும் இன்று சங்கிலி மோதிரம் போடுவதைத் தவிர்க்கும்படி கூறியும் அவர் கேட்கவில்லை. பட்டு வேட்டி சால்வையுடன் சங்கிலி மோதிரங்களோடு பவிசாக வெளிக்கிட்டு விட்டார்.

ஆனால் அவர்கள் பயந்தபடியே நடந்து விட்டது. இராசேந்திரம் ஐயா ஆலயத்தில் வெளி மண்டபத்தில் நின்று கொண்டு கைகளை உயர்த்தித் தலையில் வைத்துக் கொண்டு தீபாராதனையைக் கண்டு பரவசப்பட்ட நிலையில் நிற்க கழுத்தில் ஏதோ சுடுவது போன்ற உணர்வு. திடுகிட்டவராய் கழுத்தைத் தடவிப் பார்த்தார். சங்கிலியைக் காணவில்லை. சனநெரிசலில் யார் என்று கண்டு பிடிக்க முடியவில்லை. பெறா மக்களின் உதவியுடன் நீண்ட நேரம் தேடிய பின் பொலிசில் முறைப்பாடு செய்து விட்டு வீடு வந்து சேர்ந்தார்.

சம்பவத்தை அறிந்ததும் மகன் மகள் மருமகன் யாவரும் கேள்விக்கணைகளால் அவரைத் துளைத் தெடுத்தனர்.

"அப்பவே சொன்னனாங்கள் தானே கோவிலுக்குப் போக வேண்டாமென்று"

"போனாலும் சங்கிலி மோதிரம் ஒண்டும் வேண்டாமெண்டு சொன்னாங்கள் தானே"

"போட்டுக் கொண்டு போனாலும் அவதானமாக இருக்கத் தெரியாதே"

"இந்த வயதிலும் இது தேவையோ"

பக்கத்து அறையில் படுத்துக்கொண்டு இவற்றையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த மனைவி பொல்லையும் ஊண்டிக் கொண்டு வெளியே வந்தாள்.

"அவர் ஒரு ஆபத்துமில்லாமல் வீட்டுக்கு வந்து சேர்ந்திட்டார்தானே. அது போதும். போய் உங்கட உங்கட அலுவல்களை நீங்கள் பாருங்கோ" ●

## அஞ்சலி நிகழ்வு

ஜீவநதி ஏற்பாட்டில் நாடறிந்த எழுத்தாளர் சாகித்ய ரத்னா தெணியான் நினைவுப் பகிர்வு திரு இ.இராஜேஸ்கண்ணன் தலைமையில் 2022.07.30 அன்று கொற்றாவத்தை பூமகள் சனசமூக நிலையத்தில் நடைபெற்றது. நினைவுப்பகிர்வுகளை கலாநிதி ந.ரவீந்திரன்(தெணியானின் சாதிய ஒடுக்கு முறைக்கு எதிரான படைப்புகள்), சட்டத்தரணி சோ.தேவராஜா (சமூகப் போராளி தெணியான்), திரு க. லோகநாதன் (தேவரையாளி இந்துக் கல்லூரியில் தெணியான்), திரு கொற்றை பி. கிருஷ்ணானந்தன்(தெணியானின் நாவல்கள்), திரு அ.அருளானந்தசோதி (தெணியான் என்னும் ஆசிரியர்), திரு. பரராஜசிங்கம்(தெணியானும் எமதூரும்), திரு த. அஜந்தகுமார்(தெணியானின் சிறுகதைகள்), திரு செல்லக்குட்டி கணேசன் (தெணியானும் சூரன் சிலையும்), திரு க.பரணீதரன் (தெணியானும் சிற்றிதழ்களும்) ஆகியோர் வழங்கினார்கள்.

# ஹைக்கூக்கள்

- மதுராந்தகன் -



*1.* ஒட்சிசன் கொடுக்கும் காடு
தற்கொலை
காட்டுத் தீ

*2.* முதுகில் சுமையோடு
இடப்பெயர்வு
நத்தை

*3.* நிலக்கீழ் விநியோகம்
கள்ள இணைப்பு
குருதி குடிக்கும் நுளம்பு

*4.* வாலைக் குமரிக்கு
வெண் கூந்தலோ
நீர்வீழ்ச்சி

*5.* மனித வாழ்வு
என்றும் பிரியாத்துணை
தனிமை

*6.* விடை கொடு
திரும்பி வருவேன்
நீராவி

*7.* வானளாவும் கோபுரம்
உச்சிவரை ஏணிப்படிகள்
ஆசிரியர்

*8.* தீவிர நோயில் பெற்றதாய்
உல்லாசமாகப் பிள்ளைகள்
குடிபெயர்வு

*9.* சோதனைச் சாவடியில் பெண்
பையில் எறிகணை
வாழைப் பொத்தி

*10.* கறுப்பழகி கிளியோபெற்றா
வெள்ளை அதிகாரம்
எலிஸபெத் ரெயிலர்

*11.* பாலுக்கு அழுத குழந்தை
அமைதியாகியது
எறிகணை வீழ்ந்த பின்

*12.* தேயும் பொருண்மியம்
வளரும் குப்பைமேடு
நுகர்வுப் பண்பாடு

*13.* பரந்த உப்பளம்
குவியும் எறும்புகள்
வடக்கில் படையினர்

*14.* பட்டப்பகல்
கொப்பிழக்கும் மந்திகள்
வாக்காளர்

*15.* பற்றைக்குள் நாகம்
வர்க்க மேனிலையாக்கம்
சிவன் கழுத்து நாகம்

*16.* சுதந்திர நாடு
ஜனநாயக அரசு
தணிக்கைக் குழு

*17.* விளையாடும் சிறுபிள்ளை
கையில் கத்தி
மூடனிடம் அதிகாரம்

*18.* வெஞ்சிறையில் மண்டலோ
கழிவிரக்கம்
நோபல் பரிசு

*19.* வேட்டையாளி
அரசியல் சித்தாந்தம்
போராளி

*20.* மாக்ஸிஸம்
ஒக்ரோபர் புரட்சி
லெனினிஸம்

குறுங்கதை

# இதுக்குத்தானா ஆசைப்பட்டாய்...?

ஷெல்லிதாசன்

வழக்கமாக ஞாயிற்றுக்கிழமைகளில் சந்தைக்குப் போனால், அன்று வெளியாகும்

வாரப்பத்திரிகைகள் சிலவற்றை வாங்கிவருவது எனது வழக்கம்.

அன்றும் சந்தைக்குப்போய் வரும்போது எனக்குப் பிடித்தமான இரு வாரப்பத்திரிகைகளை வாங்கிவந்தேன்.

சந்தைப் பொருட்களை இல்லாளிடம் ஒப்படைத்துவிட்டு வாங்கிவந்த பத்திரிகைகளை வாசிக்க ஆயத்தமாகி எனது அறையில் போடப் பட்டிருந்த ஈசி சியரில் அமர்ந்து ஒரு பத்திரிகையை விரித்தேன். ஆனால் வாசிப்பை தொடரமுடியாமல் வேர்த்துக்கொட்டியது.

மின்வெட்டு காரணமாக மின்விசிறி மௌனம் சாதித்தது. அதனால் ஒரு கதிரையை தூக்கியெடுத்தபடி பத்திரிகைகளுடன் வெளியே வந்த நான்,

வீட்டு முற்றத்தில் நிழலிட்டு வளர்ந்திருந்த வேப்பமரத்தின் கீழ் சென்றடைந்து கதிரையைப் போட்டு அமர்ந்துகொண்டேன்.

குளு குளு காற்று தென்றலாய் வீசிவர

அங்கிருந்தபடி எனது பத்திரிகை வாசிப்பை

கண்ணாடியை அணிந்தபடி தொடர்ந்தேன்.

அன்றைய பத்திரிகையில் எனது நண்பனொரு வனின் சிறுகதை ஒன்று வந்திருந்ததைக்கண்டு அதை வாசிப்பதில் மும்முரமாக ஈடுபட்டேன். ஆனாலும் அதனை ஒழுங்காக வாசிக்க விடமாட்டேன் என்பது போல ஒரு குட்டிச் சாத்தான் எங்கிருந்தோ தொல்லை கொடுக்கவென வந்து குதித்தது. ஆமாம் இலையானு மல்ல கொசுப்பருமனுமல்ல இரண்டுங்கெட்டான் சிறிய குருட்டிலையான்தான் அது.

நான் பத்திரிகையை வாசித்துக் கொண்டி ருக்கும் போது அது எனது கண்ணாடியூடாக உள்ளே போய் கண்ணுக்குள்ளே மொய்க்கும். பின்பு வெளியே வந்து தலையைச்சுற்றி வட்டமிட்டு அய்ங்... என சத்தமிட்டபடி பறக்கும். என்றாலும் இதையெல்லாம் பொருட்படுத்தாது சிறுகதையை தொடர்ந்து படிக்க முயன்றேன். ஆனாலுமென்ன மீண்டும் அந்தக் குட்டிச் சாத்தான் வந்து மூக்குத்துவாரத்திற்குள் நுழைந்ததால் பலமான தும்மலெடுக்க வெளியே போய் விழுந்த அது தன்னை சுதாகரித்து மீண்டும் பறந்து மறைந்தது.

தொடர்ந்தேன் வாசிப்பை. விடமாட்டேன் உன்னை என்பது போல மீண்டும் மீண்டும் கண்ணுக்குள் மூக்குக்குள் காதுக்குள்ளாக அது புகுந்து விளையாட எனக்கு இனியில்லையெண்ட கோபம் பத்திக்கொண்டு வந்தது. இனிமேலும் இந்தக் குட்டிச்சாத்தானை உயிரோடு விடப்போவதில்லையென எண்ணி அதற்காக காத்திருந்தேன். நான் எண்ணியதுபோல எனது தலையைச் சுற்றி பறந்து வந்த அது மீண்டும் கண்ணாடி யுள்ளாக உட்புகுந்து சித்துவிளையாட்டுச்செய்ய முயன்ற வேளை படாரென இருகைகளையும் சேர்த்து அதை அடித்ததேன். அந்தக் குருட்டு இலையான் அதையெல்லாம் உச்சி தப்பிக்கெண்டது. இறுதியான சந்தர்ப்பம்.

இனி அதன் கதையை எப்படியும் முடிக்க வேண்டும் என்ற ஓர்மத்தில் மீண்டும் நான் காத்திருந்த வேளை அதுவும் விர் என பறந்தோடி வந்து எனது மூக்குத்துவாரத்துக்குள் நுழைய ஆயத்தமாக எனது இருகைகளையும் மிக அவதானமாக எடுத்து படாரென பலமான ஒரு அடி... வெற்றி...

நான் அடித்த அடியில் தூரப்போய் நிலத்தில் விழுந்த அது தனது கால்களை மேல்நோக்கி பிடித்தபடி உரசி உரசிக்கொண்டிருந்தது. உடனடியாக அதை காலால் மிதித்துக் கொன்றுவிட எண்ணினேன். காந்தித் தாத்தா அத்தருணம் வந்து எனது காலைப்பிடித்திழுத்து தடுதாட்கொண்டதுபோல ஓர் உள்ளுணர்வு என்னைத் தடுக்க, அந்த எண்ணத்தைக் கைவிட்டேன். நான் அடித்த அடியால் அந்தக் குட்டிச் சாத்தான் மாத்திர மல்ல எனது மூக்குக்கண்ணாடியும் தூரத்தே போய் விழுந்ததை அறிந்த நான் பதை பதைத்தபடி மூக்குக் கண்ணாடியை அவசரமாக தேடி எடுக்க விரைந்தேன். விரைந்த எனக்கு எனது கண்ணாடியின் கோலத்தைக் கண்டு தலைவிறைத்தது. நான் அடித்த பலமான அடியில் அகப்பட்டுப் பறந்த கண்ணாடி ஒரு கல்லில் மேதி இரண்டு துண்டுகளாக சிதறிக் கிடந்தது.

சென்ற மாதந்தான் பதினாறாயிரத்தை விழுங்கி ஏப்பமிட வாங்கியெடுத்த புதிய கண்ணாடி அது... அதைப்பார்த்த எனக்கு ஆத்திரம் மேலிட சடாரென திரும்பி அதற்குக்காரணமாக குட்டிச்சாத்தானை துவம்சம் செய்ய மீண்டும் விரைந்தேன். ஆனால் அதற்கிடையில் அந்தச்சாத்தான் புரண்டு கால்களை நிலத்தில் பதித்து மீண்டெழுந்து தான் வந்த வேலை முடிந்ததுபோன்ற ஒரு வெற்றிக்களிப்பில் சிறிய இறக்கை களை விரித்து எனது தலையை மீண்டுமொருமுறை ஒரு சுற்றுச்சுற்றி விர் என பறந்தோடி மறைந்தது.

(இந்தக் குட்டிச்சாத்தானின் தொல்லை
உங்களுக்கும் ஏற்பட்டிருக்கலாம்)




இச் சஞ்சிகை அல்வாய் கலையகம் வெளியீட்டு உரிமையாளர் கலாநிதி த. கலாமணி அவர்களால் மதி கலர்ஸ் நிறுவனத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.